# CHALUKYA VIKRAMADITYA VI.

(IN TAMIL)

664

8-NOV 1930

BY

**A. V. VENKATARAMA AYYAR,** M.A., L.T.,
Lecturer in History, Madras Educational Service.

PUBLISHED BY
A. GANAPATHI AYYAR.

THE B. N. PRESS, MOUNT ROAD, MADRAS.

ved] 1930 [Price Rupee One.

TB
031,6
M30.
18049l

உ

சளுக்கிய

# விக்கிரமாதித்தன் சரித்திரம்.

சரித்திரபோதகாசிரியராகிய

அ. வா. வேங்கடராம ஐயர், M. A, L. T.,

அவர்களால் எழுதப்பெற்று,

அ. கணபதி ஐயரால்

பதிப்பிக்கப்பட்டது.

இரண்டாம் பதிப்பு.

All Rights Reserved.] 1930 [விலை ரூபா, 1.

*IN SACRED MEMORY OF*
*MY PARENTS*

180491
600 008

உ

# முகவுரை.

8 NOV 1930
MADRAS

நமது நாட்டில் சரித்திர விஷயமாக எழுதப்பட்ட நூல்கள் சிலவேயாகும். அவற்றுள்ளும் தேச பாஷைகளில் வெளிவந்தவை மிகச் சில. ஆதலால் அக்குறையை ஒருவாறு நீக்க, இதுகாறும் வெளி வந்த சாசனங்களையும் நூல்களையும் ஆதாரமாகக்கொண்டு நான் இச்சிறு நூலை எழுதத் துணிந்தேன். இதிற் பின் சளுக்கிய சந்ததியிற் பிரசித்தி பெற்ற விக்கிரமாதித்தனைத் தலைவனாகக் கொண்டு அப்பரம்பரையாரின் சரிதமும் நாகரிகமும் ஆங்காங்கு ஆதாரங்களுடன் விவரிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு வமிசத்திலும் பிரபலமான ஒருவனை நடுநாயகமாக வைத்து, முன்பின் வர்த்தமானங்களையும் காலநிலைமையையும் ஒழுங்குபடச் சேர்த்து தக்க ஆதாரங்களுடன் ஆராய்ச்சி நூல்கள் பல எழுதப்படின், நமது தேசத்தின் உண்மையான சரித்திரம் நாளடைவில் ஏற்பட அனுகூலமாகு மென்பது என் கருத்து.

இந்திய சரித்திர ஆராய்ச்சி விஷயத்திற் போதிய ஆதார மின்மையால் அபிப்பிராய பேதங்களுக்கு இடமுண்டு. ஆகையால் முன்னோர் கொள்கைகளில் சிற்சில மாறுபாடடைந்து இந்நூலிற் காணப்படும். "பழையன கழிதலும் புதியன புகுதலும்' ஆராய்ச்சியின் இயல்பன்றோ? ஆயினும் என் அபிப்பிராயங்கள் யாவருக்கும் எக்காலத்தும் ஒப்பமுடிந்தவை என்று சாதிக்க வந்தவனல்லேன். ஆகையால்,

" குணநாடிக் குற்றமு நாடி யவற்றுண்
மிகைநாடி மிக்ககொளல்" கற்றறிந்தார் கடனாகும்.

மயிலாப்பூர்
1930 அக்டோபர்

அ. வா. வேங்கடராம ஐயர்.

# பொருளடக்கம்.

## முதல் அத்தியாயம்.

### விக்கிரமாதித்தனுடைய முன்னோர்கள்.

சளுக்கியரின் பெயர். சளுக்கியரின் பெயர்க்காரணமும் புராதன வரலாறுகளும். சளுக்கியரின் குலம். சளுக்கியரது ஆதி யிருப்பிடம். முன் சளுக்கியர். ராஷ்டிரகூடர். பின் சளுக்கியர். முன்பின் சளுக்கியரின் சம்பந்தம். கி. பி. பதினொன்றாம் நூற்றாண்டில் தக்ஷிணத்தின் நிலைமை. தைலபன். சத்தியாசிரயன். ஐந்தாம் விக்கிரமாதித்தன். ஐயணன். ஜயசிங்கன். ஆகவமல்லனென்னும் முதலாம் சோமேசுவரன்.

## இரண்டாம் அத்தியாய.

### விக்கிரமாதித்தனது இளமையும் போர்த்திறமும்.

விக்கிரமாதித்தனது பிறப்பு. சோமேசுவரன் இளவரசாதல். தந்தைக்குத் துணையாக விக்கிரமாதித்தன் காட்டிய போர்த்திறம். முதன்முறை சோழருக்கும் சளுக்கியருக்கும் நடந்த போர். மாளவ அரசனுக்குச் செய்த உதவி. கௌட காமரூபங்களுக்குச் சென்றது. இரண்டாவது சோழ சளுக்கியப் போர். கூடல்சங்கமப்போர். வேங்கி விஷயமாய் தலையிட்டுக் கொண்டது.

## மூன்றாம் அத்தியாயம்.

### இரண்டாம் சோமேசுவரனது அரசாட்சியும் விக்கிரமாதித்தனும்.

இரண்டாம் சோமேசுவரன் முடி சூடியது. விக்கிரமாதித்தன் இளவரசானது. சோமேசுவரன் நெறி தவறி நடந்தது. விக்கிரமாதித்தன் சோழரோடு உறவாடினது. துங்கபத்திரைச் சண்டையும் சோமேசுவரன் அரசிழந்ததும். விக்கிரமாதித்தன் தமையனை வஞ்சித்தவனல்லன்.

## நான்காம் அத்தியாயம்.

### விக்கிரமாதித்தன் அரசாட்சி.

சளுக்கிய விக்கிரம சகாப்தம். விக்கிரமாதித்தன் பட்டாபிஷேக காலநிர்ணயம். சந்திரலேகாவின் சுயம்வரம். விக்கிரமாதித்தன் மனைவியரும் மக்களும். அவன் காலத்திய போர்களும் கலகங்களும். அவன் ராஜ்யத்தின் விஸ்தீரணமும் சிற்றரசர்களும். குடிகளின் விசுவாசம். விக்கிரமாதித்தன் மதக்கோட்பாடு. வித்துவான்களை ஆதரித்தது. விக்கிரமாதித்தனுடைய இளமையும் முதுமையும். விக்கிரமாதித்தனது ஒப்புயர்வற்ற சிறப்பு.

## ஐந்தாம் அத்தியாயம்.

### பின்சளுக்கியர் காலத்தில் தக்ஷிணத்தின் நிலைமை.

#### i. அரசியல்.

மகாராஜன். ஆலோசனை சபை. யுவராஜன். இராணுவம். யுத்த தருமம். சளுக்கிய ராஜ்யத்தின் பிரிவுகளும் அதிகாரிகளும். கிராம விசாரணை.

#### ii. பொருளியல்.

விளைபொருள்கள். இறக்குமதி. நாணயங்கள். வீட்டுச் சாமான்கள். வர்த்தகக் கூட்டங்கள். வாணிக மேம்பாடு. வட்டி.

#### iii. மதக்கோட்பாடு.

சளுக்கியர் குலதேவதை. மதவேறுபாடுகள். மதவிரோதமில்லாமை. ஆசாரங்கள். தானங்கள். கோயில்களின் அமைப்பு.

#### iv. குடியியல்.

சளுக்கியரின் குணவிசேஷங்கள். பெண்டிர். அரசரின் பொழுதுபோக்கு. அரசியரின் சிறப்பு. ஜீவகாருண்யம். உற்சவாதிகள். கல்வி மேம்பாடு.

## அநுபந்தங்கள் மூன்று.

## படம் ஒன்று.

# சளுக்கிய விக்கிரமாதித்தன் சரித்திரம்.

## முதல் அத்தியாயம்.

### விக்கிரமாதித்தனுடைய முன்னோர்கள்.

சளுக்கியரின் பெயர்.

சளுக்கியரென்பவர் சாளுக்கியர், சௌளுக்கியர், சுளுக்கியர், சளுக்கர், சலிக்கியர், சல்கியர், சோலங்கி, சோலகி என்று பலவிதமாக நூல்களிலும் சாசனங்களிலும் கூறப்படுகின்றனர்.

சளுக்கியரின் பெயர்க்காரணமும் புராதன வரலாறுகளும்.

ஒரு சமயம் பிரமதேவர் சந்தியாவந்தனஞ் செய்து கொண்டிருக்கையில், தேவேந்திரன் அவரிடம் வந்து பூலோகத்தில் பாவம் அதிகரித்து வருவதால் துஷ்ட நிக்கிரகம் செய்ய, தகுந்த ஒரு வீரனைச் சிருஷ்டிக்கும்படி அவரைப் பிரார்த்திக்க, அவர் அப்போது தம் சுளுகத்தை (ஆசமனத்துக்காகக் குவித்த உள்ளங்கையை) நோக்க, அதிலிருந்து சளுகன் என்ற வீரனுண்டானனென்றும், அவனுடைய பரம்பரையாருக்குச் சௌளுக்கியர் அல்லது சளுக்கியர் என்ற பெயர் வழங்கலாயிற்றென்றும் விக்கிரமாங்கதேவசரிதத்தில்[1] பில்ஹணர் கூறுகிறார். ஹந்தர்க்கே சாசனத்திலும்[2] இவ்வரலாறே காணப்படுகிறது. அவைகளுக்குச் சற்று மாறுபாடாக, ஹேஹய என்னும் கலசூரிகுலத்தைச் சார்ந்த இரண்டாவது யுவராஜனது சாசனத்தில்[3], துரோணசாரியார் தம்மைப் பாஞ்சாலதேசத்து அரசனாகிய துருபதன் அவமதிக்க, அவனைச் சபித்தபோது அவருடைய சுளுகத்திலிருந்து சளுக்கியர் உற்பத்தியாயினரென்று சொல்லப்பட்டிருக்கிறது. மற்றோரிடத்தில்[4] இவர்கள் வடதேசத்துமுனிவர் ஹாரீதிபஞ்சசிகரது சுளுகத்திலிருந்து தோன்றினவராகக் கூறப்பட்டிருக்கிறார்கள். இவ்வேறுபாடான வரலாறு

1. விக். சரி. அத். 1. சு. 31-56.
2. J. R. A. S. IV. 8.
3. Epi. Ind. I. 257.
4. Ind. Ant. VII. 74; Bom. Gaz. IV. 339.

களால் 'சுளுகம்' என்னும் பதத்தைக்கொண்டே சளுக்கியரின் பெயர்க் காரணம் கற்பிக்கப்பட்டதென்பது தோன்றுகிறதேயன்றி, சரித ஆராய்ச்சி முறையில் யாதொன்றும் விளக்கமாகவில்லை.

**சளுக்கியரின் குலம்.**

தங்களுடைய மெய்க்கீர்த்திகளில்[1] சளுக்கியர் தங்களைச் சந்திர குலத்தினரென்றும், ஹாரீதிபுத்திரரென்றும், மானவியகோத்திரத்தாரென்றும், சத்தியாசிரய குலதிலகரென்றும் சொல்லுகின்றனர். சந்த் பர்தாயின் (Chand Bardai) 'பிருதிவி ராஜராஸா'[2] என்னும் நூலில் அவர்கள் அக்கினிகுலத்தினரென்று சொல்லப்பட்டிருக்கின்றனர். ஆனால் சாசனங்களிலும் வேறுபல நூல்களிலும் இவ்வாறு சொல்லப்பட்டிராமையாலும் இதற்குப் போதுமான ஆதாரம் காட்டப்படாமையாலும் இக்கொள்கையைத் துணிந்துரைக்க இடமில்லை[3].

சளுக்கியர் வேள்குலத்தவரென்பது மு. இராகவையங்காரது[4] அபிப்பிராயம். அதற்கு அவர் கூறும் முக்கிய ஆதாரங்களாவன: 'தார காரியுஞ் சளுக்கியர் வேந்தனும் வேனி லாளனும் வேளென லாகும்' என்னும் பிங்கலந்தையும், 'வேள்புல அரசர் சளுக்கு வேந்தர்', 'கேழல் வேள்புல வரசர் கொடியே' என்னும் திவாகரமும், 'வேள் குலத்தரசர்', 'வேள்குலச் சளுக்கியர்' என்னும் பிற்காலத்துச் சோழசாசனங்களுமேயாம்[5]. மேலும் வேள் என்ற சொல்லடியாக வழங்கிவரும் வேளாளர் என்னும் குலப்பெயரும், வேள்புலம், வேளூர், வேளூரகம், வேளாபுரம், வேளகம், வேள்பட்டி முதலிய ஊர்ப்பெயர்களும் இதனையே வலியுறுத்துமென்பர்[6]. தமிழ் நாட்டில் வேளிர் என்பார் குறுநிலமன்னராயிருந்தனரென்பது யாவர்க்கும் ஒப்பமுடிந்தது. இவர்கள் வேளிர் என வழங்கப்பட்டதற்குக் காரணங்கள் முடியுடை வேந்தரது விருப்பத்துக்கு உரியவராயிருந்தனரென்பதும், யாகசமயத்திற்

1. Hemachandra's Dwasraya Kosha ; Jinaharshana's Vastupalacharita; கதக்சாசனம், Ind. Ant. XXI. 167 ; கொருமல்லிசாசனம். Ind. Ant. XIV. 50-55.
2. Tod's Rajasthan; Ojha's History of the Solankis.
3. Ind. Ant. XL. 25.
4. வேளிர்வரலாறு, 9.
5. S. I I. III. Nos. 28, 73.
6. வேளிர் வரலாறு, 14.

றேன்றினரென்பதும், நிலத்தை உழுது பயிரிட்டுவந்தனரென்பதும், ஏனையோர்க்கு அன்னமளித்துப்புரக்கும் அரிய வுபகாரச் செயலுடையரென்பதும் முதலாய பலவகையினவாகக் கூறப்படுகின்றன [1]. ஆனால் இவைகளெல்லாம் வேளென்னும் பதத்திற்கு அகராதியிற் காணப்படும் பல பொருள்களைக்கொண்டு வேளிருக்கு வரலாறு கற்பிக்கப்படுவதேயன்றிச் சரித்திர சம்மதமானவை என்று அங்கீகரிக்க இடமில்லை. இனி, புறநானூறு 201-ம் செய்யுளில் 'வடபான் முனிவன் தடவினுட் டோன்றி.........நாற்பத் தொன்பது வழிமுறை வந்த வேளிருள் வேளே' என்று இருங்கோவேள் சொல்லப்பட்டிருக்கிறான். இங்கே 'வடபான் முனிவன் தடவினுட்டோன்றி' என்பதற்கு, புறநானூற்று உரையாசிரியர் 'கதையுரைப்பிற்பெருகும்; அது கேட்டுணர்க' என்றெழுதி, 'தடவு' என்பதற்கு ஓமகுண்டமென்று பொருள்கூறியிருக்கிறார். இதை அங்கீகரிப்போமாயின் சளுக்கியர் அக்கினிகுலத்தவரென்பதே யுசிதமாகும். ஆனால் அவ்வாறு துணிதற்கிடமில்லையென்று மேலே கூறியுள்ளோம். யாக (வேள்வி) சமயத்தில் தோன்றினரென்னும் கதைகளுக்கியைய, 'தடவு' என்பதற்கு யாகபாத்திரம் என்று பொருள் கூறுவதே பொருந்துமென்று மு. இராகவையங்கார் [2] அபிப்பிராயப்படுகின்றார். ஆனால், 'தடவு' என்பதற்கு, 'தடவென் கிளவி கோட்டமுஞ் செய்யும்' என்னும் தொல்காப்பியச் சூத்திரப்படி [3], (வடமொழியில் சுளுகமென்று குறிக்கப்பட்ட) குவிந்த உள்ளங்கை என்றே பொருள் கொள்ளுதல் மேற்கூறிய பல புராதன வரலாறுகளுடன் ஒப்பமுடிவதாகும்.

சளுக்கியர் கூஜர் குலத்தைச் சார்ந்தவரென்று தே. ரா. பண்டாரகர் [4]. (D. R. Bhandarkar) அபிப்பிராயப்படுகிறார். இவர்கள் வெளிநாட்டிலிருந்துவந்து குடியேறினதனாலேயே அதுவரையில் லாட என்று வழங்கிவந்த நாடானது கூஜர்ராஷ்டிரம் (குஜராட்) என மாறிற்றென்பர். ஆனால் இதற்குச் சாசனமூலமான ஆதாரம் ஒன்றுமில்லையென்று அவரே ஒப்புக்கொள்ளுவதனாலும் லாட என்னும்

1. ந. மு. வேங்கடசாமி நாட்டாரின் வேளிர்வரலாற்றின் ஆராய்ச்சி, 20, 21, 27.

2. வேளிர் வரலாறு, 12.

3. சொல்லதிகாரம், உரிச்சொல்லியல், 23.

4. Ind. Ant. XL. 24 - 44.

பெயர் கூர்ஜரத்தின் ஒரு பாகத்திற்கு அவர் குடியேறின பின்பும் வழங்கிவந்தமையாலும், இதை அங்கீகரிப்பது கூடாததாகும். மேலும் குஜராட் என்னும் நாட்டின் பெயரைக்கொண்டே அதிற் குடியேறின வர்களின் குலத்தை நிர்ணயிப்பது சரியல்ல.

**சளுக்கியரது ஆதி இருப்பிடம்.**

சளுக்கியர் ஆதியில் குடியேறினது சவலாக் (ஒன்றேகால் இலக்ஷம்) பர்வதத்தைச் சார்ந்த சபாதலக்ஷத்துத் தலைநகராகிய அஹிச்சத்திரமென்று தே. ரா. பண்டாரகர்[1] சாசன ஆதாரங்களைக் கொண்டு நிரூபித்திருக்கிறார். முதலில் அரசாளத் தொடங்கியது அயோத்தியிலென்றும் இதரதேசங்களை ஜயிக்கவேண்டித் தெற்கே வந்தனரென்றும் பில்ஹணர்[2] சொல்லுகிறார். அயோத்தியில் ஐம்பத்தொன்பதின்மர் ஆண்டனரென்றும், பின்னர் பதினறு அரசர் அயோத்திக்குத் தென்தேசமாகிய கங்காதீரத்தையும் சேர்த்து ஆண்டனரென்றும் மிரஜ்[3] கௌதம்[4] ஏவூர்[5] சாசனங்கள் விரிவாகக் கூறுகின்றன. ஆகையால் சளுக்கியர் வடதேசத்திலிருந்து தெற்கு நோக்கி வந்தனரென்று தோன்றுகிறது.

**முன் சளுக்கியர். (கி. பி. 550-753)**

சளுக்கியரில் முதலிற் கீர்த்திபெற்று விளங்கினவன் சத்தியாசிரய ஸ்ரீபுளகேசி வல்லப மகாராஜன். அவன் நருமதையைக்கடந்து வாதாபி (நிஜாம் ராஜ்யத்து பாதாமி) புரத்தை ராஜதானியாக்கிக்கொண்டான். அவனுடைய பேரனுகிய இரண்டாம்புளகேசியின் காலத்தில் (கி. பி. 609-642) இக்குலம் உயர்ந்தோங்கி விளங்கிற்று. இவன் தென்தேசத்தில் பல்லவர்களின் பலத்தை ஒடுக்கி, அசுவமேதம் செய்து துங்கபத்திரை நதி தொடங்கி வடக்கே நருமதைக்கரை வரையில் ஏகசக்கராதிபதியாக விளங்கினன். இப்பரம்பரையரசர் களில் இவனே ஒப்புயர்வற்றவன். சீனதேசத்து யாத்திரிகராகிய யுவான் சுவாங் (Yuan Chwang) என்பவரும் சளுக்கியரின் பராக்

---

1. Ind. Ant. XL. 24 - 44.
2. விக். சரி. I. 63-65.
3. Ind. Ant. VIII. 18.
4. Ind. Ant. XVI. 23.
5. Ind. Ant. VIII. 15.

கிரமத்தை மெச்சியிருப்பதோடு, நருமதைக்கப்பால் வடஇந்தியாவில் கன்யாகுப்ஜத்தை (கனோஜை) ராஜதானியாகக்கொண்டு ஏகசக்ராதிபதியாக விளங்கின சீலாதித்தன் என்னும் ஹர்ஷவர்த்தனனை, தென்னாட்டிற்கு வரவிடாமல் புளகேசி தடுத்துவிட்டதாகவும் சொல்லியிருக்கிறார். இப்புளகேசியின் காலத்திலேயே இவன் தம்பியாகிய குப்ஜ விஷ்ணுவர்த்தனன் கோதாவரி கிருஷ்ணாநதிதீரமாகிய வேங்கி நாட்டின்மேற் படையெடுத்துச் சென்று அதனை ஜயித்து, கீழைச் சளுக்கிய நாடொன்றை ஏற்படுத்தினான். இதற்கு ஒரு நூற்றாண்டுக்குப் பின்னர், சற்றேறக்குறைய கி. பி. 753-ல் இரண்டாம் கீர்த்திவர்மன் ராஷ்டிரகூட குலத்தைச் சேர்ந்த தந்திதுர்க்கனால் தோல்வியடைய, சளுக்கியகுலம் பலக்குறைவுற்றது.

**ராஷ்டிரகூடர்.**
**(கி. பி. 753-973)**

அதுமுதல் கி. பி. 973 வரையில், இரண்டு நூற்றாண்டுகளுக்கு அதிகமாக, ராஷ்டிரகூடர்கள் தக்ஷிணத்தில் பிரதான அரசர்களாக இருந்தார்கள். அப்போது சளுக்கியர் பலகிளையினராகப்பிரிந்து ராஷ்டிரகூடர்களின் ஆட்சியின் கீழ்ச் சிற்றரசர்களாக இருந்தார்கள் [1].

**பின்சளுக்கியர்.**
**(கி. பி. 973-1190)**

ராஷ்டிரகூட அரசனாகிய கொட்டிகனது நாளில், பரமாரகுலத்து மாளவதேசத்தரசனாகிய சீயகன் என்னும் ஸ்ரீ ஹர்ஷன் கி. பி. 972-ல் தக்ஷிணதேசத்தரசர்களைத் தாக்கித் தலைநகராகிய மானியகேடத்தையும் (நிஜாம்ராஜ்யத்து மால்கேடையும்) கொள்ளையடித்தான் [2]. கொட்டிகனுக்கு மருமகனாகிய கர்க்கரனது காலத்தில் அதுவரையிற் சிற்றரசராயிருந்த சளுக்கியரின் தலைவனாகிய தைலபன் இதுதான் தக்க சமயமென்று கருதி, சற்றேறக்குறைய கி. பி. 973-ல் கர்க்கரனையும் ரணஸ்தம்பனையும் [3] வென்று ராஷ்டிரகூடகுலத்து ஜாகவ்வா என்ப

---

1. Ind. Ant. XII. 11; Ind. Ant. XL. 41; Epi. Car. XI. Cl. 15; Epi. Report. 1904.

2. உதயபுரசாசனம், Epi. Ind. I. 235.

3. 'ரணஸ்தம்ப' என்னும் பதத்திற்கு ஓரிடமென்று டாக்டர் எலியட்டும் (Dr. Elliot) ஜயஸ்தம்பம் என்று டாக்டர் பிளீட்டும் (Dr. Fleet) பொருள் கொள்ளுகின்றனர். இவை தவறு. அது, கர்க்கரன் உறவினனாகிய ஒருவன் பெயராகவே இருத்தல் வேண்டும். Cf ரணராகன். ரணரவிகன். மிரஜ், கௌதம், ஏவூர் சாசனங்களின் சுலோகம் பார்க்க.

வளை மணம்புரிந்து சளுக்கியகுலத்தின் கீர்த்தியை மறுபடியும் நிலை நாட்டினன்[1]. இவனும் இவன் பரம்பரையாரும் பின்சளுக்கியரெனப் படுவர்.

முன் பின் சளுக்கியரின் சம்பந்தம்.

இவர் சளுக்கியகுலத்தைச் சேர்ந்தவரேயாயினும் முன்சளுக்கியரின் நேரான மரபினரல்லரென்றும், வேறொரு சிறு கிளையினர் என்றும் ரா. கோ. பண்டாரகர் (R. G. Bhandarkar) அபிப்பிராயப்படுகிறார்[2]. ஆனால் இதற்கென்று அவர் கூறிய இருகாரணங்களும் பொருந்தாவாம். அவர் கூறும் முதற்காரணம்:—'முன்சளுக்கியர் தங்களை ஹாரீதிபுத்திரரென்றும் மானவிய கோத்திரத்தாரென்றும் சொல்லிக் கொள்ள, பின்சளுக்கியரோ தங்களைச் சத்தியாசிரய குலத்தவரென்று சொல்லிக்கொள்ளுகின்றனர்' என்பதாம். இஃது ஒவ்வாது: ஏனெனில், முன் சளுக்கியரில் ஏறக்குறைய எல்லா அரசர்களுக்கும் சத்தியாசிரயன் என்ற பிருது வழங்கி வந்திருக்கிறது[3]. மேலும் பின் சளுக்கியரும் தங்களை ஹாரீதிபுத்திரரென்றும் மானவியகோத்திரத்தாரென்றும் சொல்லி வந்தனரென்பது மிரஜ், கௌதம், ஏவூர்சாசனங்களால் நன்கு வெளியாகிறது. ஆகையால் ஹாரீதிவமிசமும் சத்தியாசிரயகுலமும் ஒரேசந்ததியாக இருத்தல் வேண்டுமென்பது ஊகிக்கக் கிடக்கின்றது. கன்னட ரன்னகவியின் சளுக்கிய வமிசாவளியிலிருந்து[4] முன்சளுக்கியருக்குச் சத்தியாசிரயன் என்ற ஒரு மூலபுருஷனிருந்ததாகவும் தைலபன் அவனுடைய சந்ததியான் என்றும் வெளியாவதால் இதைத் துணிந்துரைக்கவும் இடமுண்டு. மேலும் இச்சத்தியாசிரயனே அயோத்தியில் ஆண்டானென்றும், அவனே ஹாரீதிபுத்திரனென்றும், அதுபற்றியே அவன் மரபினர்க்குச் சத்தியாசிரயகுல திலகரெனப் பெயர் வழங்கலாயிற்றென்றும் இட்டகி சாசனத்தால்[5]

---

1. குண்டூர் சாசனம், Ind. Ant. XII. 270 - 271 ; கதக்சாசனம், Ind. Ant. XXI. 167 - 168 ; ஏவூர்சாசனம், Ind. Ant. XIII. 15 ; கௌதம் சாசனம், Ind. And. XVI. 23 ; J. R. A. S. IV. 12.

2. Early Hist. of the Dekkan, 44, 58.

3. Bom. Gaz. Part. II. Ch. II.

4. Ind. Ant. XL. 43-44.

5. Epi. Ind. XIII. No. verse. 21 ; இங்குக் குறிக்கப்பட்ட சத்தியாசிரயன் டாக்டர் பார்னெட் (Dr Barnett) நினைக்குமாறு புளகேசியாகான்.

நன்கு விளங்குகிறது. பின் சந்ததியாரின் 'மல்ல' பிருது முன்சந்ததியார் பெயர்வரிசையில் காணப்படவில்லை என்னும் பண்டாரகரது இரண்டாம் வாதமும் பொருந்தாது; ஏனெனில் முன்சளுக்கியருள்ளும் விக்கிரமாதித்தன் விஜயாதித்தன் என்ற இருவருக்கும் முறையே ராஜமல்லன் யுத்தமல்லன் என்னும் பிருதுகள் உள. இம்மல்ல பிருதே பின்னிட்டு விசேஷித்து வழங்கலாயிற்று. மேலும் இவ்விருவகையாருக்கும் மகாராஜாதிராஜன், பரமேசுவரன், பட்டாரகன், பரமபட்டாரகன் பிருதிவீவல்லபன் என்னும் அநேக வேறு பிருதுகள் பொதுவாக வழங்கிவந்திருக்கின்றன. ஆகையால் பிருதுகளின் ஒற்றுமை வேற்றுமைகளைக் கொண்டே குலங்களின் தொடர்ச்சியையோ தொடர்ச்சி இன்மையையோ நிச்சயிப்பது சரியல்ல. மேற்கூறியபடி முன் பின் சளுக்கியரனைவரும் ஒரேகுலத்தினரென்று கொள்ளுவதே உசிதமாம்[2].

**கி - பி. பதினொன்றும் நூற்றண்டில் தக்ஷிணத்தின்நிலமை**

இனி, கி. பி. பதினொன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தக்ஷிண தேசங்கள் இருந்த நிலைமையைக் கூறுவாம். மாளவதேசத்துப் பரமாரகுலத்து ஸ்ரீஹர்ஷ ராஜனால் ராஷ்டிரகூடருடைய ராஜ்யம் நிலைகுலைய, தைலபனை முன்னிட்ட சளுக்கியர் ஓங்கினர். துங்கபத்திரைக்குத் தெற்கே பல்லவராஜ்யம் அழிய, சோழர்கள் மேம்பட்டு மைசூரின் ஒரு பாகமாகிய கங்கநாட்டின் ஒரு பகுதியைக் கைக்கொண்டு,வடக்கே அரசனின்றி ஆதரவற்றுக் கிடந்த வேங்கி நாட்டிலும் பிரவேசித்தார்கள். பின்சளுக்கியருக்கு முக்கியமான எதிரிகள் வடக்கில் பரமார அரசர்களும் தெற்கில் சோழர்களுமேயாவர்.

**தைலபன் கி. பி. 978 - 997**

நிஜபுஜசக்கரவர்த்தி என்றும், கரஹட கொங்கண பயங்கரனென்றும், ராஷ்டிரகூடருக்கு விஷம்போன்றவனென்றும், கூர்ஜாருக்கு ஜுரம்போன்றவனென்றும், மாளவதேசத்தரசனுக்குக் காலாக்கினியென்றும் தைலபன் சொல்லப்பட்டிருக்கிறான்[3]. ஆனால் அவன் ஆறுமுறை போர்க்களத்தில் மாளவதேசத்தரனாகிய வாக்பதிமுஞ்சனால்

1. Bom. Gaz. Part. IV. II.
2. Ind. Ant. XL. 24-44.
3. Ind. Ant. XL. 44. ரன்னகவியின் சளுக்கியவமிசாவளி.

தோல்வியடைந்தானென்பது வேறுசில ஆதாரங்களால்[1] வெளியாகிறது. கடைசியாக முஞ்சன் கோதாவரியைக் கடந்து தைலபன் ராஜ்யத்திற் பிரவேசித்தபோது சிறைபிடிக்கப்பட்டு, கி. பி. 993-997-ல்[2] கொல்லப்பட்டான்[3]. முஞ்சனுக்குப் பிறகு மாளவதேசம் அவன் தம்பி[4] சிந்துராஜனால் ஆளப்பட்டுவந்தது. அவன் வெகுநாள் ஆண்டதாகத் தெரியவில்லை. அவன் மகனாகிய போஜன் என்பான் தன் பெரிய தகப்பனாகிய முஞ்சனுக்குத் தைலபனால் நேர்ந்த விபத்தை நினைந்து, பழிக்குப்பழி வாங்கவேண்டுமென்று நிச்சயித்து, தைலபனைப் பிடித்து மானக்கேடு செய்து கடைசியில் அவனைக் கொன்றுவிட்டதாகவும் போஜசரிதம் கூறுகிறது. சாசனங்களிலோ[5] போஜன் இதர அரசர்களைத் துணைக்கொண்டு கர்நாடரைத்தாக்கி,கொங்கணத்தை ஜயித்ததாகச் சொல்லப்படுகிறது. கி.பி. 1055-வருஷத்திய மாந்தாதா சாசனத்தில்[6] போஜனது திருவடியைத் தியானித்துக் கொண்டிருப்பதாகப் பரமார ஜயசிங்கன் சொல்லிக் கொள்ளுகிறான். காலஞ்சென்ற அரசர்களின் திருவடியைத் தியானிப்பதாகச் சொல்லிக்கொள்ளுவது அக்குலத்தரசரின் வழக்கம். ஆகையால் போஜன்[1] கி. பி. 1055க்கு

---

1. மேருதுங்கனது பிரபந்தசிந்தாமணி; Ind. Ant. XXXVI. 169; Epi. Ind. I. 223; Bom. Gaz. IV. 432; V. A. Smith's Early History of India, 395.

2. ஜைனசாது அமிதகதி. கி. பி. 993-ல் சுபாஷித ரத்ந சந்தோஹா என்னும் நூலை எழுதினர். அதில் அப்போது மாளவத்தை முஞ்சன் ஆண்டுவந்ததாகச் சொல்லியிருக்கிறார்.

3. போஜசரித்திரம்; J. R. A. S. IV. 12; கதக்சாசனம், Ind. Ant. XXI. 168; Epi. Ind. II. 218; Bom. Gaz. IV. 430.

4. மாளவதேசத்தரசரின் பரம்பரை வரிசை, போஜசரிதத்தில் தவறாகச் சொல்லப்பட்டிருக்கிறது. முஞ்சன் சிந்துராஜனது தமையனே அன்றித் தம்பியல்லன். அவனுக்கு முன் மாளவத்தை ஆண்டவன். இவ்விஷயமாக முஞ்ச போஜசாசனங்களையும் (Ind. Ant. VI. 14), நாகப்பூர் பிரசஸ்தியும் (Epi. Ind. II), பத்மகுப்தனது நவசாஹஸாங்க சரித்திரத்தையும், (Ind. Ant. XXV) பார்க்க. முஞ்சன் தமையன் சிந்துராஜனது மகனாகிய போஜனைக் கொன்று ராஜ்யத்தையடைய விரும்பினான் என்பது ஆதாரமில்லாத ஒரு பொய்க்கதையே யாகும்.

5. உதயபூர் பிரசஸ்தி, Epi. Ind. I. 223-230; பான்ஸ்வாரா சாசனம், Ind. Ant. XXI. 101.

6. Epi. Ind. IV. 46-48.

முன்னமே இறந்திருக்கவேண்டுமென்பது தெளிவாகிறது[1]. அவன் ஐம் பத்தைந்து வருஷம் மாளவதேசத்தை ஆண்டதாகப் போஜ சரித்திரம் கூறுவதால் கி. பி. 997-ல் தைலபனைப் போஜன் கொன்றுமிருக்கலாம்[2].

தைலபனுடைய ராஜ்யத்தின் விஸ்தீரணத்தை ஒருவாறு நிச்சயிப்போம். சௌந்தத்தி ராட்டர்களும், வனவாசி சாந்தளிகே கிசுக்காட்டுச் சிற்றரசர்களும், கொங்கணதேசத்துச் சிலாஹாரர்களும், சேவுண தேசத்து யாதவர்களும் தைலபனது ஆளுகையின் கீழிருந்தனர். லாட (கூர்ஜர) தேசத்துத் தலைவனாகிய பாரப்பன், தைலபனால் அனஹில்வாத் குலத்து மூலபுருஷனாகிய மூலராஜனென்பவனுக்கு எதிரியாக அனுப்பப்பட்டதனால்கூர்ஜரமும் அவனாளுகைக்கு உட்பட்டிருந்தது[3]. தைலபன் திரிலிங்க கர்நாட தேசங்களின் தலைவனென்று மேருதுங்கனுடைய பிரபந்தசிந்தாமணியிற் சொல்லப்பட்டிருப்பதால் அந்நாடுகளும் இவன் ராஜ்யத்தைச் சேர்ந்திருத்தல்வேண்டும்.

அவனுடைய ராஜ்யத்தின் பிரதானநகரம் இன்னதென்று நிச்சயமாகத் தெரியவில்லை. முன்சளுக்கியரது காலத்தில் வாதாபிபுரம் தலைநகராக இருந்தது. ராஷ்டிரகூடரதுகாலத்தில் அமோகவர்ஷனது ஆளுகையில் மானியகேடம் (மன்னைக்கடகம்) பிரதானப்பட்டணமாயிற்று[4]. ஆகையால் ராஷ்டிரகூடரின் ராஜ்யத்தைக் கைப்பற்றின

---

1. டாக்டர் பீலர் (Dr. Buhler) விக். சரி. முகவுரை 23-ம் பக்கத்தில் போஜன் கி. பி. 1063-1065 வரையிலும்கூட மாளவத்தை ஆண்டிருக்கலாம் என்றும், பில்ஹணகவி நேரில் அவனைப் பார்க்கவில்லை என்றாலும் இஷ்டப்பட்டால் பார்த்திருக்கக்கூடும் என்றும் சொல்லுகிறார். அதற்குப் பீலர்கூறும் ஆதாரம் விக். சரி. XIII-96-ம் சுலோகம். ஆனால் இச்சுலோலகத்தில் பில்ஹணர் போஜனைப் பார்க்கப்போனபோது, தாராநகரே அழுது கொண்டிருந்ததென்று சொல்லப்பட்டிருப்பதால், போஜன் இறந்துவிட்டானென்றே அனுமானித்தல்வேண்டும். அன்றியும் கவிகளை போஜனைப்போல் ஆதரிப்பவர் வட இந்தியாவில் அப்போது இருந்திருந்தால் பில்ஹணகவி தக்ஷிணத்திற்கு வர நேர்ந்திராது.

2. ரா. கோ. பண்டாரகர் (R. G. Bhandarkar) போஜனால் கொலையுண்டவன் தைலபனது தம்பி மகனாகிய ஐந்தாம் விக்கிரமாதித்தன் என்று அபிப்பிராயப்படுகிறார் (Early History of Dekkan. 61). போஜ சரித்திரத்தில் போஜன் தைலபனைக் கொன்றான் என்று வெளிப்படையாகக் கூறியிருப்பதை அவர் எக்காரணத்தால் நிராகரிக்கிறார் என்பது விளங்கவில்லை.

3. ராஸமாலா ; கீர்த்திகௌமுதீ.

4. கர்டா சாசனம், Ind. Ant. VI. 64; XII. 268; Bom. Gaz. IV. 430.

தைலபனது நாளிலும் அதுவே ராஜதானியாக இருந்திருத்தல் கூடும்[1].

சத்தியாசிரயன்
(கி. பி. 997-1008)

தைலபனுக்குப்பின் அவன் மகன் சத்தியாசிரயன் ராஜ்யத்தை யடைந்து இரட்டபாடி ஏழரை இலக்கமுழுதும்[2] அரசாண்டான். அவனதுகாலத்தில் சோழர்களின் விரோதம் அதிகமாகி, புகழ்பெற்ற முதல் ராஜராஜன் இருமுறை இரட்டபாடியைத் தாக்கி, கங்கபாடி நுளம்பாடிகளைக் கைப்பற்றினன்[3].

ஐந்தாம் விக்கிரமாதித்தன்
(கி. பி. 1009-1014)
ஐயணன்
(கி. பி. 1014)

சத்தியாசிரயன் மக்கட்பேறின்றி இறந்தமையால் அவனது சகோதரன் தசவர்மனது மக்களான ஐந்தாம் விக்கிரமாதித்தனும், ஐயணனும், ஜயசிங்கனும் ராஜ்யத்திற்கு முறையே உரியவராயினர். இவர்களுள் விக்கிரமாதித்தனும் ஐயணனும் சில வருஷங்களே ஆண்டார்கள்.

ஜயசிங்கன்
(கி. பி. 1015-1042)

பிறகு ஜயசிங்கன் சிங்காதனம் ஏறினன். அவன் முதல் ராஜராஜன் (மகனை) ராஜேந்திரசோழனுகிய யானைக்குத் தான் ஒரு சிங்கமென்றும், சேர சோழ அரசர்களைப் பலமுறை கடலில் மூழ்க அடித்தவனென்றும் தன் சாசனங்களில்[4] சொல்லிக்கொள்ளுகிறான். சோழ சாசனங்களிலோ[5] ராஜேந்திரசோழன் ஜயசிங்கனிடமிருந்து (கிருஷ்ணு துங்கபத்திரைக்கிடையிலுள்ள) இடைத்துறை, வனவாசி, கொள்ளிப்பாக்கை முதலிய பல இடங்களைப் பிடித்துக்கொண்டதாகச் சொல்லப்படுகிறது. இங்ஙனம் இருவரும் ஒருவரை ஒருவர் ஜயித்ததாகச் சொல்லிக்கொள்ளுவதனல் ஒருவராவது முடிவாகத் தோல்வி அடைந்தாரென்று நினைப்பதற்கிடமில்லை.

---

1. Epi. Ind. XIII. No. 15.

2. காரேபாடண் சாசனம், Bom. Gaz. IV. 431.

3. S. I. I. II. 13; Epi. Report. 1910; Leyden grant, Tanjore ins; ஹொட்டூர்சாசனம், Bom. Gaz IV. 433.

4. பெள்காம் சாசனம் Epi. Car. VII. Sk. 125; மிரஜ் சாசனம். Ind. Ant. VIII. 18; Ind. Ant. V. 15.

5. S. I. I. i. 96-99; Epi. Ind. XII. 226.

ஜயசிங்கனுடைய கி. பி. 1019-ம் வருஷத்திய சாசனத்தில்[1] அவன் போஜனாகிய தாமரைக்குத் தான் ஒரு சந்திரனென்றும், போஜனையும் அவன் துணையரசர்களையும் தேடித் துரத்திப் பொடியாக்கினானென்றும் காணப்படுகிறது.[2]

ஆகவமல்லன் என்னும் முதலாம் சோமேசுவரன் (கி. பி. 1042-1068)

கி. பி. 1042-ல் ஜயசிங்கன் இறக்க, அவன் மகன் முதல் சோமேசுவரனாகிய ஆகவமல்லன்[3] ராஜ்ய பாரத்தை வகித்தான். அவன் காலத்தில் (நிஜாம் ராஜ்யத்துட் பீடர் ஜில்லாவைச் சார்ந்த) கலியாணபுரமானது பிரபலமடைந்து இராஜதானியாயிற்று. இந்நகரம் கி. பி. 1054-ம் வருஷத்துச் சாசனத்தில்[4] 'நெலவீடு'[5] (பாசறை) என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு முந்திய சளுக்கிய ராஷ்டிரகூட சாசனங்களில் இப்பெயரே காணப்படவில்லை[6]; ஆகவே இது ஆகவமல்லனால் புதி

1. Ind. Ant. V. 17, டாக்டர் பிளீட், ரைஸ் இவர்கள் மொழிபெயர்ப்பு தவறு.

2. டாக்டர் ஓஜா என்பவர் போஜனால் கொல்லப்பட்டவன் சளுக்கிய ஜயசிங்கனே என்று அபிப்பிராயப்படுகிறார். (History of the Solankis); இதற்கு அவருடைய முக்கியமான ஆதாரம், விக். சரி 1. 86. இந்திரனே அவனுக்குத் தன் கையால் மாலையிட்டதாகச் சொல்லியிருப்பதைக்கொண்டே, ஜயசிங்கன் போர்க்களத்தில் இறந்தானென்று அவர் எண்ணுகிறார். ஆனால் அச்சுலோகத்திற்கு அவன் ஒரு பெரிய வீரனாயிருந்து புகழோடு மாண்டு இந்திரலோகமடைந்தானென்பதே பொருளன்றி, போர்க்களத்தில் மடிந்தானென்று கொள்ள இடமில்லை. இப்பொருளுக்கு இதர மேற்கோள்களாவன: சாகுந்தலம் VII. 2; விக். சரி. VI & IV; Epi. Ind. II, நாகப்பூர் சாசனம்; புறநானூறு, 241 மோசியார் பாடலும் இப் பொருளையே வலியுறுத்தும். அது வருமாறு:—

'திண்டே ரிரவலர்க் கீத்த தண்டா
ரண்டிரன் வரூஉ மென்ன வொண்டொடி
வச்சிரத் தடக்கை நெடியோன் கோயிலுட்
போர்ப்புறு முரசங் கறங்க
வார்ப்பெழுந் தன்றால் விசும்பி னானே'

3. இவன் பெரிய போர்வீரனாகையால் சோழசாசனங்களிலெல்லாம் ஆகவமல்லனென்றே சொல்லப்படுகிறான்.

4. கேம்பாவி சாசனம், Bom. Gaz. IV 440.

5. J. R. A. S. 1917. 117.

6. Bom. Gaz. IV. 427.

தாகக் கட்டப்பட்டதா அல்லது முன்னமே இருந்து அவனால் நெல வீடாக்கப்பட்டதா என்ற கேள்விக்கு இடமுண்டாகிறது. இதைப்பற்றிப் பில்ஹணகவி[1] சொல்லியிருக்கும் சுலோகத்திற்கு இருவிதமாகவும் பொருள்படுகின்றதாகையால் ஒரு தலையாகக் கூறுதல் இயலாததாகும்.

தன் முன்னோர் வழக்கப்படி ஆகவமல்லனும் சோழரை எதிர்த்துப்பொருதான். இவன் போஜராஜனது பிரதான பட்டணமாகிய தாராநகரைத் தன் சேனையுடன் வளைத்துப் போஜனை அதை விட்டோடச் செய்தான். தாஹலா (சேதி) ராஜ்யத்தை யழித்து அதன் அரசனை கர்ணனை ஜயித்தான். திராவிட அரசனை முதுகிடச் செய்து சோழ அரசனது பிரதான நகரமாகிய காஞ்சியைத் தாக்கினன்[2]. சாசனங்களும் வேறு சில விவரங்களுடன் இவற்றை உறுதிப்படுத்துகின்றன. இவன் காலத்துச்சோழ அரசர்களாவார் கங்கைகொண்ட சோழனென்னும் கீர்த்திபெற்ற முதல் ராஜேந்திர சோழனுடைய மக்களாகிய ராஜாதிராஜன் (கி. பி. 1018 - 1053), ராஜேந்திர தேவன் (கி. பி. 1052-1062), ராஜமகேந்திரன் (1062-1063), வீரராஜேந்திரன் (கி. பி. 1063-1070) என்னும் நால்வர். கி. பி. 1047-ம் வருஷத்துச் சாசனத்தால்[3] ராஜாதிராஜன் ஆகவமல்லனை ஜயித்து, (நிஜாம் ராஜ்யத்துச் சிகந்தராபாத்துக்கு நாற்பத்திரண்டு மைல் தூரத்திலுள்ள) கொள்ளிப்பாக்கையை எரியூட்டி, (பல்லாரி ஜில்லா ஹொஸ்பெட் தாலுக்காவைச் சேர்ந்த) கம்பிலித் தோட்டத்தையும் அதிலுள்ள அரண்மனையையும் அழித்து ஜயஸ்தம்பம் நாட்டினன்[4] என்று அறிகிறோம். இவற்றுடனில்லாமல் ராஜாதிராஜனும் இளவரசாகிய ராஜேந்திரதேவனும் இரட்டமண்டலம் புகுந்து பிரதான நகராகிய கலியாணபுரத்தைக் கைப்பற்றி, கொல்லாபுரத்தில் (கொல்ஹாபூர்) ஒரு ஜயஸ்தம்பம் நாட்டினார்கள். வீரனாகிய ஆகவமல்லன் இவ்வவமானங்களைப்

---

1. விக். சரி. II. I.
2. விக். சரி. I; நாகவிசாசனம், J. R. A. S. IV. 13; மிரஜ்சாசனம், Ind. Ant. VIII.
3. S. I. I. III. 54.
4. "கம்பி விச்சயத் தம்ப நட்டதுங் கடிய ரண்கொள்கல் யாணர் கட்டறக், கிம்பு ரிப்பணைக் கிரியு கைத்தவன்"—கலிங்கத்துப்பரணி, VIII. 26;

பொருது பேராற்றங்கரையிலுள்ள (கிருஷ்ணாநதி)[1] கொப்பத்திலே அவர்களைச் சண்டைக்கு வரும்படி யழைத்தான். அங்கே, கி. பி. 1053-1054-ல்[2] ஒரு கடுஞ் சண்டை நடந்தது. அதில் ஆகவமல்லன் ஒரு மதயானையின்மேல் ஏறிக்கொண்டு அம்பெய்து ராஜாதிராஜன் தலையைக் கொய்தான்[3]. இந்த ராஜாதிராஜனே 'கலியாணபுரமுங் கொல்லாபுரமும் கொண்டருளி ஆனைமேல் துஞ்சி யருளிய[4] பெருமாள்

"........மும்மடிபோய்க் கலியாணி
செற்ற தனியாண்மைச் சேவகனும்"—விக்கிரமசோழனுலா, 19.

கும்பகோணத்துக்கடுத்த தாராசுரத்தில் விஜயராஜேந்திரதேவனால் கலியாணபுரத்திலிருந்து கொண்டு வரப்பட்ட விக்கிரகங்கள் பல வுள.

1. மணிமங்கலசாசனத்தில் (S. I. I. III. 68. No. 30) 'விஜயவாடையோடடுத்த பேராறு' எனக் காணப்படுவதால், பேராறு பெஜவாடாவையடுத்த கிருஷ்ணாநதி என்று விளங்குகிறது; கலிங்கத்துப்பரணியும் இதையே வற்புறுத்தும்:—

'பாலாறு குசைத்தலை பொன்முகரிப் பழவாறு கடந்தெறி கொல்லியெனு
நாலாறு மகன்றொரு பெண்ணையெனு நதியாறு கடந்து நடந்துடனே'

'வயலாறு புகுந்து மணிப்புனல்வாய் மண்ணாற வளங்கெழு குன்றியெனும்
பெயலாறு பரந்து நிறைந்துவரும் பேராறு மிழிந்தது பிற்படவே'

'கோதா வரிநதி மேலா றொடுகுளிர் பம்பா நதியொடு சந்தப்பே
ரோதா வருநதி யொடுகோ தமையுட னொலிநீர் மலிதுறை பிறகாக'

XI. 55, 56, 57.

பேராறு, என்பது துங்கபத்திரை பாலாறு முதலியனவாகா (Epi. Ind. XII. 297). கிருஷ்ணாநதிக்கரைக் கொப்பை அக்காலத்தில் ஒரு விசேஷமான க்ஷேத்திரமென்பது, ஏவூர்சாசனத்தாலும் (Epi. Ind. XII. 297), 'செப்பருந்தீர்த்தக் கொப்பத்து' (S. I. I. III. 603), செப்பமா தீர்த்தக்கொப்பத்து, (Epi. Car. IX. 108) என்பனவற்றாலும் விளங்கும்.

2. ராஜாதிராஜனுடைய கடைசிச் சாசனத்தின் காலம் கி. பி. 1053 மேமீ 23உ ஆகும். (Epi. Ind. VI. 22). அவனிறந்ததாக, கி. பி. 1054 மேமீ சாசனத்தில் (Epi. Car. VII. Sk. 118) காணப்படுகிறது. ஆகையால் கொப்பத்துச்சண்டை கி. பி. 1053-1054க்குள்ளாக நடந்திருத்தல் வேண்டும்.

3. Epi. Car. VIII. Part. II. Sb. 325; Epi. Car. Sk. 118; அண்ணிகேரிசாசனம், Bom. Gaz. IV. 441; S. I. I. III. 39.

4. 'துஞ்சிய' என்பது 'இறந்த' என்னும் பொருளில் வரும் மங்கலச் சொல். 'ஆனைமேல் துஞ்சிய' என்பதற்கு, 'போர்க்களத்தில் ஆனைமேலிருந்தபடியே மடிந்த' என்று பொருள்.

விஜயராஜேந்திரதேவன்' என்று சோழசாசனத்தில்[1] காணப்படுப வன்[2]. உடனே கூடவிருந்த ராஜேந்திர தேவன் 'ஒருக ளிற்றின்மேல் வருக ளிற்றையொத் தலகு யக்கொளப் பொருது கொப்பையிற், பொருக ளத்திலேமுடி கவித்து'[3] அபஜயம் நேரிடாமற் காத்தான். இவ்வாறு தன்முன்னோர்காலமுதலாக ஏற்பட்டிருந்த சண்டைகளிற் சிறிதும் பின்வாங்காமல் ஆகவமல்லன் ஈடுபட்டு, தன்நாட்டைப் பாழ் படுத்திய சோழர்களைத்துரத்த முயன்று தன்பெயரை நிலைநாட்டினான்.

---

## இரண்டாம் அத்தியாயம்.

---

### விக்கிரமாதித்தனது இளமையும் போர்த்திறமும்.

விக்கிரமாதித்தனது பிறப்பு.

ஆகவமல்லன் இவ்வாறு ஜயங்கொண்டு மகிழ்ந்திருந்தபோதி லும் மக்கட்பேறில்லாப் பெருங்குறையொன்று அவனைப்பீடித்துத் துயர்க்கடலில் வீழ்த்திற்று. முன்னோரிடமிருந்து முறையேவந்த ராஜ்ய லக்ஷ்மியும் அவனுக்குப்பின் பற்றுக்கோடின்மையால் ஏக்கமுற்று, கடலிலே முழுகும் கப்பலின் பாய்மரத்திற்றங்கிய பறவைபோலத் தத் தளித்துக்கொண்டிருந்தாள். ஆகையால், ஆகவமல்லனும் தன் ராஜ்யத்தைஅமைச்சரிடம் ஒப்பித்துவிட்டுத் தங்கள் குலதெய்வமாகிய சிவபெருமானுடைய பிரசாதத்தால் மக்களையடைய விரும்பி எல்லா ஆடம்பரங்களையும் ஒழித்து, தன்மனைவியுடன் கோவிலுக்குச் சென்று வரங்கிடந்தான். சிவபிரானும் திருவுளமுவந்து முன்தோன்றி "உங்களுக்கு மூன்று மக்கள் பிறப்பார்கள், அவர்களில் இரண்டாவது புத்திரன் எமது முழுக்கருணையைப்பெற்று, குணம் பராக்கிரமம் முதலியவைகளில் பண்டையரசர்களெல்லோரினும் மேம்பட்டவ னாக விளங்குவான்" என்று அருள்புரிந்தார். அவ்வாறே அரசியும் நாளடைவில் முறையே சோமேசுவரன், விக்கிரமாதித்தன், ஜயசிங்க

---

1. சுதிசாசனம், Bom. Gaz. IV. 441 ; ஆலங்குடிசாசனம், Epi. Rep. 1898-1899 ; S. I. I. III. 191 ; No. 87 of 1895, Epi. Rep. திருமலவாடிசாசனம்.

2. Epi. Report 1908 P. 64.

3. கலிங்கத்துப்பரணி, ராஜபாரம்பரியம், VIII. 27 ;
'வெப்பத் தடகளத்து வேழங்க ளாயிரமுங்,
கொப்பத்தொருகளிற்றாற் கொண்டோனும்.' விக்கிரமசோழனுலா, 20.

னென்னும் மூன்று மக்களை பெற்றுக் களிகூர்ந்தனள். தேவரெல்லாம் மகிழ்ச்சியடைந்து அலர்மழை பொன்மழை பொழிந்தனர்.

இவ்வாறு பில்ஹணகவி[1] சொல்லியிருப்பதிலிருந்து ஆகவமல்லன் அரசுபுரியத்தொடங்கிப் (கி.பி. 1042) பலவருஷங்களுக்குப் பின்னரே அவனுக்கு மக்கள் பிறந்தார்களென்று அனுமானிக்க இடமுண்டாகிறது. இது சரித்திரசம்மதமாகுமா? சாசனங்களின்[2] உதவியால் சீர்தூக்கிப்பார்த்தால் இதை அங்கீகரிப்பது கூடாததாகிறது. கி பி. 1053-லேயே பெலுவோலா, புலிகெரே நாடுகள் மூத்த குமாரனான சோமேசுவரனுடைய அதிகாரத்தின் கீழும், கி. பி. 1055-ல் கங்கபாடி வனவாசி, சாந்தளிகே, நுளம்பபாடி மாகாணங்கள் இரண்டாம் குமாரனான விக்கிரமாதித்தனதிகாரத்தின் கீழுமிருந்தன. ஆகவமல்லன் தன் ராஜ்யத்தின் எல்லையிலிருந்த முக்கிய மாகாணங்களை மக்கள் வசத்தில் விட்டிருந்ததனால் அவர்கள் அப்போதே உரிய பிராயமடைந்து ஆளுந்திறமையும் பெற்றிருத்தல் வேண்டும். ஆகையால், ஆகவமல்லன் பட்டத்திற்கு வருமுன்னமே (கி. பி. 1042) அவர்கள் பிறந்திருத்தல் வேண்டுமென்று எண்ண இடமுண்டாகிறது. இதனைத் துணிந்துரைக்கவும் கூடும்; ஏனெனில் சோழவமிசத்து ராஜாதிராஜனது இருபத்தொன்பதாம் ஆண்டு சாசனத்தில்[3] (கி. பி. 1047) இவ்விக்கிரமாதித்தனே 'திண்டிறல் விருதர் விக்கி'[4] என்று சொல்லப்பட்டிருக்கிறான். அவன் சண்டைசெய்யும் வன்மையுடையவனாயிருந்ததோடு விரோதிகளாலும் புகழப்பட்டவனாயிருந்தமையால் அப்போது அவனுக்குக் குறைந்தது பதினாறு வயதாகிலும் இருந்திருத்தல் வேண்டும். எனவே சற்றேறக்குறைய கி. பி. 1031 லேயே விக்கிரமாதித்தன் பிறந்திருத்தல்வேண்டும். அதற்கு இரண்டு மூன்று வருட முன்னரே தமையனாகிய சோமேசுவரன் ஜனித்தானென்பது சொல்லாமலே அமையும். ஒருகால் மூன்றாம் மகனாகிய ஜயசிங்கன்மட்டும் ஆகவமல்லன் அரசெய்தியபின்னர் பிறந்திருக்க

1. விக். சரி. II. 25-91.

2. Bom. Gaz. IV. 440; Epi. Car. VII. Sk. 11. 83, 152; Ind Ant. IV 303. முள்குந்து சாசனம்.

3. S. I. I. III. 56.

4. Ojha's History of the Solankis.

லாம்; ஏனெனில் அவன் பெயர் கி. பி. 1064-ம் வருஷத்திய சாசனத்தில்தான்[1] முதல்முதல் காணப்படுகிறது.

உண்மை இங்ஙனமிருக்க பில்ஹணகவி மாறுபாடாகக் கூறியதற்குக் காரணம் என்ன? புகழ்பெற்று விளங்கிய விக்கிரமாதித்தனை ஈசுவரானுக்கிரகம் பெற்றவனென்று சிறப்பித்து உரைப்பதற்கே போலும்.

இஃதொருபுறமிருக்க இம்மூன்று புத்திரரும் ஒருதாய்வயிற்றிற் பிறந்தவரா அல்லரா என்ற கேள்வி எழுகின்றது. சோமேசுவர விக்கிரமாதித்தரது கங்கபிருதுகளால் அவர்கள் கங்கவம்சத்தரசியின் பிள்ளைகளென்றும், ஜயசிங்கனுடைய பல்லவபிருதுகளால் அவன் பல்லவ குலத்தரசியின் புத்திரனென்றும் ஆகவே மூவரும் இருவேறுதாய்களின் மக்களாக இருத்தல் வேண்டுமென்றும் டாக்டர் ரைஸ்[2] (Dr Rice) அபிப்பிராயப்படுகிறார். ஆனால் இவ்வபிப்பிராயத்துக்குச் சிறிதும் இடமில்லை. கங்கமாகாணங்களின் எல்லையைப் பாதுகாத்து வந்தமையாற் கங்கபிருதுகளும், பல்லவதேசத்தெல்லையைப் பாதுகாத்துவந்தமையாற் பல்லவபிருதுகளும் கிடைத்திருத்தல்வேண்டும். இத்தகையவழக்கம் சோழர்களிடத்திலும்[3] மிகுதியாகக் காணப்படுகிறது. மேலும், விக்கிரமாங்கதேவசரிதத்தில்[4] 'அரசே! இம்மனைவியின் வயிற்றில் மூன்று மக்களுண்டாவர்' என்று சிவபிரான் சொன்னமை வெளிப்படையாகக் கூறப்பட்டிருக்கின்றது. டாக்டர் பிளீட் (Dr Fleet) வெளியிட்ட கதக்சாசனத்திலிருந்தும்[5] மூவரும் ஆகவமல்லன் மூத்த மனைவியாகிய பாசலதேவியின் புத்திரரென்று தெரிகிறது. ஆகையால் இவர்கள் ஒருதாய் வயிற்றின் சகோதரரேயன்றி வேறல்லர் என்பது துணியப்படும். இப்பாசலதேவி, பல்லவகுலத்தைச் சேர்ந்தவளாக இருத்தல் வேண்டுமென்று தேவூர் சாசனத்தைக் கொண்டு[6] ஒருவாறு ஊகிக்கலாம்.

---

1. S. I. I. III. No. 20. கருவூர்ச்சாசனம்; Epi. Rep. 113. of 1896; திருவெண்காட்டுச்சாசனம்; வீரராஜேந்திரனது இரண்டாம் வருஷம் (கி. பி. 1064).
2. Epi. Car. VII. Sk. 136; Dg. 133; Cd. 12.
3. S. I. I. III. Nos, 20, 29.
4. விக். விக். II. 51.
5. Ind. Ant. II. 297 ; Bom. Gaz. 438.
6. Bom. Gaz. 440

சோமேசுவரன் இளவரசாதல். (கி. பி. 1045)

புத்திரர்கள் பலகலைகளையும் பயின்று பருவமுதிர்ந்தகாலையில், முன்னோர் வழக்கப்படி ஆகவமல்லன் தான் அதுகாறும் வகித்துவந்த ராஜ்யபாரத்தை ஒருவாறு குறைத்துக்கொள்ளுவதற்கும், அரசாளு முறைமையில் மைந்தர்களைப் பழக்குவதற்கும் வேண்டித் தன் புதல்வரில் ஒருவனை இளவரசாக்க எண்ணினான். மூத்த குமாரனான சோமேசுவரன் இளவரசுக்குரியவனாயிருந்தபோதிலும், அவன் தம்பி விக்கிரமாதித்தன் தமையனைக்காட்டிலும் புஜபல பராக்கிரமங்களில் மேம்பட்டவனாயிருந்தமையால் ஆன்றோரொழுக்கமும் உரிமையு மொருபுறமிழுக்க, தன் மனப்போக்கும் பொருத்தமும் மற்றொரு புறமாக, ஆகவமல்லன் இன்னது செய்வதென்று தோன்றாமற் குழப்பமடைந்திருந்தான். இக்குழப்பத்தை ஊகித்தறிந்த விக்கிரமாதித்தன், தமையனிருக்கத் தான் இளவரசாதல் தனக்கும் தன் தந்தைக்கும் சளுக்கியகுலத்துக்கும் பெரும்பழியாகுமாதலால் கூடாதென்றும், யுவராஜ பட்டமில்லாமலே தன்னாலியன்ற ஊழியம் புரிவதாகவுஞ் சொன்னான். ஆகவே சோமேசுவரன் இளவரசாக நியமிக்கப்பட்டான்.

இங்ஙனம் இளவரசு விஷயத்தைப்பற்றிப் பில்ஹணர்[1] கூறியது, விக்கிரமாதித்தனைப் புகழ்தலும் சோமேசுவரனை இகழ்தலுமாகிய பக்ஷபாதமுடையதென்று டாக்டர் பீலர் (Dr Buhler)[2] அபிப்பிராயப்படுகின்றார். ஆனால், இதில் பக்ஷபாதம் இல்லையென்பது பிற்காலத்தில் இவர்கள் அரசு நடத்திய சீர்மையாலேயே யாவர்க்கும் தெற்றெனவிளங்கும். ஆகவமல்லன் பிரிய சுதனாகிய இளையவனை இளவரசாக்க உண்மையிலே விரும்பினானா அல்லது பில்ஹணகவி சாதுரியமாகச் சகோதரரின் ஏற்றத்தாழ்வை எடுத்துக்காட்ட இவ்வாறு புனைந்துரைத்தாரா என்ற கேள்வி எழுகின்றது. ராஜ்யத்தின் பொருட்டு நெடுங்காலம் பிரயாசைப்பட்டு அதன் அபிவிருத்தியையே நாடின ஆகவமல்லன், வல்லமைவாய்ந்த இளையவனையே இளவரசாக்க இசைந்திருப்பானென்பது ஒருகாலும் அசம்பாவிதமாகாது. ஆகவமல்லன் கருதியதுண்மையாயின் விக்கிரமாதித்தன் மறுத்ததும் உண்மையேயாம்; ஏனெனில் ஆகவமல்லனது காலமுழுதும் சோமேசுவரனே யுவராஜனாக இருந்து, தந்தைக்

1. விக். சரி. III. 26 - 59
2. பீலர்பதிப்பு, விக். சரி. முகவுரை, 31.

குப்பின்[1] உரிமை முறைமையிற் சிங்காதனமேறினன். ராஜ்ய வுரிமைக்குச் சகோதரர் சண்டையிட்டே தீரவேண்டுமா?[2]

சோமேசுவரன் இளவரசனுனும் ராஜ்யபாரத்தைப் பெரும்பாலும் விக்கிரமாதித்தனே வகித்துவந்தான். எல்லாச் சண்டைகளுக்கும் அவனையே ஆகவமல்லன் அனுப்பினன். பலமுறை சோழனைப் புறங்காட்டச்செய்து தென்கடற்கரை வரையில் வந்து மலையமலையைக் கைக்கொண்டு, தன்னிட மடைக்கலம்புகுந்த மாளவ அரசனுக்கு அவன் நாட்டை மீட்டளித்து, கௌட காமரூப (அஸ்ஸாம்) தேசங்களுக்குச் சென்று கிழக்குத்தொடர்ச்சி மலையைக் கடந்து காஞ்சியைத் தாக்கி மலையவனத்தை யழித்துக் கேரள அரசனைத் தோற்கச்செய்து சோழ ராஜதானியாகிய கங்கைகொண்ட சோழபுரத்தைக் கைப்பற்றி, வேங்கிக்கும் சக்கரக்கோட்டத்திற்கும் சென்று கிருஷ்ணநதிக் கரைக்கு விக்கிரமாதித்தன் திரும்பிவருகையில் தந்தை ஆகவ

தந்தைக்குத் துணையாக விக்கிரமாதித்தன் காட்டிய போர்த்திறம்.
(கி. பி. 1047-1068)

1. பக்கம், 28. பார்க்க.

2. Cf. "வேள்விச் சாலையின் வேந்தன் பெயர்ந்தபி
னியானுஞ் சென்றே னென்னெதி ரெழுந்து
தேவந் திகைமேற் றிகழ்ந்து தோன்றி
வஞ்சி மூதூர் மணிமண் டபத்திடை
நுந்தை தாணிழ லிருந்தோய் நின்னை
யரசுவீற் றிருக்குந் திருப்பொறி யுண்டென்
றுரைசெய் தவன்மே லுருத்து நோக்கிக்
கொங்கவிழ் நறுந்தார்க் கொடித்தேர்த் தானைச்
செங்குட் டுவன்றன் செல்ல னீங்கப்
பகல்செய் வாயிற் படியோர் தம்மு
னகலிடப் பார மகல நீக்கிச்
சிந்தை செல்லாச் சேணெடுந் தூரத்
தந்தமி லின்பத் தரசாள் வேந்தென்
றென்றிற முரைத்த விமையோ ரிளங்கொடி
தன்றிற முரைத்த தகைசா னன்மொழி
தெரிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர்"

சிலப்பதிகாரம், 30. 170-185.

"குணவாயிற் கோட்டத் தரசுதுறந் திருந்த
குடக்கோச் சேர லிளங்கோ வடிகட்கு"—பதிகம், 1-2.

மல்லன் இறந்த செய்தியைக் கேட்டானென்று பில்ஹணகவி[1] வருணித்திருக்கிறார்.

சற்றேறக்குறைய இருபது வருஷங்களடங்கிய (கி. பி. 1047-1068) மேற்கண்ட வரலாற்றின் காலவொழுங்கை நிர்ணயிப்பது இயலாதென்று டாக்டர் பீலர் கருதியபோதிலும்[2] பின் வெளிவந்த சோழசாசனங்களைக் கொண்டு அவற்றை ஒருவாறு நிச்சயித்தல் கூடும்.

முதன்முறை சோழருக்கும் சளுக்கியருக்கும் நடந்த போர். (கி. பி. 1047)

கி. பி. 1047-ம் வருஷத்திய ராஜாதிராஜனுடைய சாசனத்தில்[3] 'திண்டிறல் விருதர் விக்கி' என்று கூறப்படுகிறவன் இவ்விக்கிரமாதித்தனே.

விக்கிரமாதித்தனுடைய உதவியால் ராஜ்யத்தை யடைந்ததாகப் பில்ஹணர் கூறியிருக்கும் மாளவ அரசன் யாவன்?

மாளவ அரசனுக்குச் செய்த உதவி. (கி. பி. 1054)

அவ்வரசன் எப்போது எக்காரணத்தைக் கொண்டு விக்கிரமாதித்தனது உதவியை நாடினான்? போஜன் புத்திரனின்றி, கி.பி. 1055-க்கு முன்னம் இறந்ததும் அக்காலத்துப் பிரபலவீரனும் சேதிதேசத்தரசனுமாகிய கர்ணன், கூர்ஜரதேசத்தரசனான பீமதேவனுடன் சேர்ந்து மாளவதேசத்தை யெதிர்த்து, தாராநகரத்தை இருபுறமுந் தாக்கி வளைக்கவே[4] போஜனது உறவினனாகிய ஜயசிங்கன் தன்னந்தனியனாய் நாட்டைக்காப்பாற்ற சக்தியில்லாமல் ஆகவமல்லனைத் தனக்கு உதவி புரிய வேண்டினான். ஆகவமல்லனும் மாளவதேசத்திற்கு விரோதிகளான சேதி கூர்ஜர அரசர்கள் ஒன்று சேர்ந்தால் தன் நாட்டின் வட எல்லைக்கு நாளடைவில் பலக்குறைவாகுமென்றெண்ணிச் சேதிநாட்டைத் தாக்க, கர்ணன் மாளவத்தினின்றும் பின்னடைந்தான். ஆகவமல்லன் தன் மகன் விக்கிரமாதித்தனையும் மாளவத்திற்கனுப்ப, அவன் கர்ணனுக்கு எதிராக ஜயசிங்கன் பக்கத்திலிருந்து

1. விக். சரி. III & IV.
2. பீலர்பதிப்பு. விக். சரி. முகவுரை, 31.
3. S. I. I. III. 56, No. 28.
4. உதயபூர்பிரசஸ்தி, Epi. Ind. I; மேருதுங்கனது பிரபந்தசிந்தாமணி.

அதுவரையிற் போர்புரிந்துவந்த உதயாதித்தனோடு[1] சேர்ந்து ஜயசிங்கனை மாளவத்தில் நிலைநிறுத்தினான். ஜயசிங்கன் இறந்தபின் உதயாதித்தன் மாளவத்தையாண்டான்.

கௌடகாமரூபங்களுக்குச் சென்றது.

விக்கிரமாதித்தன் இவ்வாறு மாளவத்திலிருந்து திரும்புகையில் கௌட காமரூப தேசங்களுக்கும் சென்றிருத்தல்வேண்டும்.

இரண்டாவது சளுக்கிய போர் (கி. பி. 1064)

கி. பி. 1053-1054-ல் சோழருக்கும் சளுக்கியருக்கும் கொப்பத்தில் நடந்த கடுஞ்சண்டையில் ராஜாதிராஜன் கொல்லப்பட, அவன் தம்பியாகிய ராஜேந்திர தேவன் 'பொருகளத்திலே முடிகவித்து' கி. பி. 1062 வரையில் அரசாண்டு வந்தான் என்று முன்னமே[2] சொல்லியிருக்கிறோம்.

அவன் தம்பி ராஜமகேந்திரனைப்பற்றி அதிகமாக ஒன்றுந் தெரியவில்லை. கலிங்கத்துப்பரணியில்[3]

'மனுவலுக்கு முதலாய வேத நான்கிற் பண்டுரைத்த நெறிபுதுக்கிப் பழையர் தங்கண்
மனுவினுக்கு மும்மடிநான் மடியாஞ் சோழன்' என்றும்,

விக்கிரமசோழனுலாவில்[4],

'பாடரவத் தென்னரங்க மேயாற்குப் பன்மணியா
லாடரவப் பாய லமைத்தோனும்' என்றும் முறையே

சிறப்பித்துக் கூறப்பட்டவன் இவனே.

பிறகு இவன் தம்பியாகிய வீரராஜேந்திரன் கி. பி. 1063-ல்[5] சிங்காதனமேறினான். இவன், கொப்பத்தில் ராஜாதிராஜன் கொலையுண்டமையால் சளுக்கியரைப் பழிக்குப்பழி வாங்கவேண்டுமென்ற நோக்கமுடையவனாயிருந்தான். அதையறிந்து ஆகவமல்லனும் வீரனான தன்மகன் விக்கிரமாதித்தனைச் சோழநாட்டெல்லையைச் சார்ந்த கங்கபாடி, வனவாசி, சாந்தளிகே, நுளம்பபாடி மாகாணங்களுக்கு

1. Epi. Ind. II. 192, நாகப்பூர் சாசனம்; 303, காசிச்சாசனம்; பில்ஹணர் கூறுவதற்கு மாறாக இச்சாசனங்களில் சளுக்கியர் உதயாதித்தனுக்கு விரோதமாய்ச் சேதிகர்ணனைச் சேர்ந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

2. பக்கம், 13-பார்க்க.

3. VIII. 28. 4. கண்ணி, 21.

5. Epi. Ind. IX. 207. Note Prof. Kielhorn's astronomical calculations.

அதிகாரியாக நியமித்திருந்தான்[1]. வீரராஜேந்திரன் கி. பி. 1064-ல் 'இகல்விளே, விருதொடு மலேக்கும் விக்கலன் றன்னெடும், வெஞ்சிலேத் தடங்கை மாசா மந்தரைக்கங்கபாடிக் களத்திடை நின்று, துங்கபத் திரைபுகத் துரத்தினன்'[2]. இது சோழ வீரராஜேந்திரனுக்கும் சளுக்கி ஆகவமல்லனுக்கும் நடந்த முதற்போராகும். இரண்டா முறை வீரராஜேந்திரன் 'வேங்கை நன்னாட்டிடை மீண்டவர் விட்ட, தாங்கரும் பெருவலித் தண்டுகெடத்தாக்கி, மாதண்ட நாயகன் சாமுண்ட ராயனேச், செற்றவன் சிரத்தினே யறுத்தனன்.' மூன்றும் விசை வீரராஜேந்திரன் ஆகவமல்லனேடும் அவன் புத்திரரோடும் மகாசாமந்தர்களோடும் கிருஷ்ணு பஞ்சகங்கா நதிகள் கூடுமிடமாகிய (Epi. Ind. XII. 298) கூடல்சங்கமத்தில், கி. பி. 1064-ல் போர் செய்து 'வடகட லன்ன வகுத்தவத்தானேயைக், கடகளிறென்றூற் கலக்கி' அநேகசாமந்தரைச் சின்னபின்னஞ்செய்து விக்கலன் விக்கிர மாதித்தன் சிங்கணன் ஜயசிங்கன் முதலானவர்களோடு ஆகவமல்ல னேயும் புறங்காட்டியோடச் செய்தான். வீரராஜேந்திரன் ஆகவமல்ல னேடு போர்செய்து அவனேத் தோல்வியடையச்செய்த முக்கியமான சண்டை இதுவேயாகும். அதனல் அவன் கலிங்கத்துப்பரணியில்[3] 'குந்தளரைக் கூடற்சங்கமத்து வென்றகோ னபயன்' என்றும், விக்கி ரம சோழனுலாவில்[4] 'கூடலார்,சங்கமத்துக் கொள்ளுந் தனிப்பரணிக் கெண்ணிறந்த, துங்கமத யானே துணித்தோனும்' என்றும் பாராட் டிச் சொல்லப்பட்டிருக்கிறன். கொப்பத்துச் சண்டையில் ராஜாதி ராஜன் கொலேயுண்டதால் அடைந்த பரிபவத்தை அதற்குப்பின் பத்து வருஷங்களுக்குள் இக்கூடற்சங்கமத்துப்போரில் சோழ வீரராஜேந் திரன் ஒருவாறு தீர்த்துக்கொண்டான். மற்றுமொருமுறை (கி. பி. 1067) துங்கபத்திரைக்கரையில் வீரராஜேந்திரன் சளுக்கிய சாமந்தர்க ளாகிய 'நாமவேற், கங்கனே நுளம்பனேக் காடவர் கோனே, மங்குமத யானே வைதும்ப ராயன்' முதலானவரை வென்றான். அதுகண்ட ஆகவமல்லன் 'பழியொடு வாழ்வதிற் சாவது சால நன்றென், றேவ முற்றின சிந்தையனுகி முன்னம், புதல்வருந் தானு முதுகிட்டுடைந்த,

1. Ind. Ant. IV. 203; Epi. Car. VII. Sk. 11, 83, 152.

2. S. I. I. iii. No. 20 கருவூர்ச்சாசனம்; Epi. Rep. 113 of 1896; திருவெண்காட்டுச்சாசனம், வீரராஜேந்திரனது இரண்டாம் வருஷம் (கி. பி. 1064).

3. VIII. 29. 4. கண்ணி, 22.

கூடலங் களமெனக் குறித்த கூடலில், வாரா தஞ்சினர் மன்னவ ரல்லர், போர்ப் பெரும்பழிப் புரட்டராக, வென்று' தன்கைப்பட ஓர் ஓலையெழுதி வீரராஜேந்திரனுக் கனுப்பினன்[1]. வீரராஜேந்திரனும் "சிந்தையு முகமுந் திருப்புய மிரண்டு, மேந்தெழி லுவகையோடிரு மடங்கு பொலியப், போந்தப் போர்க்களம் புகுந்து காந்தையில், (கூடல் சங்கமத்திற்கடுத்த ஈஞ்சல்கரஞ்சி, Epi. Ind. XII. 298) வல்லவர் (சளுக்கியர்) கோனை (ஆகவமல்லனை) வரவுகாணாது, சொல்லிய நாளின் மேலுமோர் திங்கள், பார்த்திருந்த பின்னைப் பொய்த்தவன், கால்கெட வோடி மேல்கட லொளித்தலும்...துங்கபத் திரைக்கரை சயபத் திரத்தூண், நானிலம் பரச நாட்டி மேனாள்[2], வந்த பிரட்டனை[3] (ஆகவமல்லனை) வல்லவ னாக்கிச், சுந்தர கண்டிகை கட்டிப்

1. S. I. I. iii 68. No. 30. மணிமங்கலசாசனம்.

2. 'மேனாள்' என்பதற்குக் கடந்துசென்ற நாளென்று பொருளேயன்றி டாக்டர் ஹுல்ஷ் (Dr Hultzsch) கொள்ளுமாறு 'இனிவருநாள்' என்று அர்த்தம் கிடையாது. பின்வரும்பாக்கள் இதனை நன்குவலியுறுத்துகின்றன.

'சாவத்தாற் பெறுதுமோ சதுமுகன்றான் கீழ்நாங்கண் மேனாட் செய்த பாவத்தா லெம்வயிற்றிற் பசியை வைத்தான்' கலிங்கத்துப்பரணி, IX. 5

"கெடுக சிந்தை கடிதிவ டுணிவே
மூதின் மகளி ராத றகுமே
மேனா ளுற்றசெரு விற்கிவ டன்னை
யானை யெறிந்து களத்தொழிந் தனனே
நெருந லுற்றசெரு விற்கிவள் கொழுநன்
பெருநிரை விலங்கி யாண்டுப்பட் டனனே
இன்றும், செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிது விரித்துடீஇப்
பாறுமயிர்க் குடுமி யெண்ணெய் நீவி
யொருமக னல்ல தில்லோள்
செருமுக நோக்கிச் செல்கென விடுமே." புறநானூறு, 279.

3. இவ்விடத்தில் 'மேனாள்வந்த' என்பதற்கு 'பின்னிட்டுத் தன்னிடம் வந்த' என்றும், 'பிரட்டன்' என்பதற்கு வாக்குத்தவறின ஆகவமல்லனுடைய மகன் விக்கிரமாதித்தன் என்றும் டாக்டர் ஹுல்ஷ் (S. I. I. No. 30. மணிமங்கலசாசனம்) அபிப்பிராயப்படுகிறார். இது சிறிதும் பொருந்தாது; ஏனெனில் 'மேனாள்' முந்தின நாளேயொழியப் பின்வருநாளல்ல. ஆகவமல்லன்

புரசை யானைப் புழைக்கையிற் பிழைத்திவ், வுலகமறிய வோடிய பரிசொரு, பலகையிற் பழுதற வெழுதிய பின்னைச், சாத்தினவுறை யுஞ் சளுக்கி பதம்பெற்ற, பூத்தின் மார்பொடும்பூட்டி"ப் பலவாறு ஏளனஞ்[1] செய்தான். குறித்த நாளில ஆகவமல்லன் போர்க்களத்துக்கு வராதகாரணம் அவனுக்குத் திடீரென்று உண்டான கடுஞ்சுரமேயாம். இதற்குப் பலவிதமான வைத்தியம்செய்தும் பயனிலதாக, வாதை பொறுக்கமாட்டாது, அவன் துங்கபத்திரை யாற்றுக்குச் சென்று கி. பி. 1068-ம் வருஷம் மார்ச்சு மாதம் 29-ம் தேதியில் குருவர்த்தி யென்னுமிடத்தில் யோகத்தை மேற்கொண்டு ஜலசமாதியடைந்தான்[2]. அச்செய்தி வீரராஜேந்திரனுக்குத் தெரியாததனால், அவன் ஆகவ மல்லனைப் பொய்யனென்றும், பிரட்டனென்றும், தனக்குப் பயந்து மேற்கடலில் ஒளித்தானென்றும் எண்ணி, ஒரு போலியுருச்செய்து[3] கழுத்தில் கண்டிகை (பதக்கம்) கட்டி, போரில் தோல்வியடைந்த தற்கு அறிகுறியாக (அம்பினால்) பூத்தின மார்பும் சாத்தின (அம்பற்ற) உறையுமெழுதிப் பலவாறு இகழ்ந்தான்.

---

பிரட்டனனதனாலேயே விக்கிரமாதித்தனை எவ்வாறு பிரட்டனென்று சொல்ல லாம்? ஆகையால் இது 'மூன்னம், புதல்வருந்தானு முதுகிட் டுடைந்த கூடலங் களமெனக் குறித்த கூடலில்' சொல்லியநாளில் வராத ஆகவமல்லனை யே குறித்ததாகும்.

> பிரட்டனை யேபட்டங் கட்டழித்துப் பேரேழரையிலக் கம்புரக்க
> இரட்டனை யேபட்டங் கட்டிவிட்ட விராசகம்பீரனை வாழ்த்தினவே.

தக்கயாகப்பரணி 774.

1. இங்குச் சொல்லியிருப்பன முழுதும் ஆகவமல்லனைப் பரிகசித்ததே யன்றி, டாக்டர் ஹுல்ஷ் அபிப்பிராயப்படிமாறு விக்கிரமாதித்தனைப்பற்றிய விஷயமல்ல.

2. Epi. Car. VII. Sk. 136; விக். சரி. IV. 44, 68.

3. இவ்வாறு பரிகசிப்பது பண்டைநாளில் வழக்கம் போலும்; Cf. கூரம் பல்லவசாசனம், S. I. I. i. No. 151; வரி, 12.

'தொழுதுமன்னரே கரைசெய் பொன்னியிற்றொடர வந்திலா முகரியைப் படத் தெழுது கென்றுகண் டிதுமிகைக்கணென் றிங்கழிக்கவே யங்க ழிந்ததும்'

கலிங்கத்துப்பரணி, X. 20.

வேங்கிக்குச் சென்றது. (கி. பி. 1067)

இனி, வேங்கிக்கும் சக்கரக்கோட்டத்திற்கும் விக்கிரமாதித்தன் சென்றதாகப் பில்ஹணர் கூறியதன் உண்மை என்னவென்று விசாரிப்போம். வேங்கிநாட்டுக்குச் சளுக்கியர் விடுத்த சேனையை வீரராஜேந்திரன் ஜயித்துத் தண்டநாயகன் சாமுண்டராயன் தலையை அறுத்தானென்று முன்னமே சொல்லியிருக்கிறோம். மேலும் கூடல் சங்கமத்தில் ஆகவமல்லனை வரவுகாணாது பரிகசித்தபின்னர், வீரராஜேந்திரன் 'தான் கைக்கொண்ட வேங்கைநன்னாடு, மீட்டுக் கொண்டலால் மீள்கிலங் கேட்டிநீ, வல்லவனாகில் வந்துகாக் கென்று சொல்லி' வேங்கிக்குச் சென்றதாகச் சாசனத்தில்[1] காணப்படுகிறது. இவ்வாறு விக்கிரமாதித்தனும் வீரராஜேந்திரனும் வேங்கிவிஷயமாகத் தலையிட்டுக்கொண்டதன் காரணம் என்ன? வேங்கியின் வரலாற்றை ஒருவாறு விரிவாகச் சொன்னாலன்றிக் காரணம் தெளிவாகப் புலப்படாது. வேங்கிநாடு கி. பி. பத்தாம் நூற்றாண்டின் இறுதியில் சீர்குலைந்து சோழவமிசத்துப் புகழ்பெற்ற முதலாம் ராஜாராஜனுக்குக் கீழ்ப்பட்டிருந்ததென்று முன்னமே [2] கூறியிருக்கிறோம். அப்படிக் கீழ்ப்படிந்த கீழைச்சளுக்கியரசர்களில் முதல்வனாகிய விமலாதித்தன் சோழவமிசத்து ராஜராஜன் பெண்ணாகிய குந்தவ்வையைக் கலியாணம் செய்துகொண்டு [3] ஏழு வருஷங்கள் (கி. பி. 1015-1022) ஆண்டான். அவனுக்குப் பின் அவன் மகன் சளுக்கிராஜராஜன் (ராஜராஜநரேந்திரன்) கங்கைகொண்ட சோழன் பெண் அம்மங்கதேவியை மணந்து நாற்பது அல்லது நாற்பத்தொரு வருஷங்கள் ஆண்டு கி. பி. 1061-1062-ல் இறந்தான்.[4] அவனுக்கு விஜயாதித்தன் என்ற ஒரு தம்பியும், ராஜேந்திரன் என்ற ஒரு பிள்ளையுமிருந்தனர். இச்சளுக்கிய ராஜேந்திரனும் சோழராஜேந்திர தேவன் புத்திரி மதுராந்தகியை மணம் புரிந்தான்.[5] இவ்வாறு வேங்கியரசர்கள் சளுக்கியராயிருந்தும்

1. S. I. I. iii. No. 30. மணிமங்கலசாசனம்.
2. பக்கம், 7 பார்க்க.
3. ரணஸ்திபூண்டி சாசனம், Epi. Ind. VI. No. 36; Epi. Rep. 1900.
4. பிடாபுர சாசனம், .Epi. Ind. IV. 33.
5. செல்லூர் சாசனம், S. I. I. i. 59; Epi. Ind. V. 10; கொரிமல்விசாசனம், Ind. Ant. XIV. 55.

"இருண்முழுதுமகற்றும் விதுகுலத்தோன்றேவி யிகல்விளங்குதபனகுலத் திராசராச னருடிருவின் திருவயிற்றில்வந்து தோன்றி"

மூன்று தலைமுறையாகச் [1] சோழவமிசத்துப் பெண்களையே கலியாணம் செய்து வந்ததனால், சோழரிடத்தில் அவர்களுக்குப் பற்று அதிகரித்து வந்தது. அவ்வரசர்கள் தங்களுடைய தாய்வழிப்பாட்டன்மார்ராகிய ராஜராஜன், ராஜேந்திரன் என்ற பெயர்களைத் தாங்களும்

---

“கங்கைகொண்ட சோழன்றேவி குலமகடன் குலமகன்”

என்று கலிங்கத்துப்பரணி (X. 3, 5) செய்யுட்களில் இரண்டாம் ராஜேந்திரசோழன் (குலோத்துங்கன்) குறிக்கப்பட்டிருக்கிறான். ஈண்டு, ‘விதுகுலத்தோன்’ - சளுக்கிராஜராஜன் என்றும், ‘தபனகுலத்து ராசராசன்’ கங்கைகொண்ட சோழனே ஒழிய முதலாம் சோழராஜராஜன் அல்லன் என்றுமே பொருள்கொள்ளல் வேண்டும். ராசராசன் - மன்னர் மன்னவன்; இது பொதுப்பெயரே ஒழிய ஒருவனது பேரல்ல. இங்கு வெங்கையர் (Epi. Rep. 1901. 7) ‘ராசராசன்’ என்பவனைக் கீழைச்சளுக்கிராஜராஜன் என்று நினைத்து, ‘தபனகுலத்து ராஜராஜனருள் திரு’ என்பதற்குச் ‘சூரியகுலத்துதித்துச் சளுக்கிராசராசனுக்கு வாழ்க்கைப்பட்ட அருள்நிரம்பிய லக்ஷ்மி (மனைவி), என்று வலிந்து பொருள் கூறுகின்றார். மு. ராகவையங்காரும் அவ்வாறே கொள்வர். ஆனால் ‘அருள்திரு’ என்பதற்கு ‘பெற்றபெண்’ என்று அர்த்தமே ஒழிய ‘அருள்நிரம்பிய மனைவி’ என்று பொருள்கொள்ள இடமில்லை. மேலும் ‘தபனகுலத்து’ என்பது ‘ராஜராஜன்’ என்பதைத் தழுவுமேஒழிய ‘திரு’வைத் தழுவாது. மேலும் அவ்வாறு பொருள் கொண்டால் பாட்டின் முதலிரண்டடிகளும் ‘கூறியது கூறல்’ என்னும் குற்ற முடையனவாகும். அது பரணிக்கோர் சயங்கொண்டானுக்குத் தகாதல்லவா?

1. வமிசாவளி.

சூரியகுலத்துச் சோழ ராஜராஜன் i.

சந்திரகுலத்துச் சளுக்கி விமலாதித்தன் = குந்தவ்வை | ராஜேந்திரசோழன் i or கங்கைகொண்டசோழன்

ராஜராஜன் = அம்மங்கதேவி | ராஜேந்திரதேவன்

ராஜேந்திரசோழன் ii or குலோத்துங்கன் i = மதுராந்தகி

180491.

பூண்டிருந்தது இதற்குத் தக்க அடையாளமாகும். ஆகவே மேலைச் சளுக்கியருக்குத் தம்வமிசத்துப் பிரிவினராகிய கீழைச்சளுக்கியர் நாட்டில் யாதொரு பிடிப்பும் இல்லாததாயிற்று. கி. பி. 1062-ல் சளுக்கிய ராஜராஜனிறக்க, வேங்கியில் மேலைச்சளுக்கிய ஆட்சியை மீட்டும் நிலைநாட்ட இது தக்க சமயமென்று விக்கிரமாதித்தன் தண்ட நாயகனாகிய சாமுண்டராயனைச் சேனையோடு வேங்கிக்கு அனுப்பியிருத்தல் வேண்டும். வீரராஜேந்திரனும், புகழ்பெற்ற முதலாம் சோழ ராஜராஜன் காலமுதல் தங்களாட்சியின் கீழிருந்த வேங்கி, தன் கையைவிட்டு நழுவாவண்ணம் படையெடுத்துச் சென்று சாமுண்டராயனைக் கொன்றிருத்தல் வேண்டும். அதனால் விக்கிரமாதித்தனும் கூடல்சங்கமத்து விளைந்த போருக்குப் பிறகு, பில்ஹணர் கூறியபடி, வேங்கிக்கு நேரிற்போய் அதைத் தனக்கு இணங்கும்படி செய்திருத்தல்வேண்டும். அக்காரணத்தினால் வீரராஜேந்திரனும் கூடல் சங்கமத்தில் குறித்த நாளில் ஆகவமல்லன் வாராதது கண்டு, 'தான் கைக்கொண்ட வேங்கைநன்னாடு, மீட்டுக் கோண்ட லால் மீள்கிலம்' என்று சொல்லி வேங்கிக்குச் சென்றான். இடையே விஜயவாடைக்கு (பெஜவாடாவுக்கு) அடுத்த பேராற்றங்கரையில் (கிருஷ்ண நதிக்கரையில்) விக்கிரமாதித்தனுக்கும் வீரராஜேந்திரனுக்கும் பெரும்போர் நடந்தது. வீரராஜேந்திரன் சளுக்கியர் 'சேனையையடவியிற் பாய்ச்சி, கோதாவரியிற்றன் போதக நீருண்ணக், கலிங்கமுங் கடந்தப்பால் சக்கரக், கோட்டத் தப்புறத் தளவும்[1], மேவருந் தானைத் தாவடி செலுத்தி, வேங்கைநன்னாடு மீட்டுக்கொண்டுதன், பூங்கழற் கடைக்கலம் புகுந்த படைக்கலத், தடக்கை விஜயாதித்தற் கருளி, விசைகொடு மீண்டுவிட்டருளி யிகலிடைப், பூண்ட ஜயத்திருவோடுங் கங்கா, புரிபுகுந்தருளினதாக' அவன் மெய்க்கீர்த்தியிற் காணப்படுகிறது[2]. ஆகையால் அவன் வேங்கியை மீட்டுக்கொண்டு விஜயாதித்த

1. சக்கரக்கோட்டம் என்பது பஸ்டர் நாட்டிலுள்ள ஒரு நகர் என்று பண்டிட் ஹீரலால் நிரூபித்திருக்கிறார்; Epi. Ind. IX. 178.

2. S. I. I. iii. No. 30, மணிமங்கல சாசனத்தில், 'விசைகொடுமீண்டு விட்டருளி யிகலிடைப் பூண்ட ஜயத்திரு' என்று காணப்படுவதால், சோழன் ஒருவாறு தகையப்பட்டானென்று டாக்டர் ஹுல்ஷ் பொருள்கொள்ளுவர். ஆனால் சந்தர்ப்பத்தை நோக்கின் இவ்வர்த்தம் பொருந்தாது. 'இகல்' என்பதற்கு இங்குப் 'போர்' என்பது பொருளேயொழியப் பகைமையல்ல.

னுக்குத் திரும்பக் கொடுத்தருளினனென்று ஏற்படுகிறது[3]. விக்கிரமாதித்தன் கலிங்க சக்கரக்கோட்டத்தரசரிடம் சென்று அவர்களையும் தனக்கு உதவிபுரியத் தூண்டியிருத்தல் வேண்டும்; அதனாலே தான் வீரராஜேந்திரன் கலிங்கத்திற்கும் சக்கரக்கோட்டத்திற்கும் செல்லவேண்டியதாயிற்று.

அவ்வாறு விக்கிரமாதித்தன் சோழனுக்கு விரோதமாக வேங்கிக்குச்சென்று திரும்புகையில், கிருஷ்ணாநதிக்கரையில் தன் தந்தை ஆகவமல்லன் குருவர்த்தியில் ஜலசமாதியடைந்ததை (கி. பி. 1068) மிக்க சோகத்துடன் கேள்வியுற்று, தந்தைக்குத் தான் செய்யவேண்டிய சடங்குகளைக் கிருஷ்ணாநதியிற் செய்து முடித்தான்.

சற்றேறக்குறைய இருபது வருஷங்களாக (கி. பி. 1047-1068) விக்கிரமாதித்தன் தனக்கு இளவரசுப் பட்டமில்லாதிருந்தும் தகப்பனுக்கு இன்றியமையாத பேருதவிபுரிந்து தனது புஜபலபராக்கிரமத்தையும், புத்திசாதுர்யத்தையும், ராஜதந்திரத்தையும் வெளியிட்டான்.

---

3. சளுக்கிராஜராஜன் இறந்ததும், அவன் தம்பி விஜயாதித்தனுக்கும் மகன் ராஜேந்திரசோழனுக்கும் வேங்கி ராஜ்யத்தைப்பற்றி விரோதமிருந்ததென்று டாக்டர் ஹூல்ஷும் (S. I. I. iii. 128), டாக்டர் கிருஷ்ணசுவாமி ஐயங்காரவர்களும் (J. S. I. A. I. 56.) அபிப்பிராயப்படுகின்றனர். வீரராஜேந்திரன், வேங்கிநாட்டை மீட்டுக்கொண்டு தன்னிடமடைக்கலம் புகுந்த விஜயாதித்தனுக்கு அதை அருளினதாக (S. I. I iii. No. 30.) சொல்லியிருப்பதைக் கொண்டே, வீரராஜேந்திரன் விஜயாதித்தன்பக்கமும் விக்கிரமாதித்தன் முதலியோர் ராஜேந்திரசோழன்பக்கமும் சேர்ந்து, சிற்றப்பனுக்கும் தமையன் பிள்ளைக்கும் வேங்கிராஜ்ய விஷயமாக உண்டான சண்டையில் தலையிட்டுக் கொண்டனரென்று ஊகிக்கிறார்கள். அது சரியல்ல என்பதற்குக் காரணங்கள் கீழ்வருவன:—தந்தைக்குப் பிறகு ராஜேந்திரசோழனே வேங்கியை யாண்டானென்று பல சாசனங்களால் விளங்குகிறது (Epi. Ind. IV. 227; VI. 35). மேலும் செல்லூர்ச்சாஸனத்தில் (S. I. I. I. 59.) ராஜேந்திரசோழன் திக்குவிஜயஞ்செய்ய எண்ணங்கொண்டோ அல்லது சோழராஜ்ய ஆசையாலோ, வேங்கியில் தன் சிற்றப்பனாகிய விஜயாதித்தனைத் தனக்குப் பிரதிநிதியாக வைத்தது வெளிப்படையாகச் சொல்லப்பட்டிருக்கிறது. குலோத்துங்கனுக்குச் சோழராஜ்யம் கிடைத்தபின்னும் விஜயாதித்தன் தன் வாழ்நாள் முழுதும் (கி. பி. 1062-1077) வேங்கியைப் பாதுகாத்துவந்ததாகத் தெரியவருகிறது. அவன் இறந்தபின்னும், சிங்கம் போன்றவனென்று புகழ்ந்தே குலோத்துங்கனால் கூறப்பட்டிருக்கிறான். அவனுக்குப் பிறகே ராஜேந்திரசோழன் (குலோத்துங்கன்) வேங்கியை ஆளத் தன் மக்களை யனுப்பினான். கீழைச்சளுக்கி வமிசா

ஆகவமல்லனும் அவனைத் தன்னோடு யுத்தங்களுக்கு அழைத்துச் சென்று நன்றாகப்பழக்கித் தன்னிலும் மேம்பட்ட வீரனாகச் செய்வித்தான்.

## மூன்றும் அத்தியாயம்.

### இரண்டாம் சோமேசுவரன் அரசாட்சியும் விக்கிரமாதித்தனும்.
### (கி. பி. 1068—1076)

ஆகவமல்லன் என்னும் முதலாம்சோமேசுவரன் கி. பி. 1068-ம் வருஷம் மார்ச்சுமாதம் 29-ம்தேதி துங்கபத்திரைக்கரையில் குருவர்த்தி என்னுமிடத்தில் ஜலசமாதியடைய, அதுகாறும் இளவரசனாயிருந்த சோமேசுவரன் அவனுக்குச் செய்யவேண்டிய சடங்குகளைச் செய்து முடித்து, புவனைகமல்லன் என்ற பிருதுடன் ஏப்ரல் மாதம் 11-ம் தேதியில் ராஜ்யபாரத்தை வகித்தான்[1]. சோழவீரராஜேந்திரன் இது சண்டைக்குத் தக்க சமயமென்று நினைத்து 'சோமிவரன் கட்டிய கண்டிகை யவிழ்ப்பதன் முன்னம்' [2], கம்பிலியைச் சுட்டு, (அனந்தபூர் ஜில்லாவைச் சார்ந்த

இரண்டாம் சோமேசுவரன் முடி சூடியது. (கி. பி. 1068)

---

வளிகளிலெல்லாம் (பிரதிநிதியாகையால்) விஜயாதித்தன் பெயரே காணப்படாமல் ராஜராஜனுக்குப்பின் ராஜேந்திரசோழன் பெயரே வழங்குகிறது. மேலும் விக்கிரமாங்கதேவசரிதத்திலும் சோழநாட்டை அடைவதற்கு முன்னம் ராஜேந்திர சோழன் வேங்கிநாதராஜிகனென்று கூறப்பட்டிருக்கிறான். ஆகையால் ராஜேந்திரசோழனுக்கும் அவன் சிற்றப்பனாகிய விஜயாதித்தனுக்கும் வேங்கி விஷயமாக விரோதம் இருந்ததென்பது ஒப்பத்தக்கதல்ல.

1. Epi. Car. VII. Sk. 136. dated 1068. A. C.

2. S. I. I. III. No. 83. dated 1068 A. C. இதற்கு 'இரண்டாம் சோமேசுவரனை ராஜபதவியினின்று நீக்கு முன்னமே' என்று பொருள் கொள்ளல் வேண்டும் (Vide S. I. I. iii. No. 84). ஆனால் இதற்கு இரண்டாம் சோமேசுவரன் 'இளவரசுகண்டிகையை அவிழ்த்து (யுவராஜாபதவியைவிட்டு) அரசனாகுமுன்னே' என்று டாக்டர் கிருஷ்ணசாமி ஐயங்காரவர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள் (J. S. I. A. Vol. I. 60). அது பொருந்தாது. கண்டிகை-ராஜசின்னமேயொழிய இங்கு யுவராஜ அடையாளமல்ல; ஏனெனில் இரண்டாம் சோமேசுவரன் சிலநாட்களுக்கு முன்னமே அரசனானான். (Vide Epi. Car. VII. Sk. 136. 'A new reign; (fit only) for a hero'). கண்டிகை ராஜனுக்கு உரித்து என்பது மணிமங்கல சாசனத்தால்விளங்குகிறது. 'வல்லவனுக்கிச் சுந்தர கண்டிகைகட்டி' S. I. I. III. No. 30.

குத்தியைமுற்றுகைபோட்டு,(ராயச்சூர்ஜில்லா இடைத்துறையிலுள்ள) கரடிக்கல்லில் ஜயஸ்தம்பமொன்று நாட்டினன். இவைகள் சோமேசுவரனது பலக்குறைவை ஒருவாறு விளக்கும்.வனவாசிக்கு இறைவனான லக்ஷ்மண்ணன் அச்சமயம் சளுக்கியருக்குப் பேருதவிபுரிந்து ஓர் ஊன்றுகோலாயிருந்தனன்[1].

இஃது இங்ஙனமிருக்க, விக்கிரமாதித்தன் வேங்கியிலிருந்து திரும்பி, தமையனைத் தேற்றக் கலியாணபுரத்துக்கு விரைந்து வந்தான். சோமேசுவரனும் அவனை அன்புடன் எதிர்கொண்டு அழைத்தான். இருவரும் பிதாவின் பிரிவாற்றாமல் வருந்திச் சில காலம் மிகுந்த ஒற்றுமையோடிருந்தனர். விக்கிரமாதித்தன் சண்டையிற் கிடைத்த பொருள்களையும் தமையனிடம் கொடுத்து அவன் சொற்படி நடந்து வந்தான்[2].

**விக்கிரமாதித்தன் இளவரசானது. (கி. பி. 1068)**

யுவராஜனாக இருந்த காலத்தில் விக்கிரமாதத்தன் பல்லவ அரசனை ஜயித்ததாக ஒரு சாசனத்தில்[3] சொல்லப்பட்டிருப்பதால், சோமேசுவரன் விக்கிரமாதித்தனை இளவரசனாக நியமனஞ்செய்திருத்தல் வேண்டும். அப்பொழுது சோமேசுவரனுக்குச் சற்றேக்குறைய நாற்பது பிராயமானபடியாலும் அதுவரையில் புத்திரரின்மையாலும் பராக்கிரமசாலியான தன் தம்பியை யுவராஜனாகச் செய்தானென்பது அசம்பாவிதமாகாது.

**சோமேசுவரன் நெறிதவறி நடந்தது**

சிலகாலத்திற்குப் பிறகு சோமேசுவரன் நெறிதவறி நடக்கலுற்றான். உலோபகுணம்மேலோங்க, பலர் மேலும் குற்றஞ்சாட்டி அவர்கள்மனம் நோகச்செய்தான்.மேன்மேலும் வரிகளை விதித்துக் குடிகளை வருத்தினன். பெரியோர் சொல்லை அசட்டைசெய்து செருக்கடைந்தமையால் குந்தளதேசம் பெருமையில் குன்றிற்று. சளுக்கியரது கீர்த்தியும் மலினமடைய ஆரம்பித்தது.[4]

---

1. Epi. Car. VII. Sk. 136.

2. விக். சரி. IV. 69 - 76.

3. கால்கநாத் சாசனம், Bom. Gaz. IV. 442; Epi. Car. VII. Sk. 136. 'Junior to me is king Vikrama'

4. விக். சரி. IV. 97; V.9; தேங்கலி, கலிகே, கதக்சாசனங்கள், Bom. Gaz. IV- 444.

அதுகண்டு விக்கிரமாதித்தன் வருந்தி, தமையனை நல்வழிக்குக் கொண்டுவரப் பிரயத்தனப்பட்டும் பயனிலதாக, தமையனுடன் பிணக்க முற்று, தம்பி ஜயசிங்கனேடு கலியாணபுரத்தை விட்டுச் சென்றான். கோபகாபட்டணத்தை (கோவாவை) ராஜதானியைக்கொண்டு பம்பாய் மாகாணத்தின் வடபாகமாகிய கொங்கணத்தையாண்டுவந்த சிற்றரசனான கதம்பவமிசத்து முதலாம் ஜயகேசியும்[1] ஆலுப (அலுபி) தேசத்தரசனும் அவனைப்பணிந்து திறையிட்டனர். அப்பால் விக்கிரமாதித்தன் கேரள தேசத்தரசனைத் தாக்கி, ஜயங்கொண்டு திடீரென்று தென்புறமாகச் சோழராஜ்யத்துக்குள் பிரவேசிக்க, வீரராஜேந்திரன் திடுக்குற்றுச் சமாதானம் செய்துகொள்ளுமாறு துங்கபத்திரைக்குவந்து தன் பெண்ணை அவனுக்கு மணம் செய்வித்தான் என்று பில்ஹணர்[2] கூறியுள்ளார். அச்சமயம் விக்கிரமாதித்தனும் வீரராஜேந்திரனும் விரோதம் நீங்கினர்களென்பது சாசனங்களாலும்[3] விளங்குகிறது.

விக்கிரமாதித்தன் சோழரோடு உறவாடினது. (கி. பி. 1069.)

விக்கிரமாதித்தன் தன்மனைவியோடு துங்கபத்திரைக்கரையில் சந்தோஷமாகக் காலங்கழித்துவருகையில், தன் மாமனாகிய வீரராஜேந்திரன் கி. பி. 1070-ல் இறந்தானென்றும், சோழதேசம் குழப்பமடைந்ததென்றும் கேள்வியுற்று, உடனே காஞ்சி, கங்கைகொண்டசோழபுரங்களுக்குச்சென்று தன் மைத்துனனான அதிராஜேந்திரதேவனைச்[4] சிங்காதனத்திலிருத்தி விக்கிரமாதித்தன் துங்கபத்திரைக்குத் திரும்பினான். திரும்பினவுடனே சோழநாட்

1. J. B. R. A. S. IX. 282.

2. விக். சரி. V. 20; VI. 3.

3. J. B. R. A. S. IX. 279-ல் கதம்பஜயகேசி அவ்விருவரையும் சிநேகிதராக்கினதாகச் சொல்லப்பட்டிருக்கிறது ; S. I. I. III. No. 84.

4. கலிங்கத்துப்பரணியில் 'குந்தளரைக் கூடற்சங் கமத்துவென்ற கோனபயன் (வீரராஜேந்திரன்) குவலயங்காத் தளித்த பின்னை இந்த நிலக்குலப்பாவை யிவன் (குலோத்துங்கன்) பாற் சேர வென்னதவஞ் செய்திருந்தாள்' (VIII. 29) எனக் காணப்படுகிறது ; ஆயினும் வீரராஜேந்திரனுக்குப் பின்னும் (குலோத்துங்கனுக்கு முன்னும்) ஒருவன் சோழராஜ்யத்தை ஆண்டானென்பது S. I. I. III. 57-ல் விளங்குகிறது. இச்சாசனத்தில் வீரராஜேந்திரன் கடைசி வருஷத்து விஷயம் குறிக்கப்படுகிறது. அவன் அதி ராஜேந்திரதேவனவன். மேலும் விக்கிரமசோழனுலா, 23-ம் கண்ணியில்

டில் மறுபடியும் குழப்பமுண்டாக அதில் அதிராஜேந்திரதேவன் கொல்லப்பட்டான். அவன் காலத்து நிகழ்ந்த குழப்பம் கலிங்கத்துப் பரணியிலும்[1] இரண்டாம் ராஜேந்திரசோழன் (குலோத்துங்கன்) சாசனங்களிலும்[2] விரிவாகக் காணப்படுகின்றது.

அதிராஜேந்திரதேவன் கொல்லப்பட்டதனால், புகழ்பெற்ற ராஜராஜன் முதலாகவந்த சோழவமிசம் ஒருவாறு முடிவுற்றது. உடனே வேங்கிநாதராஜிகன் (இரண்டாம் ராஜேந்திரசோழன்) குலோத்துங்கன் என்ற பேரோடு சோழராஜ்யத்தை அடைந்தான்[3]. அவன் சந்திரகுலத்துச் சளுக்கியனாயினும் தாய்வழியில் சூரியகுலத்துச் சோழர் வழி வந்தவனாகையால்[4] அதிராஜேந்திர தேவ

---

'அங்கவற்பின் (கூடல்சங்கமத்துவீரன்) காவல்புரிந் தவனிகாத்தோனும்' என்று கூறப்பட்டவனும் அதிராஜேந்திரதேவனே. இவன் வீரராஜேந்திரன் மகனென்பது, விக். சரி. 'சோளசூனோ' என்பதனால் தெரிகிறது.

1. "மறையவர் வேள்வி குன்றி மனுநெறி யனைத்து மாறித்
துறைகளோ ராறு மாறிச் சுருதியு முழக்க மோய்ந்தே"
"சாதிக ளொன்றோ டொன்று தலைதடு மாறியாரு
மோதிய நெறியி னில்லா தொழுக்கமு மறந்து போயே"
"ஒருவரை யொருவர் கைம்மிக் கும்பர்தங் கோயில் சோம்பி
யரிவையர் கற்புச் சோம்பி யரண்களு மழிய வாங்கே"
X. 27 - 29.

2. "தென்றிசைத், தேமரு கமலப் பூமகள் பொதுமையும்
பொன்னி யாடை நன்னிலப் பாவையின்
தனிமையுந் தவிர்த்து" S. I. I. III. No. 68.
"அருக்க னுதயத் தாசையி விருக்கும்
கமல மனைய நிலமக டன்னை
முந்நீர்க் குளித்த வந்நா ளிருமா
லாதிக் கேழ லாகியெடுத் தன்ன
யாதுஞ் சலியா வகையினி தெடுத்துத்
தன்குடை நிழற்கீ ழின்புற விருத்தித்
திகிரியும் புலியுந் திசைதொறு நடாத்தி'—S. I. I. III. No. 66.

3. விக். சரி. VI. 6 . 26. இவனுடைய முதல் நான்கு ஆண்டுக் கல்வெட்டுக்கள் இவனை இராஜேந்திரனென்றே கூறுகின்றன. பிறகே குலோத்துங்கன் என்று கூறிக்கொள்ளுகிறான்.

4. பக்கம், 26: 1 பார்க்க; 'உபயகுலோத்தமன்' கலிங்கத்துப்பரணி, [1. 2.
முன் பக். 25-ல் கலி - பரணி X. 3. பார்க்க.

னுக்குப்பிறகு சோழநாட்டரசுக்கும் இவனே தௌஹித்திர பாத்தியத்தால் ஒருவாறு [1] உரியவனாயினான்.

துங்கபத்திரைச் சண்டையும் சோமேசுவரன் அரசிழந்ததும். (கி. பி. 1076)

அதைத் தடுக்கவெண்ணி, விக்கிரமாதித்தன் சோழநாட்டின் மேல் படையெடுக்கமுயன்றான். ராஜேந்திர சோழனும் விக்கிரமாதித்தனுக்கெதிராக, சோமேசுவரனைத் தன்னோடு சேர்ந்துகொள்ளும்படி தூண்ட, அவனும் அதற்கிணங்கினான். ஆகவே, விக்கிரமாதித்தனுக்கும் அவ்விருவருக்கும் கி. பி. 1076-ல் [2] துங்கபத்திரைக்கரையில் பெரும்போர் விளைந்தது. எதிரிகள் இருவருக்கும் இடையே விக்கிரமாதித்தன் நின்று அவர்களை ஒன்றுசேர ஒட்டாமல் தன் சாமர்த்தி

---

1. ராஜேந்திரசோழன் சோழநாட்டுக்கு இளவரசாக்கப்பட்டான் என்பது கலிங்கத்துப்பரணியில் காணப்படுகின்றது. இவன் பிறந்ததும்,

" அலர்மழைபொன்மழைபொழியவதுகண்டு கங்கைகொண்டசோழன்றேவி
குலமகடன்குலமகனைக்கோகனத மலர்க்கையானெடுத்துக்கொண்டே "

" அவனிபர்க்குப்புரந்தரனாமடையாளமவயவத்தினடைவேநோக்கி
யிவனெமக்குமகனாகியிரவிகுலம்பாலிக்கத்தகுவனென்றே " [ன்றுந்

" திங்களினிளங்குழவிசெம்மலிவனென்றுஞ் செய்யபரிதிக்குழவியையனிவனெ
தங்களின்மகிழ்ந்திருகுலத்தரசர்தாமுந் தனித்தனியுவப்பதோர்தவப்பயனு
[மொத்தே "

" இசையுடனெடுத்தகொடியபயனவனிக்கிவனையிளவரசில்வைத்தபிறகே
திசையரசருக்குரியதிருவினைமுகப்பதொரு திருவுளமடுத்தருளியே "

X. 5, 6, 7 & 18.

'இளங்கோப் பருவத்துச், சக்கரக் கோட்டத்து விக்கிரமத் தொழிலால், புதுமணம்புணர்ந்து வன்களிற் றீட்டம், வயிராகரத்துவாரி' (S. I. I. III. No. 68)

ஆனால், கங்கைகொண்டசோழனுக்கு ராஜாதிராஜன் ராஜேந்திரன் ராஜமகேந்திரன் வீரராஜேந்திரன் என்ற நான்கு பிள்ளைகளிருந்தமையால் தௌஹித்ரனை அவன் இளவரசாக்கக் காரணமில்லை. வீரராஜேந்திரனுக்கு அதிராஜேந்திரதேவன் என்ற ஒரு புத்திரன் இருந்தமையால் (விக். சரி. 'சோளசூனோ') அவனும் குலோத்துங்கனை இளவரசாக்க நியாயமில்லை. தௌஹித்திர பாத்தியத்தால் சோழராஜ்யத்தைக் கைப்பற்றின குலோத்துங்கனை முறைமையில் அதைப்பெற்றவன் என்று விளக்கச் சயங்கொண்டாரது கற்பனையா ?

2. இரண்டாம்சோமேசுவரன் கடைசிசாசனத்தின் தேதி, கி. பி. 1076. ஜனவரி. 24 (K. L. I. S. I. No. 178)

யத்தினல் தடுத்தான். ஹொய்சள எரியங்கனும் கதம்ப ஜயகேசியும் திரிபுவனமல்லபாண்டியனும் சேவுணயாதவனும் வேறு பல சிற்றரசரும்[1] விக்கிரமாதித்தனுக்குப் பேருதவிபுரிந்தனர். தம்பி ஜயசிங்கனும் உடனின்று உதவினனென்பது சொல்லாமலே விளங்கும். பில்ஹணர் கூறுமாறு[2] ராஜேந்திரசோழன் முதுகிட்டோடினனென்று சொல்ல இடமில்லையாயினும்[3] சோமேசுவரன் தோல்வியடைந்து சிறைபிடிக்கப்பட்டு ராஜ்யத்தை இழந்தானென்பது மாத்திரம் தெளியக்கிடக்கின்றது.

**விக்கிரமாதித்தன் தமையனை வஞ்சித்தவனு? அல்லன்.**

விக்கிரமாதித்தன், தமையனேடு சண்டைசெய்ய நேர்ந்தபொழுதும், சண்டையில் ஜயமடைந்து முடிசூட்டிக்கொள்ளுஞ் சமயத்திலும், மனமில்லாதிருந்தும் சிவபிரான் கட்டளைக்கிணங்கியே அவ்வாறு செய்தானெனவும் அவனுக்குச் சளுக்கிய

---

1. Epi. Car. V. Ak. 102 (a); Epi. Car. VII. Sk. 124 dated 1077 A. C; Epi. Car. VII. Cl. 33, ஹேமாத்ரி விரதகண்டம்.

2. விக். சரி. VI. 26-99.

3. "இந்நாள், பிற்குலப் பிறைபோ னிற்பிழை யென்னுஞ்
சொல்லெதிர் கோடிற் றல்லது தன்கை
வில்லெதிர் கோடா வேள்புலத் தரச
ரளத்தியி விட்ட களிற்றின நீட்டமும்"

S. I. I. III. 73. சோழபுரசாசனம்

"இந்நாள், பிற்குலப்.....................
வில்லெதிர் கோடா விக்கலன் கல்லதர்
நங்கிலி துடங்கி மணலூர் நடுவெனத்
துங்கபத் திரையள வெங்கணும்
பட்டவெங் களிறும் விட்டதன் மானமுங்
கூறிய வீரமுங் கிடப்ப"

S. I. I. III. 69. திருக்கழுக்குன்றசாசனம்.

"துங்கபத்திரைச்செங்களத்திடைச்சோளசேகரன்வாளெறிந்தபோர்
வெங்கதக்களிற்றின்கடத்தினல்வெளியடங்கவேமிசைகவித்தவே"

கலிங்கத்துப்பரணி, IV. 7

'தண்டநாயகர்காக்குநவிலையிற்கொண்டவாயிரங்குஞ்சரமல்லவோ'—XI. 74.
'கிடைக்கப்பொருதுமணலூரிற்கீழ்நாளட்டபரணிக்கூழ்'—XIII. 93.

அரசுகிடைத்தது முழுதும் தெய்வசங்கற்பமென்றும் பில்ஹணர் சொல்லுகிறார். சிவபிரான் பெயரை பில்ஹணர் வருவித்துக்கொண்ட இடங்களிலெல்லாம் விக்கிரமாதித்தன் நெறிதவறி நடந்தவனே யென்றும், துரோக சிந்தையோடு நெடுநாள் சூழ்ச்சிசெய்து சாமர்த்தியமாகத் தமையனிடமிருந்து அரசை யபகரித்துக் கொண்டா னென்றும் டாக்டர் பீலர் அபிப்பிராயப்படுகிறார்.[1] இம் மாறுபாடான அபிப்பிராயங்களுள் உண்மை யாதென விசாரிப்பது இன்றியமையாததாகிறது. ஈண்டு, சிவபிரான் பெயரைக் கொணர்ந்ததனால் விக்கிரமாதித்தனைப் பற்றிக் கெடுதலாக அனுமானிக்க இடமில்லை. நெறி தவறி நடக்கும் சமயங்களில் மட்டுமே சிவபிரான் பெயரைப் பில்ஹணகவி கொணர்ந்தாரென்பது ஒவ்வாது; ஏனென்றால் கரஹாட தேசத்து வித்தியாதர சிலாஹாரன் தன் பெண்மணியான சந்திரலேகாவை இன்னவனுக்கு மணஞ்செய்து கொடுப்பதென்று விளங்காமல் மனக்குழப்ப மடைந்திருக்கையிலும், பார்வதிதேவியின் கட்டளையைக்கொண்டே சுயம்வரத்திற்கு ஏற்பாடு செய்ததாகப் பில்ஹணரே மற்றோரிடத்திற் கூறியிருக்கிறார். எனவே சிவபிரான் பெயரைக் கவி வருவித்துக்கொண்ட இடங்களிலெல்லாம், முதலில் உண்டாகிய மனத்தடுமாற்றம் நீங்கித் தெளிவு பிறந்ததென்பதே பொருள் போலும்.

இது நிற்க, விக்கிரமாதித்தன் தம்பியுடன் கலியாணபுரம் விட்டுச் சென்று கதம்பஜயகேசியுடனும் ஆலுபசிற்றரசனுடனும் உறவாடின நோக்கம் யாது? பகைவனான வீரராஜேந்திர சோழன் பெண்ணை மணந்ததன் காரணம் என்ன? அவைகளெல்லாம் அவர்கள் துணைகொண்டு தமையனை அரசிலிருந்து நீக்குவதற்காகவே என டாக்டர் பீலர் அபிப்பிராயப்படுகிறார்; ஆனால் அவ்வாறு துணிந்துரைக்க ஆதாரமில்லை. வீரராஜேந்திரனது ஏழாம் வருஷத்திய பெரும் பேர்ச் சாசனத்தில்[2] (கி. பி. 1069) 'சோமீசுவரன், கன்னரதேசங் கைவிடத் துரத்தித், வந்தடி வணங்கின சளுக்கி விக்கிரமாதித்தனுக் கெண்டிசை திகழக், கண்டிகை சூட்டி யிரட்டபாடி, யேழரை யிலக்கமு மெறிந்து' கொடுத்தருளினதாகக் காணப்படுகிறது. ஹானின

1. பீலர்பதிப்பு விக். சரி. முகவுரை, 37.
2. S. I. I. iii. No. 84.

டகல்லி சாசனத்தாலும்[1] ஹூளேகுண்டி சாசனத்தாலும்[2] விக்கிரமாதித்தன் கி. பி. 1071, 1073-லேயே மஹாராஜாதிராஜன், பரமேசுவரன், பரம பட்டாரகன், திரிபுவனமல்லன் என்ற பல விருதுகளுடன் இரட்டபாடியின் ஒரு பாகமாகிய கோகலி, கடம்பலிகே என்னும் நாடுகளை ஆண்டுவந்ததாகத் தெரியவருகிறது. கி. பி. 1076-வரையில் சோமேசுவரனும் இரட்டபாடியை அரசாண்டான் என்று அவனது சாசனங்களால் நாம் அறிகின்றோம். ஆகையால் கி. பி. 1070-1076 வரையில் விக்கிரமாதித்தனும் சோமேசுவரனும் இரட்டபாடியை இரண்டு பாகங்களாக ஆண்டுவந்தார்கள்.[3] ஆயினும், விக்கிரமாதித்தன் வீரராஜேந்திரனுடன் சேர்ந்து சோமேசுவரனைத் துரத்தி அவன் ராஜ்யத்தை வஞ்சித்தடைந்தான் என்றுரைக்க இடமில்லை. சோமேசுவரன் கன்னரதேசத்தை விட்டோடும்படி வீரராஜேந்திரனால் துரத்தப்பட, சளுக்கிய அரசு சீர்குலைவதைக் காணப் பொறாதவனாய், விக்கிரமாதித்தன் சோழசளுக்கிய விரோதங்களை மாற்ற வீரராஜேந்திரன் பெண்ணை மணந்து, அவன் துணைகொண்டு, முன்னமே சளுக்கிய ராஜ்ய பரிபாலன விஷயமாய்த் தமையனுடன் சிறிது மனஸ்தாபப் பட்டதால், இரட்டபாடியின் ஒரு பாகத்தைத் தானே அடைந்தான் போலும்.

கி. பி. 1070-ல் விக்கிரமாதித்தன் மாமனாகிய வீரராஜேந்திரன் இறந்தான். பிறகு சோழநாட்டிற் குழப்பம் உண்டாக, அவன் மகனும் தன் மைத்துனனுமாகிய அதிராஜேந்திரதேவனைச் சோழநாட்டில் நிலைநிறுத்தவும் புதிதாக ஏற்பட்ட சம்பந்தத்தை ஸ்திரப்படுத்தவும், விக்கிரமாதித்தன் பிரயத்தனப்பட்டும் அவைகளெல்லாம் பயனில்லாமற் போய்விட்டன. அதிராஜேந்திர தேவன் இறந்ததும் வேங்கியரசனாகிய இரண்டாம் ராஜேந்திரசோழன் (குலோத்துங்கன்) சோழராஜ்யத்தை அடைந்தான். வேங்கியும் சோழநாடும் இவ்வாறு ஒருங்கு சேர்ந்ததால் கோதாவரி முதல் கன்னியாகுமரி வரையில் சோழராஜ்யம் பரவிற்று. அதனால் சளுக்கிய

1. Epi. Rep. No. 127 of 1913.
2. Epi. Car. XI. Cd. 82.
3. Ind. Ant. XLVII; Epi. Car. VII. SK. 124.

ராஜ்யத்திற்கு மிக்க பலக்குறைவு நேருமென்று விக்கிரமாதித்தன் சோழ நாட்டின் மேல் படையெடுக்க முயன்றான். அதைக்கண்ட குலோத்துங்கனும், விக்கிரமாதித்தன் கலியாணபுரத்தை விட்டுச்சென்றதும், ஜயகேசி ஆலுபதேசத்தரசன் முதலியவர்களுடன் உறவாடினதும், வீரராஜேந்திரன் பெண்ணை மணந்து இரட்டபாடியின் ஒரு பாகத்தைக் கைப்பற்றி ஆண்டுவந்ததும், அதிராஜேந்திரதேவனுக்காகக் காஞ்சி கங்கைகொண்ட சோழபுரம் சென்றதுமாகிய எல்லாம் வேறுதவிகொண்டு சளுக்கிய சிங்காதனத்தை நாளடைவில் முழுதும் அபகரித்துக் கொள்ளவேண்டுமென்கிற கெட்ட எண்ணத்துடன் என்று கபடமாக[1] சோமேசுவரனுக்குச்சொல்லி, அவனைத் தன்னோடு சேர்ந்து கொள்ளும்படி தூண்டினான். சோமேசுவரனும் அம்மொழி உண்மையென்று மயங்கிக் குலோத்துங்கன் தூண்டுகோலுக்கிணங்கினான். இரட்டபாடி விஷயமாய்ப் பெரிதும் மனஸ்தாபப்பட்ட சகோதரர் இப்போது [2] தீராவிரோதிகளானார்கள். குலோத்துங்கனைச் சோணாட்டில் நிலைக்காதபடி தடுக்க விக்கிரமாதித்தன் சேகரித்த படையானது, துங்கபத்திரைச் சண்டையில் (கி. பி. 1076) தமையனைத் தோற்கச் செய்து இரட்டபாடி முழுமையும் பிடித்துக்கொள்ள உபயோகப்பட்டது. பலசாலியான குலோத்துங்கன் வேங்கி சோணாடுகளுக்கு அதிபதியாயிருக்க, அவனுக்கு ஈடாகச் சளுக்கிய சிங்காதனத்திலும் வல்லவனான ஓர் [3] அரசனில்லாவிடில் சளுக்கிய ராஜ்யத்திற்கு ஊனமென்றெண்ணித் தமையனை நீக்கித் தானே முழுராஜ்யபாரத்தையும் விக்கிரமாதித்தன் வகித்தான். அவ்வாறு அச்சமயம் செய்யாவிடில் சளுக்கிய ராஜ்யமே சீர்குலைந்து அழிந்துவிட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. விஷயங்கள் இவ்வாறிருக்க விக்கிரமாதித்தனுக்குச் சளுக்கிய அரசு கிடைத்தது முழுதும் தெய்வசங்கற்பம் என்றாவது வஞ்சகமான முயற்சியால் என்றாவது துணிந்துரைக்க இடமில்லை. உண்மை

---

1. ராஜிகன் (ராஜேந்திரசோழன்) சூழ்ச்சியைப் பாழாக்கின பாண்டியன் என்று விக்கிரமாதித்தனக்குதவிபுரிந்த திரிபுவனமல்லபாண்டியன் கூறப்பட்டிருக்கிறான்; Epi. Car. VII. Cl. 33.

2. கி. பி. 1074-ம் வருஷத்து நீரல்கிசாசனத்தில் சோமேசுவரன் விருப்பத்தின்படி விக்கிரமாதித்தன் ஒரு தானங்கொடுத்தமை சொல்லப்பட்டிருக்கிறது (Bom. Gaz. IV. 444.) ஆகையால் அதுவரையில் சகோதரர் பகைத்துக் கொள்ளவில்லைபோலும்.

3. Epi. Car. VII. Sk. 124. 'Why share it with another ?'

யாதெனின், தந்தை ஆகவமல்லன் காலத்தில் சற்றேறக்குறைய இருபது வருடங்களாக (கி. பி. 1047-1068) இளவரசுப் பட்டமின்றிச் சளுக்கிய ராஜ்யத்தின் நன்மைக்காக உழைத்த விக்கிரமாதித்தன், தமையன் காலத்தில் அரசு சீர்குலைவதைக் காணப்பொறுது அவனுடன் மனஸ்தாபப்பட்டுக் கலியாணபுரம் விட்டுச் சென்றான். பிறகு சோமேசுவரன் வீரராஜேந்திரனால் கன்னரதேசத்தைக் கைவிடும்படி துரத்தப்பட, விக்கிரமாதித்தன் சோழ சளுக்கிய விரோதங்களை மாற்றும்பொருட்டுப் பகைவனான வீரராஜேந்திரன் பெண்ணையும் மணந்து அவன் ஜயித்த இரட்டபாடியின் ஒரு பாகத்தைத் தான் கைக்கொண்டு சோழரால் நேர்ந்த ஆபத்தை ஒருவாறு விலக்கினான். சோமேசுவரனுக்கு நாற்பத்தெட்டு வயதாகியும் பிள்ளை இல்லாமலிருப்பதைக் கண்டு இரட்டபாடியின் ஒருபாகத்தை ஆள்வதில் முழுதும் திருப்தியடைந்தவனாய், சளுக்கிய சிங்காதனம் கிடைத்தபோது கிடைக்கட்டும் என்று விக்கிரமாதித்தன் இருந்தான்போலும். விரோதியும் பலசாலியுமான குலோத்துங்கனைச் சோழநாட்டில் நிலையாதபடி தாக்கப் படையெடுத்தபோது சோமேசுவரன் குலோத்துங்கனுடன் சேர அவனை அரசுநின்றும் நீக்கி விக்கிரமாதித்தன் முழுராஜ்ய பாரத்தையும் தானே வகித்தான். சோமேசுவரன் நெறிதவறி நடந்து குடிகளை வருத்தியதையும், அரசாளுந் திறமையற்றிருந்ததையும், குலோத்துங்கனோடு சேர்ந்து விக்கிரமாதித்தனை எதிர்த்த குற்றத்தையும் அடியோடு மறந்து, தமையனாயிருந்து ராஜ்யத்தை இழக்க நேர்ந்தமையால் பலரும் அவன்பால் மனமிரங்குகிறார்கள். விக்கிரமாதித்தனது உண்மையான நோக்கத்தைத் தீரவிசாரியாமலே, குலோத்துங்கன் கற்பித்ததையே உண்மையென்று மயங்கி, அவனை ராஜத்துரோகி என்று அவன் மேல் பலரும் பெரும்பழி சுமத்துகிறார்கள். அஃது அவனுக்கு ஒருகாலும் அடாத அபவாதமன்றோ!

## நான்காம் அத்தியாயம்.

### விக்கிரமாதித்தன் அரசாட்சி.
### (கி. பி. 1076 - 1127).

சளுக்கிய விக்கிரம சகாப்தம். (கி. பி. 1076)

1076க்கு முன்பே நாலு ஐந்து வருஷங்களாக (கி. பி. 1071-1706) விக்கிரமாதித்தன் இரட்டபாடியின் ஒரு பாகத்தை மஹாராஜாதிராஜன், பரமேசுவரன், பரம பட்டாரகன், திரிபுவனமல்லன் என்னும் பல பிருதுகளுடன் ஆண்டுகொண்டிருந்த போதிலும் கி. பி. 1706-ல் நடந்த துங்கபத்திரைச் சண்டையில் ஜயமடைந்த பிறகு தமையனைச் சிறையிலிட்டு, சிற்றரசர்கள் புடை சூழவும் குடிகள் கொண்டாடவும் இரட்டபாடி முழுவதையும் அரசாளத் தொடங்கினன். தான் சிங்காதனம் ஏறினதும் தக்ஷிணத்தில் தொன்றுதொட்டு வழங்கி வந்த சாலிவாகன சகாப்தத்திற்குச் சரியாகத் தானும் உஜ்ஜயனி நகரத்துப் பிரபல விக்கிரமாதித்தனைப்போலத் தன் பெயராலேயே சளுக்கிய விக்கிரம வருஷம் என்கிற புதியதொரு சகாப்தத்தை [1] நளசைத்ரசுத்தப்பிரதமையில் [2] ஏற்படுத்தினன். ஹொன்னளே தாலுக்காவில் பசவர் கோயிலுக்கெதிரிலுள்ள ஒரு கல்வெட்டுச்சாசனம் நளசைத்ரசுத்தபஞ்சமியன்று வெட்டப்பட்டுள்ளது[3]. சளுக்கிய விக்கிரம சகாப்தத்தில் இதுவரையில் வெளிவந்த சாசனங்களில் அதுதான் முந்தியது. அச்சகாப்தம் சற்றேறக்குறைய நூறு வருஷகாலம்[4] வழங்கிவந்தது.

விக்கிரமாதித்தன் பட்டாபிஷேக கால நிர்ணயம். (கி. பி. 1706)

சளுக்கிய விக்கிரம சகாப்தத்தின் முதல் வருஷமாகிய நள பால்குனசுத்தபஞ்சமி பிரகஸ்பதிவாரத்தில் பட்டபந்தோற்சவநிமித்தமாகப் பல தானங்கள் செய்யப்பட்டனவென்று வடகெரேசாசனம் [5] கூறுகிறது. சளுக்கிய விக்கிரம சகாப்தத்தில் குறிப்பிட்டிருக்கும் காலவரையறைகள் சரியானவை

---

1. Ind. Ant. VIII. கதக், தேங்கெலி, எடராவிச்சாசனங்கள்.
2. Ind. Ant. XXII. 109, 110.
3. Epi. Car. VII. Hl. 14.
4. Ind. Ant. VIII. சிந்தாசாசனம்.
5. Ind. Ant. VIII. 91.

அல்ல என்று டாக்டர் கீல்ஹார்ன் (Dr Kielhorn) முதலியோரால் கைவிடப்பட்டவற்றை மறுபடியும் பரீசிலனை செய்த டாக்டர் வேங்கட சுப்பையர் சளுக்கியவிக்கிரமசகாப்தம் கி. பி. 1076-ல் ஆரம்பமென்றும், வட்டகெரே சாசனத்திற் குறிப்பிட்டநாள் அவ்வருஷம் பிப்ரவரி மாதம் 11-ந்தேதி வியாழக்கிழமை என்றும் [1] நிரூபித்திருக்கிறார். விக்கிரமாதித்தன் பட்டந்தரித்து பட்டாபிஷேகம் செய்துகொண்ட சுபதினத்தில், ஜயசிங்கனை வனவாசிக்கு மண்டலாதிபதியாகவும் சளுக்கியராஜ்யத்திற்கு இளவரசனாகவும் நியமனஞ் செய்தான்.

**சந்திரலேகாவின் சுயம்வரம். (கி. பி. 1076)**

பட்டாபிஷேகம் நடந்த சிலநாட்களுக்கெல்லாம் விக்கிரமாதித்தன் திக்குவிஜயம் செய்யப் புறப்பட்டு, சோழன் உள்பட பல அரசர்களையும் முதுகிடச்செய்து கலியாணபுரத்திற்குத் திரும்பினான். அப்போது கரஹாடதேசத்திற் சிலாஹாரவமிசத்து வித்தியாதரன்பெண்ணும் ஜகஜ்ஜோதியாக விளங்கினவளுமான சந்திரலேகாவுக்குச் சுயம்வரமென்று கேள்வியுற்று அங்குச் சென்றான். அவ்விடத்தில் வந்திருந்த அயோத்தி சேதி கன்யாகுப்ஜ சர்மண்வதி (சம்பல்நதிதீரம்) கோபாசல கௌட மாளவ கூர்ஜர சோழ பாண்டிய அரசர்களையெல்லாம் மதியாமல் சந்திரலேகா, விக்கிரமாதித்தன் சோழ சளுக்கிய அரசரிருவரையும் ஏககாலத்தில் துங்கபத்திரைச் செங்களத்திடைப் பொருது வாகைசூடியவனென்று நினைத்து அவனுக்கே மாலையிட்டாள். பில்ஹணர் விரிவாகக் கூறியிருக்கும் இவ்விஷயங்கள் சாசனங்களுக்கும் ஒப்பமுடிந்தன. விக்கிரமாதித்தன் மனைவியரில் அவளே சாசனங்களில் மிகுதியாகப் புகழப்பட்டுள்ளாள். அவளுடைய சௌந்தரியத்தைப் பில்ஹணகவி பாதாதிகேசபரியந்தம் பல சுலோகங்களில் விரிவாக வருணித்திருக்கிறார். அவள் பேரழகு வாய்ந்தவளென்பதற்கு யாதொரு ஐயமுமில்லை; ஏனெனில், காஸ்மீர தேசத்தரசனாகிய ஹர்ஷன் (கி. பி. 1089-1101) அவளுடைய உருவம் சித்திரித்திருக்கும் படத்தைக்கண்டே அவளழகில் ஈடுபட்டு மதி மயங்கி, விக்கிரமாதித்தனை வென்று அவளை வலிந்தடையத் துராசைகொண்டு, அவ்வெண்ணம் நிறைவேறும்வரையில் தாம்பூலம் பச்சைக்கருப்பூர

---

1. Some Saka Dates in Inscriptions, 83ff ; Ind. Ant. XLVII.
2. Epi. Car. VII. Sk. 293, 297 ; Bom. Gaz. Ch. IV.

முதலியவற்றை உபயோகிப்பதில்லையென்று வீண்சபதம் செய்து கொண்டான். சந்திரலேகாவின் சுயம்வரம் உண்மையில் நடந்ததா, சிறப்பித்துரைக்க வேண்டிப் பில்ஹணகவி சாதுரியமாகக் கற்பித்தாரா, என்ற கேள்வி எழுகின்றது. கர்னல் டாட் (Col. Tod) எழுதின 'ராஜஸ்தான்' என்னும் நூலிலிருந்தும் பிறநூல்களிலிருந்தும் கி. பி. பன்னிரண்டாவது நூற்றாண்டில் பிருதிவிராஜன் காலத்திலும் சுயம்வரம் நடந்ததாகத் தெரியவருகிறது.

சந்திரலேகா, பட்டராணி (பேரரசி) யாக நெடுநாளிருந்தாள்.

**விக்கிரமாதித்தன் மனைவியரும் மக்களும்.**

விக்கிரமாதித்தன் மனைவியராகிய மயிலால தேவி, சவாலதேவி, லக்ஷ்மதேவி, ஜக்கலதேவி, மலயமாதேவி பிரியகேதளதேவி முதலிய பலருள்ளும் இவளொருத்தியே அவனுளைச் சுகந்தவளாயிருந்து மூன்று மக்களைப் பெற்றாள் [2]. அம்மக்களுள் மயிலாலதேவியென்னும் குமாரி கதம்பவமிசத்து முதலாம்ஜயகேசியின் பேரனை இரண்டாம் ஜயகேசியை மணந்தாள் [3]. மூத்தகுமாரனை ஜயகர்ணன் கி. பி. 1102-ல் பீஜபூர் மண்டலாதிபதியாக இருந்து தந்தைகாலத்திலேயே இறந்தான். இளையவனுகிய சோமேசுவரன், பூலோகமல்லன் என்னும் பிருதுடன் தந்தைக்குப் பிறகு கி. பி. 1127-ல் அரசடைந்தான். அவன் அதிக சமர்த்தனல்லனுகிலும் சகலசாஸ்திர சம்பன்னனுகவும் அபிலஷிதார்த்தசிந்தாமணி என்னும் நூலை இயற்றியவனுகவும் விளங்கினுன்.

**அவன் காலத்திய போர்களும் கலகங்களும்.**

விக்கிரமாதித்தன் கி. பி. 1081-ல் பாலான்வயவமிசத்தைச் சார்ந்த பலவராயனென்பவனைத் தோற்கச்செய்தான் [4]. தம்பி ஜயசிங்கன் வனவாசி, சாந்தலிகே, பெலுவோலா, புலிகெரே முதலாய மாகாணங்களுக்கு கி. பி. 1077-1082-ல் மண்டலாதிபதியாக இருந்து இலக்ஷ்மணன் இராமபிரானிடம் நடந்துகொண்

---

1. ராஜதரங்கிணி, VII. 1119, 1121, 1122, 1124.
2. Bom. Gaz. Ch. IV. 445, 449.
3. J. B. R. A. S. IX & XI. கதம்பசாசனங்கள்.
4. Bom. Gaz. Ch. IV.

டதுபோல, தமையனிடம் அங்கியோங்கியமாக இருந்துவந்தான்[1]. ஆனல், கி. பி. 1082—1087-ல் குடிகளை வருத்திப் பணம் சேகரித்து, சேனையைப் பலப்படுத்திக்கொண்டு சோழ அரசனோடு உறவாடித் தமையனுடைய போர் வீரரையும் தன்பாற் சேரும்படி தூண்டிச் சளுக்கியராஜ்ய முழுவதையும் அபகரிக்க முயன்றான். அவனோடு விக்கிரமாதித்தன் சண்டைசெய்து வனவாசியை அவனிடமிருந்து மீட்டு கதம்பவமிசத்துச் சாந்திவர்மனுக்குக் கொடுத்தான்[2]. குலோத்துங்கனுடன் துங்கபத்திரக்கரையில் விக்கிரமாதித்தன் மற்றொரு முறை சண்டைசெய்தான்; அதில் ஜயாபஜயம் சொல்ல முடியாமலிருந்தது. கி. பி. 1088-ல் நருமதையைக் கடந்து வட இந்தியாவில் கணம்மா முதலியவர்களை விக்கிரமாதித்தன் ஜயித்தான்[3].

விக்கிரமாதித்தனரசாட்சியின் இறுதியில் சற்றேறக்குறைய கி. பி. 1117-ல் ஹொய்சளர் கலகஞ் செய்தனர். அவர்கள் சளுக்கியருக்கு முதலிற் சிற்றரசராயிருந்து உதவிபுரிந்து வந்தவர்கள்[4]. விநயாதித்தன் (கி. பி. 1047 - 1100) தேவபுரி என்னும் துவாரசமுத்திரத்தை (மைசூரிலிருக்கும் ஹளேபீடை) ராஜதானியாகக் கொண்டு குந்தள அரசனோடு சேர்ந்து பல விரோதிகளையும் தோற்கச் செய்தான்[5]. அவன் மகனும் யுவராஜனுமான எரியங்கன் சளுக்கியருக்கு முக்கிய படைத்துணைவனாயிருந்து துங்கபத்திரைக் கரையில் (கி. பி. 1076) நடந்த சண்டையில் விக்கிரமாதித்தனுக்குப் பேருதவிபுரிந்தான்[6]. அவனுடைய இரண்டாம் புத்திரனான விஷ்ணுவர்த்தனன் துவாரசமுத்திரத்திற்கும் பெலுவோலாவுக்கும் இடையிலுள்ள அயல்நாடுகளைத் தாக்கி, மைசூரில் ஆண்டுவந்த சோழசிற்றரசனான அதியமனது வலியையடக்கி, கிருஷ்ணவேணிவரையிற் சென்று வனவாசியையும் பாழாக்கிச் சக்கரவர்த்தி விக்கிரமாதித்தன் அனுப்பிய படையையும் வென்றான்[7]. அவன் மந்திரியாகிய கங்கராஜனும் விக்கிரமா

1. Epi. Car. VII. Sk. 297.
2. Fleet's Kanarese Dynasties; Bom. Gaz. Ch. IV.
3. Bom. Gaz. Ch. IV.
4. Rice, Mysore Gazetteer.
5. Epi. Rep. 1892.
6. Epi. Car. VII. Sk. 64, சிரவணபெலுவோலாசாசனம்.
7. Epi. Car. II. No, 138. கதக்சாசனம்; Ind. Ant. II.

தித்தனது சிற்றரசர் பன்னிருவர் கீழிருந்த சேனையைக் கன்னகளே என்னுமிடத்தில் ஓரிரவில் தாக்கினன்[1]. அதே சமயத்தில் கோபகா பட்டணத்துக்கதம்பரும், நுளம்பபாடிப் பாண்டியரும், கொங்கண சிலாஹாரரும் ஹொய்சளரோடு சேர்ந்து கலகஞ் செய்தனர். அவர் களையெல்லாம் சிந்தா சிற்றரசனாகிய ஆச்சா (இரண்டாம் ஆசுகி) என்பவன் தோற்கச் செய்தான்[2]. விக்கிரமாதித்தன் தன் குமாரி மயி லாலதேவியைக் கதம்பஜயகேசிக்கு மணஞ்செய்வித்ததும், அவன் மகன் மூன்றும் சோமேசுவரன் ஒரு தடையுமின்றி, கி. பி. 1127-ல் சளுக்கிய சிங்காதனமேறியதும், பின்னர் ஒரு நூற்றாண்டு வரையில் ஹொய்சளர் சிற்றரசராக இருந்ததுமாகிய இவைகளால் சளுக்கியர் ஆதிக்கியத்திற்கு இடையூறு சிறிதும் நேரவில்லையென்பது தெளியக் கிடக்கின்றது; ஆயினும் 'யானைவரும் பின்னே; மணியோசை வரு முன்னே' என்றவாறு இந்தக் கலகமானது சளுக்கிய ராஜ்யத்திற்கு ஹொய்சளராற் பின்பு நேரப்போகும் கெடுதியை ஒருவாறு முற்குறிப்பதாயிற்று. விக்கிரமாதித்தன் காலத்திற்குப் பிறகு, வீர பெல்லாளனை முன்னிட்ட ஹொய்சளரும் விஜ்ஜளனை முன்னிட்ட கலசுரிகளும் சளுக்கியநாட்டைத் தாக்கிச் சின்ன பின்ன மாக்கினார்கள். நாடு இங்ஙனம் க்ஷீணதசை அடைந்ததற்கு விக்கிரமாதித்தனிடம் தோஷம் சொல்லுவதற்கில்லை. அவன் அக்கலகங்களைத் தக்க சமயத்தில் அறிந்து அவைகளைத் தடுக்கத் தன்னாலியன்றவரையில் முயன்று ஒரு அணைகோலி வைத்தான். அவனிறந்த ஐம்பது வருஷங்களுக்குப் பிறகு அந்நாடு அழிந்து பட்ட தென்றால் அவனுக்குப் பின் அரசுபுரிந்தோருடைய பலக் குறைவே அதற்கு முக்கிய காரணமாகும்.

கி. பி. 1120 - 1124-ல் விக்கிரமாதித்தன் சாசனங்கள் அநேகம் வேங்கிநாட்டுத் திராக்ஷாராமம் என்னும் புண்ணிய ஸ்தலத்திற் காணப்படுகின்றன[3]. அதன் காரணம் என்ன? குலோத்துங்கன்,

---

1. Epi. Car. II. No. 45.

2. J. B. R. A. S. XI. 234, 244, நரேகல்சாசனம்.

3. Sewell's List of Antiquities in the Madras Presidency.

கி. பி. 1117-ல் இறக்க, அப்போது வேங்கிப் பிரதிநிதியாயிருந்த அவன்மகன் விக்கிரமசோழன் தக்ஷிணம்வந்து தந்தையின் மகுடம் சூடினன். அப்பொழுது வேங்கிநாடு சிலவருஷங்கள் விக்கிரமாதித்தனது ஆட்சிக்குள் இருந்திருத்தல் வேண்டும்[1].

அவன் ராஜ்யத்தின் விஸ்தீரணமும் சிற்றரசர்களும்.

சளுக்கியராஜ்யம், விக்கிரமாதித்தனது காலத்தில் வடக்கே நருமதைமுதல் தெற்கே துங்கபத்திரைக்கப்பாலும், கிழக்குத்தொடர்ச்சிமலைமுதல் மேல்கடல் வரையிலும் பரவியிருந்தது. அது அநேக மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு மண்டலேசுவரர் அதிகாரத்துக்குள் இருந்தது. அவர்களில் முக்கியமானவர் சேவுணதேசத்து யாதவரும், கங்கபாடி ஹொய்சளரும், கொங்கண கொல்லாபுரதேசத்துச் சிலாஹாரரும், ஹாங்கல் கோபகாபட்டணத்துக் கதம்பரும், எல்பெர்கா சிந்தரும், குட்டல் குட்டரும் ஆவார்[2].

விக்கிரமாதித்தன் (கி. பி. 1076 - 1127) ஐம்பத்தொரு வருஷங்கள் அரசாண்டான்[3]. ராஜ்யம் அக்காலங்களிலெல்லாம் பெரும்பாலும் சண்டைசச்சரவின்றிச் செழித்தோங்கியிருந்தது. நாட்டில் சோரர்பயம் சிறிதுமின்றிக் குடிகள் கவலையற்றுக் களிகூர்ந்திருந்தனர்.

குடிகளின் விசுவாசம்.

குடிகள் விக்கிரமாதித்தனைத் தெய்வமாகக்கொண்டாடி அன்பு செலுத்தி வந்தனர். ராஜனுக்குப் புத்திரப் பேறுண்டாயின், தன் தலையைப் பிரமனுக்குச் சுழலையாட்டத்தில் அர்ப்பணம் செய்வதாக ஒரு இடையன் பிரார்த்தனை செய்துகொண்டான்[4]. அதனாலே அவன்பால் குடிகளுக்கு இருந்த ராஜவிசுவாசம் நன்கு புலப்படும்.

விக்கிரமாதித்தனது மதக்கோட்பாடு.

விக்கிரமாதித்தன், சிவபிரானுடைய பூர்ண அனுக்கிரகத்தைப் பெற்றவனென்றும் சிவபிரானே அவனது குலதெய்வமென்றும் பில்ஹணர் கூறியிருப்பதால் அவனைச் சைவனென்றே சொல்லவேண்

1. Epi. Rep. 1903.
2. Bom. Gaz., Ch. IV. 450-453.
3. Epi. Rep. 1904.
4. Epi. Car. VII. Sk. 246.

டும். ஆயினும் மகாவிஷ்ணுவுக்கு ஒரு பெரிய ஆலயமும், இராச குமாரனாயிருக்கையில் பேர்மாடிபசதி என்னும் ஜினாலயமும் கட்டி வைத்தான் [1]. பௌத்தவிஹாரங்களுக்கும் விசேஷ தானங்கள் அவன் காலத்தில் கொடுக்கப்பட்டன. ஆகையால் விக்கிரமாதித்தன் எல்லா மதங்களையும் பக்ஷபாதமில்லாமல் சம்ரக்ஷித்து வந்தானென்பது விளங்குகின்றது.

புண்ணியகாலங்களில் ஷோடசமஹாதானங்களைச் செய்து ஏழைகளிடத்தில் பெருங் கருணைவாய்ந்தவனாய்ப் பலகுளங்களையும் கிணறுகளையும் வெட்டி விக்கிரமபுரமென்று ஒரு நகரத்தையும் பிரதிஷ்டை செய்தான். அவ்வாற்றால் அவனுக்கு 'ஜகதேகதானி' என்ற பெயரும் வழங்கலாயிற்று.

**வித்துவான்களை ஆதரித்தது.**

வித்துவான்களை ஆதரிப்பதில் பரமார வமிசத்து முஞ்ச போஜர்களைக்காட்டிலும் விக்கிரமாதித்தன் சிறந்தோங்கியவனென்று பில்ஹணர் கூறியிருக்கிறார். காஸ்மீரதேசத்துப் பண்டிதரான பில்ஹணர் தம்மை ஆதரிக்கத்தகுந்த அரசர் ஒருவரும் வடஇந்தியாவில் இல்லாமைகண்டு தக்ஷிணத்தில் விக்கிரமாதித்தனிடம் வந்தடைந்து சமஸ்தான வித்வானாக அமர்ந்ததே அதற்குப் பெரியதொரு சான்றாம். இந்தியாமுழுதும் கொண்டாடப்பட்ட மிதாக்ஷரம் என்னும் தர்ம சாஸ்திரத்தைச் செய்த விஞ்ஞானேசுவரரென்னு மகானும் அவ்வரசனுடைய சமஸ்தானத்திலே விளங்கினார்.

**விக்கிர மாதித்தனுடைய் இளமையும் முதுமையும்**

சற்றேறக்குறைய இருபத்தைந்து வருஷகாலமாகத் தந்தை தமையன் காலங்களில் நேர்ந்த பல வேறு போர்களிலும் ஈடுபட்டு வீரதீரனாய் விளங்கிய விக்கிரமாதித்தன் அரசெய்திய பின்னர், ஐம்பது ஆண்டுகள் அயல் நாட்டு விஷயங்களில் மிகுதியாகத் தலையிட்டுக்கொள்ளாமல் ஆண்டு வந்தது பெரிதும் வியக்கத்தக்கது. அம் மாறுபாட்டிற்குக் காரணம் யாது? தந்தை தமையனரசாட்சிகளில் விக்கிரமாதித்தன் பாலிய யௌவன தசை

1. Epi. Car. VII. Sk. 124; தாம்பல் சாசனம், Ind. Ant. X.

களிலிருந்தான். காரண காரியங்களை விசாரிப்பது தகுதியல்லவென்றெண்ணிப் பெரியோர் சொல்லிய வண்ணம் செய்தலே கடமையெனக் கருதியிருந்தனன். முதலில் மாளவ சோழ சளுக்கிய அரசருக்கு எல்லை விஷயமாய் ஓர் அமைதி ஏற்படவில்லை. போஜனிறந்தபின் மாளவ தேசம் பின்னடைந்தது. குலோத்துங்கன் காலத்து சோழநாடு கன்னியாகுமரிமுதல் மஹாநதிவரை கடற்கரையோரமாய்ப் பரவியது. சளுக்கியநாடு, வடக்கே நருமதை முதல் துங்கபத்திரைக் கப்பாலும் நீண்டிருந்தது. குலோத்துங்கனும் விக்கிரமாதித்தனும் பலபோர் புரிந்தும் ஒருவரை ஒருவர் முடிவாகத் தோற்கச் செய்ய இயலாமல் தந்தம் பலத்தை யறிந்து குடிகளின் நன்மையைக் கருதிப் பிற்காலத்திற் சண்டை செய்யாமலிருந்தனர். மகுடஞ் சூடினபோது விக்கிரமாதித்தனுக்கு வயது சற்றேறக்குறைய நாற்பத்தைந்து ஆயிற்று. தான் அதுகாறும் செய்த சண்டைகளையும் அவற்றின் பலாபலன்களையும் ஆய்ந்தோய்ந்து பார்க்குங்கால், சண்டை சச்சரவால் வரும் பலனைவிட சமாதானத்தாலும் நாட்டைச் சீர்திருத்துவதாலும் உண்டாகும் பிரயோசனம் பன்மடங்கு பெரிதென்று அவன் உணர்ந்தான் போலும்.

விக்கிரமாதித்தனது ஒப்புயர்வற்ற சிறப்பு.

இவ்வாறு ஒருங்கே போர்த்துறையிலும் அரசியலிலும் ஒப்புயர்வற்று விளங்கிக் குடியோம்பி வந்த அரசர் அரியவரேயாம். வாய்த்தற் கருமையான வேறொரு சிறப்பும் அவன்பால் காணக்கிடக்கும்; சரித்திரத்திற் சிறப்பித்துக் கூறப்படுவோரில் பலர் தங்கள் முன்னோர் உழைக்கத் தாம் அதன் பலனை அனுபவிப்பவராவர். வேறு பலர், பல்லாண்டு உழைத்தும் பலனை அனுபவிக்காமல் வாளா கழிவர். விக்கிரமாதித்தனோ, அவ்வாறன்றித் தானே பாடுபட்டு நிலைநிறுத்திய நாட்டை மேன்மடாக்கிக் கடவுளருளால் நெடுங்காலம் ஆண்டு கண்ணாரக் கண்டு களித்து வந்தனன். ஆனதுபற்றியே மிதாக்ஷரத்தில் விஞ்ஞானேசுவரர் 'இப்புவியின்கண் கலியாணபுரத்தைப்போன்ற நகரும், விக்கிரமாங்கனைப் போன்ற பூபதியும், வேறெங்கும் எக்காலத்திலும் காணப்படுதலரிது' என்று சொன்னார். அம்மகீபதியின் கீர்த்தி நீடூழிகாலம் சிறந்தோங்கி வளர்க!

———

# ஐந்தாம் அத்தியாயம்.

## பின்சளுக்கியர் காலத்தில் தக்ஷிணத்தின் நிலைமை.

ஆதாரங்கள்.

இனி பின்சளுக்கியர் காலத்துத் தக்ஷிணத்தின் அரசியல், பொருளியல், மதக்கோட்பாடு, குடியியல் முதலியவைகளின் நிலைமையைப்பற்றி ஈண்டு விரித்துரைப்பது இன்றியமையாததாகும். அவற்றிற்கு முக்கியமான ஆதாரங்கள் இதுகாறும் வெளிவந்த எண்ணிறந்த சாசனங்களும், பில்ஹணகவியின் விக்கிரமாங்கதேவ சரிதமும், மூன்றும் சோமேசுவரன் எழுதிய மானசோல்லாசம் என்னும் அபிலஷிதார்த்தசிந்தாமணியுமாம்.

### i அரசியல்.

மகாராஜன்.

சளுக்கிய அரசர்கள் மகாராஜாதிராஜன், பரமேசுவரன், பட்டாரகன், பரமபட்டாரகன், ஆகவமல்லன், ஜகதேகமல்லன், புவனைகமல்லன், திரிபுவனமல்லன் என்னும் பலபிருதுகளுடன் அரசுபுரிந்து வந்தனர். எல்லா அதிகாரங்களுக்கும் சக்கரவர்த்தி ஆதியாயிருந்தனன். அரசுரிமையும் அவனுடைய சந்ததியாருக்கே சொந்தமாயிருந்தது. தந்தைக்குப் பிறகு மூத்தகுமாரன் ராஜ்யத்தையடைவது முறைமையாக இருந்தது. ஆனால் புத்திரரில்லாவிடின், சகோதரராவது நெருங்கிய உறவினராவது இராஜ்யத்தையடைவதுண்டு. அரசன் ஈசுவராம்சமாகவே பெரும்பாலும் நினைக்கப்பட்டான்; ஆயினும், தெய்வத்திற்கஞ்சிக் குடிகளின் நோக்கத்தைத் தழுவியே நடந்து வந்தனன்.

ஆலோசனை சபை.

அரசனுக்கு நியாயநெறியை எடுத்துரைக்க மகாப்பிரதானிகள் கூடிய ஆலோசனை சபை ஒன்றிருந்தது. அதில் அக்கிராசனம் வகித்தவர் 'சர்வாதிகாரி' எனப்படுவர்.

யுவராஜன்.

காலக்கிரமத்தில், அரசன் தன் மூத்தகுமாரனை மந்திரி பிரதானிகள் முன்னிலையில் இளவரசாக நியமனஞ் செய்வது பண்டை வழக்கமாயிருந்தது. அரசனுடைய முதுமைப்பருவத்தில் இராஜ்யபாரத்தை ஏற்றுக் கொள்ளுவதற்கும் ஆன்றோர் முறையே அரசுநடாத்தத் தேர்ச்சியடைவதற்கும் இளவரசு நியமனம் உசிதமாயிற்று.

**இராணுவம்.** ஆயிரக்கணக்கான போர்வீரர்கள் எப்போதும் ஆயத்தமாக அரசனது கட்டளையை எதிர்நோக்கி நாட்டைக் காத்து வந்தனர். சிற்றரசர்களெல்லோரும் கப்பங்கட்டி வந்ததோடு வேண்டியபொழுது துணைப்படையுமுதவக் கடமைப்பட்டிருந்தனர். தேர், யானை, குதிரை, காலாளெனப் படை நால்வகைப்பட்டிருந்தது. யானைகள் முன்வரிசையிலும், குதிரைகள் இருபுறங்களிலும், காலாள் பின்வரிசையிலுமாகச் சண்டையில் அணிவகுக்கப்பட்டு நின்றன. அவை பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பகுதியும் ஒரு மகாசாமந்தன் அதிகாரத்தின் கீழ் இருந்தன. அம்மகாசாமந்தர்களும் ஒரு மகாசாமந்தாதிபதியின் கட்டளைக்குட்பட்டிருந்தனர்[1]. சகல போர் விஷயங்களையும் விசாரிப்பதற்கு, 'சந்திவிக்கிரகி' என்னும் மேலான அதிகாரி ஒருவனிருந்தனன். சண்டையில் ஈட்டி, கத்தி, வேல், வில், அம்பு முதலிய பல ஆயுதங்கள் உபயோகப்பட்டுவந்தன; 'அயில்முனைக் கொந்தள வரசர்'[2] 'செஞ் சரமாரி'[3] என்ற பிரயோகங்கள் சாசனங்களிற் காணப்படுகின்றன. போர்தொடங்குமுன் போர்வீரர் வீரபானம் செய்வது வழக்கம். அப்பானத்தினால் வீரன் ஒருவனே ஆயிரம் பகைவரை எதிர்க்க வல்லவனாவன் யானைகளுக்கு மதுவுண்பித்தலுண்டு. அவைகளும் வெறிகொண்டு மிதித்தும் துவைத்தும் எதிரிகளைச் சின்னபின்னம் செய்யும். போர்வீரர்மனைவியர் கணவரோடு போர்க்களத்துக்குப் போவது வழக்கம். சேனாதிபதியொருவன் சண்டையில் முதுகிட்டோடினால் அதற்குத்தண்டனையாகப் பெண்வேடம் தரிப்பித்து அவனை அவமானப்படுத்துவர்[4].

**யுத்த தருமம்** அரசர்கள் உண்மையான வீரர்களாயிருந்து ஒருவரோடொருவர் மல்லயுத்தம் செய்வதில் மிகப்பிரியமாயிருந்தனர். சளுக்கியருக்குப் பரம்பரையாக வந்த ஆகவமல்லன் திரிபுவனமல்லன் பூலோகமல்லன் புவனைகமல்லன் ராஜமல்லன் யுத்தமல்லன் என்ற மல்ல பிருதுகள் அதற்கு அடை

1. Ind. Ant. X. No. 97.
2. S I. I. III. 140.
3. do. No. 63.
4. யுவான் சுவாங்கின் வரலாறு.

யாளமாகும். அவமானம் நேருவதாயின் உயிரையும் விடத்துணிவார்கள். 'ஒண்டிர லிரட்ட மண்டல மெய்தி, நதிகளு நாடும் பதிகளு மநேக, மழித்தனன் வளவனென்னு மொழிப்பொருள் கேட்டு, வேகவெஞ் சளுக்கி யாகவ மல்லன், பரிபவ மெனக்கிதென் றெரிவிழித் தெழுந்து, செப்பருந் தீர்த்தக் கொப்பத் தகவையில்' ஒரு மதயானையிலேறிச்சென்று தன் கையால் சோழராஜாதிராஜனைக் கொன்றான்[1]. சோழவீரராஜேந்திரன் காலத்து, கூடற்சங்கமத்துச் சண்டையில் ஆகவமல்லன் தன் புதல்வரோடு தோல்வியடைய, 'பழியொடு வாழ்வதிற் சாவதுசால நன்றென், றேவமுற்றின சிந்தைய னாகி, முன்னம் புதல்வருந் தானு முதுகிட் டுடைந்த, கூடலங் களமெனக் குறித்த கூடலில், வாரா தஞ்சினர் மன்னவரல்லர், போர்ப் பெரும் பழிப் புரட்ட ராவர்' என்று யாவருமறிய ஓலையொன்று எழிதி விடுத்ததும் மற்றொரு சாக்ஷியாகும்[2].

ஓரரசன் மற்றோரரசனைப் பழிக்குப்பழி வாங்குவதாயின் எச்சரிக்கை செய்தே போர்தொடங்குவது வழக்கம். ராஜதூதர்களை நிரம்ப மரியாதையாக நடத்திவந்தனர். போர்க்களத்தில் முதுகிட்டோடினவரைத் துரத்துவதுண்டென்றாலும் சரணாகதியடைந்தவரை ஒருகாலும் கொல்வதில்லை. கொள்ளையடித்தல், பத்தினிமகளிர் பாலர் பிராமணர் முதலியோரைக்கொல்லுதல், ஜாதிக்கலப்பு, பிடிபட்ட பெண்டிரை மானபங்கம் செய்தல் முதலியன எல்லாம் தருமநூலுக்கு மாறானவையென்று விலக்கப்பட்டன. இத்தருமங்களைச் சோழ அரசர்கள் அதிகமாய்க் கவனிக்கவில்லை. புகழ்பெற்ற முதலாம் சோழராஜராஜனும் யுத்தமுறைதவறி நடந்ததாக ஹொட்டூர்ச் சாசனம்[3] கூறுகிறது; ராஜாதிராஜன் இரட்டமண்டலமெய்தி நதிகளும் நாடும் பதிகளும் அநேகமழித்தனன்[4]; ஜைனகோயில்களை எரித்த சோழன் கொடுங்கோன் மன்னனென்று சளுக்கிய சாசனத்தில்[5] சொல்லப்பட்டிருக்கிறான். ராஜேந்திரதேவன், 'ஆகவமல்லன்

1. S. I. I. III. No. 29; Epi. Car. VIII. Sb. 325.
2. S. I. I. III. 69.
3. Bom. Gaz. IV. 433.
4. S. I. I. III. No. 29.
5. அண்ணிகெரிசாசனம், Bom. Gaz. IV. 441.

றன்பெருஞ் சேனையெல்லாம், படப்பொருது பாரது நெகிழப் பசும் பிணமாக்கி, ஆங்கவ னஞ்சிப் புறக்கிட் டோடவவ, னானையுங் குதிரையும் பெண்டுபெண் டாரமும், பெட்டகத் தோடகப்படப், பிடித்துக் கொண்டான்[1]. சோழவீரராஜேந்திரன் 'மாதண்ட நாயகன் சாமுண்ட ராயனைச் செற்றவன் சிரத்தினை யறுத்து மற்றவ, னொருமக ளாகிய விருகயன் தேவி, நாகலை யென்னுந் தோகையஞ் சாயலை, முகத்தோடு மூக்குவே ருக்கி'னான்[2]. குலோத்துங்கன் "பட்ட மன்னர்தம் பட்ட மங்கையர், பருமணித்திருக் கருவிருத்தின" தாகவும், "விருத ராசரைப் பொருது யாளி வாரணம் கேழல் சீயம்" என்ற பல கொடிகளைக் கொண்டதாகவும் காணப்படுகிறது[3]. இத்தகைய நெறிதவறின கொடுங்கோன்மை சளுக்கியரிடத்திற் காணப்படவில்லை. விக்கிரமாதித்தன் காஞ்சியைத் தாக்கினபோது கோயில்களுக்கும் கொடிகளுக்கும் ஒரு பழுதும் நேராமற் காப்பாற்றினதாகப் பில்ஹணர்[4] கூறியுள்ளார். சளுக்கியருடைய யுத்த தருமம் சோழரது யுத்த தருமத்தைக் காட்டிலும் மேம்பட்டதென்று ஊகிக்கலாம்.

ஒரு குலத்தரசர் வேறுகுலத் தரசகுமாரிகளை மணஞ்செய்யும் வழக்கமுண்டு. கீழைச்சளுக்கி விமலாதித்தன் புகழ்பெற்ற முதலாம் சோழராஜராஜன் பெண்ணை மணந்ததும், சளுக்கிராஜராஜன் கங்கை கொண்டசோழன் பெண் அம்மங்கதேவியைக் கலியாணஞ் செய்ததும், குலோத்துங்கன் சோழராஜேந்திரதேவன் பெண் மதுராந்தகியை விவாகஞ்செய்துகொண்டதும், மேலைச்சளுக்கி விக்கிரமாதித்தன் சோழவீரராஜேந்திர தேவன் பெண்ணைப் பாணிக்கிரகணம் செய்ததும் முக்கிய உதாரணங்களாகும்.

---

1. S. I. I. III. No. 22-கருவூர்ச்சாசனம்.
2. S. I. I. III. No. 20.
3. "வட்டவெண்குடைச்சென்னிமானதன்வாளின்வாயினன்மறலிவாயிடைப் பட்டமன்னர் தம்பட்டமங்கையர் பருமணித்திருக்கருவிருத்தியே"
[கொண்டபோ
" மீளிமாவுகைத்தபயன், முன்னோர்நாள் விருதராசரைப்பொருது ராளிவாரணங்கேழல்சீயமென்றவைநிரைத்துநாசிகையிருத்தியே. "
கலிங்கத்துப்பரணி. IV. 2, 6.
4. விக். சரி.

**சளுக்கியராஜ்யத்தின் பிரிவுகளும் அதிகாரிகளும்.**

இராஜரீக சௌகரியத்திற்காகத் தேசமானது பல ராஷ்டிரங்களாகவும், ஒவ்வொரு ராஷ்டிரமும் பலவிஷயங்களாகவும், ஒவ்வொரு விஷயமும் பல கிராமங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. அவற்றின் அதிகாரிகளுக்கு முறையே ராஷ்டிரபதி, விஷயபதி, கிராமபதி என்ற பெயர்கள் வழங்கிவந்தன. அயுக்தகன் நியுக்தகன் என்ற வேறு சிற்றதிகாரிகளும் இருந்தனர். ராஷ்டிரபதியானவன் மகாதண்ட நாயகனெனவும் மகாமண்டலேசுவரனெனவும் கூறப்பட்டான். விஷயபதியானவன் நாலகவுண்டன் நூரகவுண்டன் மன்னேயன் என்று சொல்லப்பட்டான். கிராமபதிக்கு ஊரோடு ஊர்க்கவுண்டன் எனப் பெயருண்டு. இராஜ்யத்தின் பிரிவுகள் அவ்வவற்றுக்கேற்ற சங்கியையோடு குறிக்கப்பட்டு வந்தன. உதாரணமாக: இரட்டபாடி ஏழரையிலக்கம், கங்கபாடி 96000, வனவாசி 12000, நுளம்பபாடி 32000 என்று வழங்கி வந்தன. சிறுபிரிவுகளும் 70, 50 முதலிய எண்களோடு சாசனங்களிற் காணப்படுகின்றன. இவ்வெண்கள் ஒவ்வொரு பிரிவிலும் அடங்கிய குடிகளின் தொகையையோ கிராமங்களையோ வருமானத்தையோ குறிப்பனவென்று கல்விமான்கள் பலவிதமாக அபிப்பிராயப்படுகிறார்கள். ஆனால் இன்னதென்று நிச்சயமாகச் சொல்வதற்கில்லை. ஒரு ஊரைக் குறிப்பிட வேண்டுமானால் அது இன்னராஷ்டிரத்தை இன்னவிஷயத்தைச் சார்ந்ததென்று கூறுவது வழக்கம். உதாரணமாக: பொன்னவாடி அக்கிரகாரமானது, பாகே 50 என்னும் விஷயத்தையும் தார்டவாடி 1000 என்னும் ராஷ்டிரத்தையும் சார்ந்தது. ஹளேபீடு கிராமம் குண்ட விஷயத்தையும் கங்கபாடி 96000 ராஷ்டிரத்தையும் சேர்ந்திருந்தது.

இராஜாங்கமானது, இராணுவம் நியாய விசாரணை பொக்கிஷம் முதலான பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் ஓர் அதிகாரியின் கீழிருந்தது. அவர்களின் தொகுதியே இராஜ காரிய நிர்வாக சபையாகும். ஒரு பகுதியின் தலைவன் வேறு பகுதிகளின் சம்பந்தமான காரியங்களையும் பார்த்து வருவதுண்டு. உதாரணமாக, பிரதான மந்திரியும் பொக்கிஷ தாரருமான ரூபபட்டையனென்பவர் அந்தப்புர விசாரணைத் தலைவராகவும், பதினெட்டு அக்கிரகாரத்திற்கு மண்டலேசுவரராகவும், சுங்க விஷயங்களைத் தணிக்கைசெய்யும்

தண்டநாயகராகவு மிருந்தனர்[1]. நியாயவிசாரணை முழுவதும் விஞ்ஞானேசுவரருடைய மிதாக்ஷரத்தை அனுசரித்தே யிருந்தது. இராஜாங்ககூட்டிடங்களை மேற்பார்வையிட 'சூத்ரதாரிதணிக்கி' என்று ஒரு அதிகாரியிருந்தனன். பல பகுதிகளிலும் மிகவும் முக்கியமானது பொக்கிஷமே. பணத்தை நிரம்பச் சேகரித்துவைத்தல் நன்ருக ஆளப்பட்டுவரும் இராஜ்யத்தின் ஏழ் அங்கங்களில் ஒன்ருகும்.

இராஜ்யத்தின் முக்கியமான வருமானம் நிலவரி. அதை வசூலிப்பது இராஜாங்கத்தின் முக்கிய வேலையாகும். நன்செய், புன்செய், தோட்டக்கால், கட்டேமானியம் என்று நிலம் பல வகைப்பட்டிருந்தது. நீர்வளம் நிலவளத்திற்குத் தக்கவாறு தீர்வை விதிக்கப்பட்டது. விளைவின் ஒரு பகுதியே வரியாக வாங்கப்பட்டு வந்தது. வரியில்லாத நிலங்களுக்கு அம்பலி நிலம்[2] (இறையிலி) என்று பெயர். நிலவரியைத் தவிர வீட்டுவரி கலியாணப்பந்தல்வரி முதலிய பலவரிகள் இருந்தன. தாசிகள் வைத்துக்கொண்டிருந்த கண்ணுடிகளுக்கும் வரிவசூலிக்கப்பட்டு வந்தது[3]. 'கொடேணு' என்ற ஒரு வரியும் இருந்தது[4]. அது குடை வியாபாரிகள் செலுத்திவந்த வரியாக இருக்கலாம். நிலவருமானத்திற்கு அடுத்தபடி முக்கிய வருமானம் சுங்கங்களே. அக்காலத்தில் வாணிகம் மேலோங்கி இருந்தமையால் சுங்கங்களால் வருமானம் அதிகம். பெரிய சுங்கம் (பெஜ்ஜுங்கம்) சிறியசுங்கம் (கிரிகுலசுங்கம்) என சுங்கங்கள் இருவகைப்பட்டிருந்தன[5]. இவ்வருமானத்தை வசூலிக்கச் சுங்காதிகாரிகள் (சுங்கமங்கைக்கொண்ட நிதேவர்), 'பெர்ஜுங்காடகணிகரர்' என்று பலரிருந்தனர்[6]. இதரவருமானத்தை வசூலிக்கக் கரணர், பிரமுககரணர் வட்டவியவகாரிகள் எனப் பல அதிகாரிகள் இருந்தனர்[7]. வரவு செலவு கணக்கு முழுவதும்

1. Epi. Car. Sk. 170.
2. Ind. Ant. IX. No. 98.
3. Epi. Car. VII. Sk. 295.
4. Ind. Ant. IX. No. 98.
5. Epi. Car. VII. Sk. 297.
6. Epi. Car. XI. Dg. 129, 139, 141.
7. Epi. Car. VII. Sk. 297.
   Do XI. Dg. 133.

இ... சென்னை-600 008.

தணிக்கைசெய்ய அவர்களுக்குமேல், பாண்டாரி (பொக்கிஷதார்) என்று ஒரு உத்தியோகஸ்தர் இருந்தனர். மேற்கூறிய வருமானங்களையன்றி அரசனுக்கு இராஜசம்பாவனையாகவும் காணிக்கையாகவும் பொருள்கிடைப்பதுண்டு. நிதிநிக்ஷேபங்களும் நதிகளும் கற்பாறை முதலியனவும் அரசனுக்கே உரியனவாகும். வருஷாந்திரச் செலவுபோக மிகுந்த தொகையைக்கொண்டு சாலைகள், அணைக்கட்டுகள், தடாகங்கள், தண்ணீர்ப்பந்தல்கள், சத்திரங்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள் முதலியன ஏற்படுத்தப்பட்டன. பஞ்சம்வந்த காலத்தில் அந்த மிச்சத்தையே உபயோகித்து வந்தனர்[1].

**கிராம விசாரணை.**

கிராமத்தில் முக்கியமானவர் பன்னிருவர்[2]. அவர்கள் மணியக்காரன் படேல் அல்லது கவுண்டன், கர்ணன் அல்லது ஷான்போக் (கணக்கன்), உபாத்தியாயர், நீர்சரியாகப்பாய்ச்ச நீர்கிரந்தி, தலையாரி, தோட்டி, ஜோதிஷன், கொல்லன், தட்டான், குயவன், வண்ணான், அம்பட்டன் என்பவராவர். அவர்களுக்கு அப்போதைக்கப்போது மாதச்சம்பளம் கொடுக்கப்படுவதில்லை. கிராமத்தார், பொதுநன்மைக்காக அவர்களுக்கு நிலங்கள் கொடுத்திருந்தனர். கிராம நிலங்களுக்கு 'தொட்டனமானியம்' 'கொக்களமானியம்' முதலாய பல பெயர்களுண்டு[3]. நியாய விசாரணைக்காகக் கிராமத்தில் பஞ்சாயத்தார் (தருமாசனத்தார்) இருந்தனர். கிராமத்தலைவனே பஞ்சாயத்தாரில் அக்கிராசனாதிபதி. கொடுவழக்கும் நியாயவாதிகளும் அக்காலத்திலில்லை. இராஜ்யத்தில் என்ன மாறுதல்கள் உண்டானபோதிலும் கிராமங்களையும் கிராமத்தாரையும் அவை அதிகமாகப்பாதிக்கா. ஆகவே ஒவ்வொரு ஊர்க்குடிகளும் தங்களுடைய நன்மையைத் தாங்களே நாடினவர்களாய் அந்நியரால் யாதொரு இடையூறுமின்றிச் சுகமாய்க் காலங்கழித்து வந்தனர்.

## ii. பொருளியல்.

**விளைபொருள்கள். இறக்குமதி.**

குந்தளநாடு வளம் மிகுந்திருந்தது. நெல், வெண்கரும்பு முதலியன மிகுதியாக விளைந்தன. வனவாசி மாகாணம் தென்னை, வாழை, கமுகுகளுக்குப் பெயர் பெற்றிருந்தது. ஹிந்துஸ்தானத்திலிருந்து குதி

1. Epi. Car. VII. Sk. 277. விக். சரி.
2. Rice, Mysore Gazetteer.
3. Ind. Ant. IX. 75.

ரைகளும், கேரளத்திலிருந்து கர்ப்பூரமும், மேற்குக்கடற்கரை நாடுகளிலிருந்து வால்மிளகு இலவங்கமுதலிய வாசனைத்திரவியங் களும், சாரதாவிலிருந்து குங்குமமும், புண்டாரகத்திலிருந்து மணல் போன்ற சர்க்கரையும், காஸ்மீரத்திலிருந்து உயர்ந்த மதுவகைகளும், பாரசீகத்திலிருந்து விளக்கெண்ணெயும் வியாபாரிகளால் அந்நாட் டிற்குக் கொண்டுவரப்பட்டன. கடல்மார்க்கமாகவும் வியாபாரம் நடந்தது. பில்ஹணர், சௌராஷ்டிரத்திலிருந்து (குஜராட்) தக்ஷி ணத்திற்கு வந்தபோது கப்பலேறி வந்தனர்[1].

**நாணயங்கள்.**

வியாபாரத்தில் பொன் வெள்ளி நாணயங்கள் வழங்கி வந் தன. நாற்பத்தெட்டுக் குன்றிமணி எடையுள்ள பொன் நாணயத்திற்கு 'நிஷ்கா' என்று பெயர். தாமிரநாணயங்களுக்கு 'ஹண', 'பண', 'ஹாகா', 'பாகா' என்று பெயர்[2]. சளுக்கிய நாணயங்கள் தாமரைபோன்ற வடிவினவாயிருந் தமையால் பத்மடங்கா எனப்பட்டன. அவைகளின் ஒருபுறத்தில் சக்கரம் அல்லது தாமரை உருவம் பதிக்கப்பட்டும் 'ஸ்ரீ' மும்முறை எழுதப்பட்டும்[3] மற்றொருபக்கம் பன்றியின் உருவம் செதுக்கப் பட்டுமிருக்கும்[4].

**வீட்டுச் சாமான்கள்.**

[5] முகம்பார்க்கக் கண்ணாடிகளும், கிரீடாகிருகங்களும், கொடி கட்டிய வீடுகளும், பானம்செய்யப்பாத்தி களும் (செஷகங்கள்), சங்குகளும், நீர்த்துருத் திகளும் (கரையந்திரங்கள்) சிவப்புக்கல் ஜன் னல்களும், எழுதமையும் அக்காலத்திலிருந்தன. நீர்முகப்பதற்கு பாணியக்கடியந்திரம் (சகடம்) இருந்தது. மரங்களின் பாளையி லிருந்து கள் இறக்கினர்கள். சலவைக்கற்களின்மேற் சித்திரம் வரையப்பட்டது. சூர்யோபலம் என்னும் சூர்யகாந்தக்கண்ணாடிகள் இருந்தன. முத்துக்களில் துவாரமிடச் சலாகமென்ற நுட்பமான கருவி யுண்டு. கத்திகளைக் கூர்மையாக்கச் சாணைக்கல்லும், வைரத்தைப்

1. விக். சரி.
2. Madras Journal of Literature and Science. Numismatic Gleanings (Elliot).
3. V. A. Smith's Catalogue of Coins in the Indian Museum, Calcutta.
4. விக். சரி.
5. Ind. Ant. V. 342.

பட்டை தீர்க்கச் சாணேபலபட்டிகையும் இருந்தன. நிலத்தையளக்கக் கச்சாவி, மாரகுண்டி, பேருண்டகேல் என்னும் பல அளவுகோல்கள் உபயோகிக்கப்பட்டு வந்தன. கம்ப மட்ட என்பன நிலத்தின் விஸ்தீரணத்தைக்குறிக்கும் நீட்டலளவை. நூறுகம்ப சேர்ந்தால் ஒரு மட்ட ஆகும்.

வர்த்தகக்
கூட்டங்கள்.

வர்த்தகக்கூட்டங்கள் (சிரேணியங்கள்) அநேகம் இருந்தனவென்பது சாசனங்களால் தெரியவருகிறது. அவைகள் மாத்திரமேயன்றித் தொழிளாலர் கூட்டங்களும் பல இருந்தன. ஷிகர்பூரில் இரண்டு கற்றச்சர்கள் தங்கள் கூட்டத்திற்கு உண்டான அபவாதத்தை நீக்க ஒரு விக்கிரகம் செய்தனர் [1]. வாணியர், செக்கு ஒன்றுக்கு ஒரு அகப்பை எண்ணெய் சுவாமிக்குக் கொடுத்தார்கள் [2]. தாசர்கூட்டமும் மும்முறி(?) கூட்டமும் இருந்தன [3]. மேற்கூறிய கூட்டங்கள் ராஷ்டிரகூடர் காலத்திலும் [4], கிருஸ்துசகாப்தத்தின் தொடக்கத்தில் அரசு செலுத்திய ஆந்திரபிருத்யர் காலத்திலும் [5] இருந்தன. ஆகவே ஐரோப்பாவைப்போல் இந்தியாவிலும் வர்த்தகக்கூட்டங்கள் ஏற்பட்டு மேம்பட்டிருந்ததாகச் சொல்லலாம். கூட்டத்தலைவனுக்குச் சிரேஷ்டி [6] (செட்டி) என்று பெயர்.

பொதுநன்மைக்காக மகாஜனக்கூட்டங்கள் இருந்தன. அவற்றின் தலைவனுக்குப் பட்டணசாமி என்று பெயர். ஐயவோலாவில் இருந்த 500 ஜனங்கள் ஒரு தானம் செய்ததாகச் சாசனத்தில் காணப்படுகிறது [7]. ஞானசக்தி என்பவன் 420 மகாஜனங்களுக்கு ஒரு நிலத்தைத் தானமாகக்கொடுத்து அதன் வருமானத்தைச் சுவாமி கைங்கரியத்திற்கு உபயோகப்படுத்திக்கொள்ள ஏற்பாடு செய்தான் [8].

---

1. Epi. Car. VII. Sk. 112.
2. Ind. Ant. V. 343.
3. Ind. Ant. XIX. 84, பலகாம்வி சாசனம்.
4. Epi. Ind. V. 165.
5. Early History of the Dekkan.
6. Ind. Ant. X. 185, 190.
7. Ind. Ant. IX. 96.
8. Ind. Ant. XIII. 91, 94.

அக்கூட்டங்கள் இவ்வாறு நடைபெற்றனவென்ற முழுவிவரந் தெரியாவிடினும் ஜனங்களுக்கு அவைகளில் அதிகநம்பிக்கை யிருந்ததென்பது மாத்திரம் நன்கு விளங்குகிறது.

**வாணிக மேம்பாடு.** வர்த்தகர்களுக்குப் பெருத்த ஊதியம் கிடைத்திருத்தல் வேண்டும்; ஏனெனில், சாசனங்கள் பலவற்றிற்செட்டிகள் கோயில்கட்டி வைத்தனரெனவும், விலையுயர்ந்த விக்கிரகங்கள் செய்வித்தனரெனவும் சொல்லப்பட்டிருக்கின்றன. ஹாம்பாசெட்டியின் மனைவி ஜைனதாராபகவதிக்கு ஒரு விக்கிரகம் செய்வித்தாள் [1]. லொக்கிகுண்டிசெட்டி சங்கம்வயன் தாராதேவிக்கு விஹாரம் கட்டினான் [2]. தாம்பல் ஊரைச்சேர்ந்த பத்துச் செட்டிகள் பௌத்தனுக்கு விஹாரம் அமைத்தனர். வட்டவியவகாரி மாரோசெட்டி ஒரு பெருந்தானம் செய்தான் [3].

**வட்டி.** அக்காலத்து வழங்கிவந்த வட்டி வீதத்தை கி. பி. 1060-ம் வருஷத்திய தாவனகிரிசாசனத்திலிருந்து [4] ஒருவாறு ஊகிக்கலாம். அதில் நான்கு கத்யணங்களுக்கு மாதம் ஒன்றுக்கு ஒரு ஹாகா வட்டியென்று குறிக்கப்பட்டிருக்கிறது. அதை ஆதாரமாகக்கொண்டு கணக்கிட்டால் [5] நூற்றுக்கு வருஷம் ஒன்றுக்கு வட்டி சற்றேறக்குறைய எட்டு[6] ஆகிறது. அக்காலத்தில் இராஜ்ஜியத்தில் சண்டைசச்சரவுகள் பல இருந்தன

---

1. Epi. Car. VII. Sk. 169.
2. Ind. Ant. X.
3. Epi. Car. VII. Sk. 118.
4. Epi. Car. XI. Dg. 140.
5. Colebrooke's Essays Vol. II.

1 ஹாகா $=\frac{1}{4}$ பணம் $=\frac{1}{4}\times\frac{1}{4}$ திரமம் $=\frac{1}{4}\times\frac{1}{4}\times\frac{1}{61}$ நிஷ்கம் $=\frac{1}{256}$ நிஷ்கம் $=\frac{1}{256}\times\frac{20}{3}$ கத்யணம் $=\frac{20}{768}$ கத்யணம் 1 நிஷ்கம் $=4$ சுவர்ணம் $=64$ மாஷம் $=320$ குஞ்சம்.

1 கத்யணம் $=48$ குஞ்சம். 1 நிஷ்கம் $=\frac{320}{48}=6\frac{2}{3}$ கத்யணம்.

6. 4 கத்யணங்களுக்கு 1 மாசவட்டி 1 ஹாகா

100 ——— 12 ——— $\frac{300\times 20}{768}$ கத்யணம்

$=\frac{3}{16}$ or சற்றேறக்குறைய 8%

வென்றுகேள்விப்படினும் வட்டி குறைந்திருந்ததற்குக் காரணம் யாதென்று யோசித்தால், மேற்கண்ட உபத்திரவங்கள் கிராமத் தாரைப் பாதிக்காமையாலும் அவ்வவ்விடத்து மகாஜனங்களும் வர்த் தகக்கூட்டங்களும் தத்தம் நன்மையைத் தாமே கவனித்தனர் என் பதுமேயாம் [1].

## iii மதக்கோட்பாடு.

சளுக்கியர் குலதேவதை.

நாணயங்களின் வராகமுத்திரையினின்றும், வராகக்கொடியினி ன்றும், சாசனங்களிற் காணப்படும் வராகாவ தாரவணக்கத்திலிருந்தும் டாக்டர் பீலர் ப்ளீட் பார்னெட் [2] என்பவர்கள் சளுக்கியரசர் குல தேவதை விஷ்ணுவேயென்று சொல்லிப்போந்தனர். ஆனுல், விக்கிரமாங்கதேவசரிதத்தில் சளுக்கியரின் குலதெய்வம் சிவ பிரானென்பது வெளிப்படையாகச் சொல்லப்பட்டிருக்கிறது [3]. சளுக்கியரசர் பெரும்பாலும் சிவபக்தரேயாவர். ஆகவமல்லன் சிவ பிரானைக்குறித்துத் தவஞ்செய்தே விக்கிரமாதித்தனைப்பெற்றுன். சளுக்கியருடைய தானசாசனங்களின் மத்தியில் சிவலிங்கம் காணப் படுகிறது [4]. சளுக்கியர் கோயில்களிலும் பிரமவிஷ்ணுக்கு இடையில் மகாதேவன் விக்கிரகமே அமைக்கப்பட்டிருக்கிறது.

மதவேறுபாடுகள்.

பலதெய்வங்களும் அக்காலத்தில் கொண்டாடப்பட்டு வந்தன. சிவனை லிங்கவடிவமாகவே ஜனங்கள் பூசித்து வந்தனர். விக்கிரமாதித்தனுக்குப் பாட்டனை ஜயசிங்கன் பாண்டவர்களால் கட்டப்பட்ட பஞ்சலிங்கக்கோயிலைப் பழுதுபார்க்கக்கீர்த்திபெற்ற சைவாசாரியாகிய லகுலீசுவர பண்டிதருக்குத் தானங்கொடுத்தான் [5]. மகாவிஷ்ணு வுக்கும் பிரமனுக்கும் கோயில்கள் கட்டப்பட்டன. சிற்சில இடங்க ளில் ஜைன பௌத்தமதங்களும் ஆதரிக்கப்பட்டுவந்தன. வீர பணஞ்ச வகுப்பினர் ஜைனதேவதையான பத்மாவதிக்குத் தானங்

---

1. Bhandarkar's Early History of the Dekkan.
2. Epi. Ind. XIII. 38.
3. விக். சரி. II, 40 'குலப்பிரபோ பால மிருகாங்கசேகரः'.
4. J. R. A. S.
5. Epi. Car. VII. Sk. 83, 126, 146.

கொடுத்தனர் [1]. மண்டலீசுவரனான இலக்ஷ்மணனென்பவன் பெலுவோலாவில் அழிவடைந்திருந்த ஜினாலயங்களைப் பழுதுபார்த்தான் [2]. பிரதான மந்திரியான ரூபபட்டையன் பள்ளிகேவில் ஒரு பௌத்த விஹாரத்தை ஸ்தாபித்து அதற்கும் தாராபகவதிக்கும் தானங்கள் கொடுத்தான் [3]. பகவதி, பள்ளியப்பி, காளி, சக்தி, நாகம் முதலிய தேவதைகளையும் சளுக்கியர் வணங்கி வந்தனர் [4].

மதவிரோதமில்லாமை.

அக்காலத்தில் வேறுபாடின்றிப் பலமதங்களையும் ஒருவன் அனுஷ்டிக்கலாம். ரூபபட்டையன் என்பான் கேசவன், லோகீசுவரன், பௌத்தன் முதலிய தேவர்களுக்குத் தானங்கள் கொடுத்தான் [5]. ஆகவமல்லன் தமக்கையான அக்காதேவி, ஜைன பௌத்த அநந்த ருத்திர ஆசாரங்கள் யாவும் அனுசரித்துவந்தாள் [6]. மண்டலேசுவரனான நாகவர்மன், ஜைன சிவ விஷ்ணு கோயில்களைக் கட்டினான் [7]. கொல்லாபுரத்து சிலாஹாரன் பெரியகுளமொன்று வெட்டி அதைச் சுற்றிலும் பௌத்த சிவ ஆருகத விக்கிரகங்களை நாட்டி அவைகளுக்குச் சரிவரப் பூஜை நடப்பதற்குப் பூதானங்களும் செய்தான் [8]. பலிநகரத்தில் பிரம விஷ்ணு சிவ ஜைன பௌத்த மதத்தினர் ஐவரும் தத்தம் மதக்கோட்பாடுகளில் தவறுதலில்லாமல் சண்டை சச்சரவின்றி இருந்தனர் [9]. ஒரு மதத்தைச் சார்ந்தவன் அதை விட்டு வேறு மதங்களைத் தழுவுதலும் உண்டு. ஜயசிங்கன், மனைவி சுகலேயின் போதனையால் சைவமதத்தை விட்டு ஜைனனாயினான். ஹொய்சள பிட்டிதேவனென்பான் வைணவ சமயகுரவரான இராமானுஜரு

1. Ind. Ant. XIV.
2. Epi. Car. VII. Sk. 136.
3. Epi. Car. VII. Sk. 170.
4. Epi. Car. VII. Sk 98, 107. 323; XI. Dg. 128; Epi. Ind. III. 230.
5. Epi. Car. VII. Sk. 170.
6. Ind. Ant. XVIII. 271.
7. Ind. Ant. IV. 179.
8. J. B. R. A. S. XIII. 4.
9. Epi. Car. VII. Sk. 100; VIII. Sb. 277.

டைய பிரசங்கங்களால் வைணவ மதத்தைத் தழுவி விஷ்ணுவர்த்தனன் என்னும் பெயரைப் பூண்டான்.

அந்நூற்றுண்டில் பௌத்த மதம் ஒருவாறு க்ஷீணதசையிலிருந்ததென்றே சொல்லலாம். ஜைனமதமும் அத்தன்மையதே. திரிமூர்த்திகளின் ஆராதனை மட்டும் மேலோங்கியிருந்தது. அவைகளிலும் முக்கியமாகச் சைவம் முதன்மைப்பட்டிருந்தது. ஆனால் அக்காலத்தில் உள்ளன்பு குறைந்து பலவேறுபட்ட போலியாசாரங்கள் அதிகரித்தமையால் அச்சைவமும் ஒருவாறு சீர்திருத்தம் செய்யவேண்டிய நிலைமையிலிருந்தது. அது பற்றியே பின்னிட்டுப் பசவன் நாளில் லிங்காயதமதம் ஏற்படலாயிற்று.

ஆகவமல்லன் பலயாகங்களைச் செய்ததாகப் பில்ஹணர் கூறுகிறார்.

**ஆசாரங்கள்.** அஹிச்சத்திரத்திலிருந்து தானகுண்டிக்கு வந்த முப்பத்திரண்டாயிரம் பிராமணர்கள், அக்கினிஹோத்திரங்களைச் செய்தனரெனவும், பலநதிகளிலும் பஞ்சலிங்க தீர்த்தத்திலும் ஸ்நானம் செய்தனரெனவும் விஸ்தாரமாகச் சாசனங்களில் கூறப்பட்டிருக்கின்றனர். வீடுகள் தோறும் தேவார்ச்சனையும், சாலக்கிராம பூஜையும் நடந்து வந்தன. உபவீதமானது யஜ்ஞஞ்செய்யும் வேளையில் மட்டுமேயன்றி எப்போதும் தரிக்கப்பட்டு வந்தது. அக்காலத்துத் துவிஜர்கள் பாரசீகரைப்போலப் பூணூலை இடுப்பில் கட்டவில்லை. தற்காலத்துத் தென் தேசத்துப் பிராமணரைப்போல ஒருபுறமாகத் தோளின்மேல் தரியாமல் தாழ்வடமாகப் போட்டுவந்தனர் [1].

**மதவிஷயமான தானங்கள்.** இராஜாங்க உத்தியோகஸ்தரும், வர்த்தகக் கூட்டத்தாரும், மகாஜன சபையோரும், மகளிரும், சந்நியாசிகளும் பலதானங்களைச் செய்தனர். சில நிலங்கள் சர்வமான்யமாக விடப்பட்டன. அவற்றுக்கு சர்வாப்யந்தரசித்தி என்று பெயர். ஒருவனுக்கே கொடுத்த தானம் ஏகபோக்கியமெனப்படும். பலர் சேர்ந்து அனுபவித்தற்குரியதாயின், கணபோக்கியம் எனப்படும் [2]. ஒருவன் கொடுத்த தானத்தை அவன் சந்ததியார் நிறுத்திவிடுதல் சட்டப்படி கூடுமென்றாலும் பாவத்திற்கஞ்சி அவ்வாறு செய்வதில்லை.

---

1. விக். சரி.
2. Ind. Ant. XIX. 271.

கோயில்களின் அமைப்பு.

சளுக்கிய கோயில்கள் வட இந்தியக் கோயில்களைப்போலக் குவிந்த சிகரத்தை யுடையனவாயும், தென்தேசத்துத் திராவிடக்கோயில்களைப்போல் அடி பருத்துப் படிப்படியாக மேலே செல்லச் செல்லக் குறுகியுமிருந்தன. சளுக்கியராஜ்யம் வடஇந்தியாவுக்கும் தென் இந்தியாவுக்கும் மத்தியிலிருந்ததால் அந்நாட்டுக் கோயில்களின் அமைப்பு வடஇந்திய தென்இந்திய கோயில்களின் மாதிரிகளை ஒருவாறு தழுவி இருந்தது [1]. ஆயினும் அவைகளுக்கு மாருக சளுக்கிய கோயில்களில் மத்தியில் விசாலமான மண்டபங்களும் கல்ஜன்னல்களும் காணப்படும். சித்திரவேலை செய்வதற்கு ஏற்றதான ஒருவித சலவைக் கல்லால் கோயில்கள் கட்டப்பட்டன [2]. அக்காலத்துச் சித்திரவேலை அபூர்வமான வேலைப்பாடு உள்ளதென்றும் அதைச் சரிவர விவரிப்பதற்கு இயலாதென்றும் கர்னல் மெடோஸ் டெய்லர் (Col. Meadows Taylor) சொல்லியிருக்கிறுர். மைசூர் கன்னடதேசங்களிலும் துங்கபத்திரைக் கரையிலும் அவ்வித கட்டிடங்களைக் காணலாம். அம்மாதிரி கட்டிடம் ஆரம்பித்தது தார்வார் ஜில்லாவிலேயாம். உன்னத நிலைமையை அடைந்தது மைசூர் மாகாணத்திலே. முக்கியமாக துவாரசமுத்திரம் என்ற தேவபுரி (ஹளேபீடு) யிலுள்ள இரட்டைக் கோயிலே அவ்வமைப்புக்கு அழியாச் சான்ருகும் [3].

## iv. குடியியல்.

சளுக்கியரின் குணவிசேஷங்கள்

சளுக்கியநாட்டுக்குடிகள் ஆஜானுபாகுவாய் நன்னடக்கையும் அமைதியு முடையவர்கள் [4]. உப்பிட்டவரை உள்ளளவும் நினைக்குந் தன்மையர். விரோதிகளைத் தண்டியாமல் தப்பவிடார். யாரேனும் அவருக்கு மானக்கேடு விளைவித்தால் அதைத் தீர்க்கத் தங்கள் உயிரையும் விடத்துணிவர். 'பழியொடு வாழ்வதிற் சாவது

1. Fergusson's History of Indian and Eastern Architecture.
2. Rae's Chalukyan Architecture.
3. Monuments of Central India.
4. யுவான் சுவாங்கின் குறிப்பு.

சாவநைன் றென்று' போர்க்களத்திற்கு, சோழவீரராஜேந்திரனை மீண்டும் அழைத்த ஆகவமல்லன் ஒரு அத்தாட்சியாவன்[1]. பிறருக்கு இடுக்கண் நேர்ந்தவிடத்து, விரோதிகளாயினும் சுயநலம் கருதாது அவருக்கு உதவி செய்ய விரைந்து செல்லுவர். போஜனிறந்த பிறகு மாளவதேசத்து அரசனை ஜயசிங்கன் பகைவரால் தாக்கப்பட்டுத் தன் நாட்டைவிட்டு ஓடும்படி நேரிட்டபோது விக்கிரமாதித்தன், தானும் தன் தந்தையுமாக, அவனுக்குதவிபுரிந்து இராஜ்யத்தை மீட்டுக் கொடுத்தது இதற்கொரு மேற்கோளாகும்[2]. சளுக்கியர் எதிரிகளிடம் அஞ்சாநெஞ்சினராய்த் தலைவணங்காச் சுபாவமுடையவராயிருந்தனர்.

**பெண்டிர்.** குந்தளதேச மகளிர் பாதங்களிற் சிலம்புகளும், விரல்களில் மோதிரங்களும், கழுத்தில் ஒற்றைவட முத்துமாலையும் (ஏகாவலி), காதிற் குண்டலங்களும் அணிந்திருந்தனர். குங்குமந்திமிர்ந்து மஞ்சனமாடி சந்தனம் பூசி நெற்றியிற் கஸ்தூரிப் பொட்டிட்டுக் கூந்தலுக்குக் கிருஷ்ணகரு என்னும் வாசனைத் தைலம் தடவிக் கூந்தலின் ஒரு பகுதியைச் சுருள்சுருளாக நெற்றியின்மேல் தொங்கவிட்டுச் சிரசில் புஷ்பம் தரித்துப் பலவிதமாக அலங்கரித்துக் கொண்டார்கள். இடையிற் கச்சமில்லாத பாவாடையும் அதன்மேல் ஒருவித கஞ்சுகமும் உடுத்தி வந்தனர்[3].

**அரசரின் பொழுது போக்கு.** அரசர்கள் யானையேற்றம், குதிரையேற்றம், ஆயுதப்பயிற்சி, மல்லயுத்தம், கோழிச்சண்டை, வேட்டைநாய் வளர்த்தல், பொழில் நீர் வரை செய்குன்று முதலிய விளையாடல், சங்கீதம், நாட்டியமாகிய இவைகளில் விநோதமாகக் காலங்கழித்து வந்தனர்[4]. குலோத்துங்கசோழன் 'கலையினொடுங் கவிவாணர் கவியினொடு மிசையினொடுங் காதன்மாதர், முலையினொடு மனுநீதி முறையினொடு மறையி

1. S. I. I. III. No. 30, மணிமங்கலசாசனம்.
2. பக்கம் 21, 22 பார்க்க.
3. விக். சரி.
4. அபிலஷிதார்த்தசிந்தாமணி.

ளுடும் பொழுது போக்கினதாகக் கலிங்கத்துப்பரணியில்[1] சொல்லியிருப்பதும் ஈண்டுக் கவனிக்கத்தக்கது.

ராணிகளுக்கு அங்கபோகமாக மாகாணங்கள் விடப்பட்டன. பிரதிநிதிகளைக்கொண்டாவது தாங்களேயாவது அம்மாகாணங்களை ஆண்டுவந்தனர். அவர்களில் உயர்ந்த அரசிக்கு அக்ரமஹிஷி, பட்டராணி, பேரரசி என்று பெயர். ஆகவமல்லன் பட்டமங்கையர் மயிலாதேவி ஹொய்சள தேவியென்பார்[2]. விக்கிரமாதித்தன் பட்டராணிகள் சந்திரலேகா லக்ஷ்மதேவி என்பவர்கள்[3]. லக்ஷ்மதேவி அரசனைப்போலத் தானும் அதிகாரம் செலுத்தி வந்தாள். ஒரு தண்டநாயகன் 'சந்தலதேவியின் மதயானை' எனப் பேர் பெற்றான்[4]. இஃது அரசிகளுக்குப் போரிலிருந்த விருப்பத்தை நன்கு விளக்குகிறது.

அரசியரின் சிறப்பு.

உயர்குலத்து மகளிரும் ராணிகளும் தத்தம் கணவரோடு வேட்டைக்கும் போர்க்களத்திற்கும் செல்லுவதுண்டு. ஜயசிங்கனது சகோதரியும் ஆகவமல்லன் அத்தையுமான அக்காதேவி, கிசுக்காடு எழுபதை ஆண்டுவந்தனள். கலகத்தையடக்கக் கொக்ககே என்னும் கோட்டையை அவள் முற்றுகை போட்டாள்[5]. கெல்ட் ஜாதியைச் சேர்ந்த போயடிசியாவைப் (Boadicea) போலவும், ஸ்பெயின்தேசத்து ஸாரகோஸாவைப் (Saragossa) போலவும் அவள் போர்த்திறத்தில் நன்கு தேர்ந்தவள். சண்டையில் பைரவியென்றும் குணக்கடல் என்றும் சொல் தவறுதவள் (ஏகவாக்கி) என்றும் சாசனத்தில்[6] கூறப்பட்டிருக்கிறாள். சோழநாட்டிலும் இவ்வழக்கம் உண்டு என்பது 'பிடியின் மேல்வரு பிடிக்குல மநேக மெனவே, பெய் வளைக் கைமட மாதர் பிடி மீதின் வரவே' என்னும் கலிங்கத்துப்பரணி செய்யுளால் தெரிகிறது[7]. மகளிர் ஆடல் பாடல் சித்திரம் வரைதல் முதலியவைகளில் நன்கு

1. X. 46.
2. Epi. Car. VII. HI. 1.
3. Bom. Gaz. IV. 438.
4. Epi. Rep. 1916
5. Rom. Gaz. IV. 435.
6. Ind Ant. XVIII. 271.
7. X. 56.

தேர்ச்சியடைந்திருந்தனர். பிராகிருதபாஷை பயின்றதோடு சிலர் சம்ஸ்கிருதமும் பேசவல்லராயிருந்தனர். காஸ்மீர தேசத்தரசன்கீழ் ஒரு ஸ்திரீ ராஜ்பமே இருந்ததாகக் கேள்வியுறுகிறோம்[1]. ஆகையால், பெண்டிர் படிப்பும் சுவதந்திரமும் போர்த்திறமையும் நற்குணமும் பொருந்தியிருந்தனர் என்பது அறியலாகும்.

ஜீவகாருண்யம்

அக்காலத்தில் ஜீவகாருண்யம் விசேஷித்திருந்ததென்று சொல்லலாம். ஓடிக்களைத்த குதிரைகளுக்கு மதிரா என்னும் ஒருவகை மது கொடுக்கப்பட்டது. சண்டைக்குச் செல்லும்போது அவைகளுக்குக் கவசம் போடுவதுண்டு[2].

உற்சவாதிகள்.

இளவேனிற்காலத்தில் ஆடவரும் மகளிரும் இளையரும் முதியோருமாகப் பலரும் சேர்ந்து பாடிக் களித்து டோலோற்சவம் என்னும் ஊஞ்சல் திருவிழாவைக் கொண்டாடினர்கள்[3]. அவ்வுற்சவம் இப்போதும் கஞ்சம் விசாகப்பட்டணம் ஜில்லாக்களில் நடந்து வருகிறதென்று தெரிகிறது. பிரமனுக்குப் பிரீதியாகச் செடில்குத்தும் திருவிழா ஒன்று நடைபெற்று வந்ததென்று சாசனத்தில்[4] சொல்லப்பட்டிருக்கிறது. அவ்விழாவில் செடில் என்னும் கொக்கியினால் ஒருவனை முதுகிற் குத்தி மற்றொருவன் சுழற்றுவது வழக்கம்.

கல்வி மேம்பாடு.

சகல சாஸ்திரங்களும் அந்நாளில் பாடசாலைகளில் அப்பியசிக்கப்பட்டு வந்தன. பேகூர் அக்கிரகாரத்திலிருந்த 1200 பிராமணர்கள் சாங்கோபாங்கமாக நான்கு வேதங்களையும், நியாய வைசேஷிக மீமாம்ச லோகாயத பௌத்தாகமங்களையும் சகல சாஸ்திரங்களையும் பதினெட்டு ஸ்மிருதிகளையும் புராணங்களையும் காவியங்களையும் அவற்றின் வியாக்கியானங்களோடு கற்றுத்தேர்ந்தவரென்று சொல்லப்பட்டிருக்கிறார்கள்[5]

1. விக். சரி.
2. விக். சரி.
3. விக். சரி.
4. Epi. Car. VII. Sk. 246.
5. Epi. Çar VII. Sk. 16.

ஷிகார்பூர் சாசனத்தில் [1] லாகுலசமயத்தை ஸ்தாபித்த லாகுலீசுவரப் பண்டிதர், வாதத்தில் எதிர்த்தவருடைய மண்டையைப் பிளப்பதில் சிங்கமென்றும், பௌத்தசாகரத்திற்குக் காலாக்கினியென்றும், லோகாயத சாங்கிய அத்வைதமதத்தினருக்கு அத்தியந்தசத்துருவென்றும் புகழப்பட்டிருக்கிறார். மல்லிதேவன் என்னும் மல்லிகார்ஜுன சோமேசுவரபண்டிதர் தாரணசர்வபௌமரென்றும் (ஞாபகசக்தியில் இணையற்றவர்), 'ஆதிபட்டுகவி' என்றும், ஆயிரக்கணக்கான கதைகளைக் கேட்டவுடனே திருப்பிச் சொல்லும் அவதானியென்றும், ஆசுகவியென்றும், கணிதசாஸ்திரநிபுணர் என்றும் சொல்லப்பட்டிருக்கிறார் [2]. ஆகவமல்லன் சோமேசுவரன் விக்கிரமாதித்தன் ஆகியமூவரசர்காலத்திற் சேனாதிபதியும் சந்திவிக்கிரகியும் பரம ஆப்தருமாயிருந்த ரவிதேவனென்பவர் நியாய வியாகரண சாஸ்திரபாரங்கதரென்றும் சங்கீதப்பயிற்சியில் இணையற்றவரென்றும் புகழ்ந்து சொல்லப்பட்டிருக்கிறார் [3]. தருமசாஸ்திரங்கள் பலவிடங்களிலும் சிதறி ஒன்றுக்கொன்று முரண்பட்டிருந்தனவாகையால், அவற்றை ஒருங்கு சேர்த்து ஒழுங்குபடுத்த அக்காலத்திற்றான் முதலில் முயன்றார்கள். ஸ்மிருதிகளுக்கு வியாக்கியானமாகப் பல நிபந்தங்கள் எழுதப்பட்டன. அவைகளில் முக்கியமான விஞ்ஞானேசுவருடைய மிதாக்ஷரமேயாம். அது மகரிஷி ஸ்ரீ யாஜ்ஞவல்கியருடைய ஸ்மிருதியின் வியாக்கியானம். அதைப்பின்பற்றியே அடுத்த நூற்றாண்டுகளில் ஹேமாத்திரி சாயணு என்றவர்கள் தருமசாஸ்திரத்தை ஒழுங்குபடுத்தினர். மேற்கண்ட உதாரணங்களால் அக்காலத்தில் கல்வி யதிகரித்து உன்னத நிலையிலிருந்ததென்பது நன்கு விளங்கும்.

சளுக்கிய விக்கிரமாதித்தன் சரித்திரம் முற்றிற்று.

---

1. Epi. Car. VII. Sk. 126.
2. Epi. Car. VII. Sk. 98, 99.
3. Epi. Ind. XII. 287, எவூர்சாசனம்.

# அநுபந்தம் I.

## பின்சளுக்கிய வமிசாவளி.

1. தைலபன்
(கி. பி. 973-999.)

2. சத்தியாசிரயன்
(கி. பி. 997-1008)

தசவர்மன்

3. விக்கிரமாதித்தன் v.
(கி. பி. 1009-1014)

4. ஐயணன் ii.
(கி. பி. 1014)

5. ஜயசிங்கன்
(கி. பி. 1015-1042)

6. ஆகவமல்லன்
cr
சோமேசுவரன் i.
(கி. பி. 1042-1068)

7. சோமேசுவரன் ii.
(கி. பி. 1068-1076)

8. விக்கிரமாதித்தன் vi.
(கி. 1076-1127)

ஜயசிங்கன்

9. சோமேசுவரன் iii
(கி. பி. 1127-1138)

# அநுபந்தம் 2.

## சற்றேறக்குறைய ஒரே காலத் தாண்ட முக்கிய அரசரின் குறிப்பு.

| பரமாரர். | மேலைச்சளுக்கியர். | சோழர். | கீழைச் சளுக்கியர். |
|---|---|---|---|
| முஞ்சன் (கி. பி. 994)<br>சிந்துராஜன் (கி. பி. 994-997) | தைலபன் (கி. பி. 973-997) | ராஜராஜன் i (கி. பி. 985-1013) | |
| | சத்தியாசிரயன் (கி. பி. 997-1008) | | |
| | விக்கிரமாதித்தன் v.<br>(கி. பி. 1009-1014) | ராஜேந்திர சோழன் i or<br>கங்கைகொண்ட சோழன்<br>(கி. பி. 1012-1042) | விமலாதிததன்<br>(கி. பி. 1015-1022) |
| | ஜயணன் ii (கி. பி. 1014) | ராஜாதிராஜன்<br>(கி. பி. 1018-1053) | |
| போஜன் (கி. பி. 997-1052)<br>ஜயசிங்கன் (கி. பி. 1054) | ஜயசிங்கன் (கி. பி. 1015-1042) | | |
| | ஆகவமல்லன் or சோமேசுவரன் i<br>(கி. பி. 1042-1068) | ராஜேந்திரதேவன்<br>(கி. பி. 1052-1062)<br>(ராஜமகேந்திரன் (1062-1063)<br>வீரராஜேந்திரன்<br>(கி. பி. 1063-1070) | ராஜராஜன்<br>(கி. பி. 1022-1062) |
| | சோமேசுவரன் ii<br>(கி. பி. 1068-1076) | அதிராஜேந்திரதேவன்<br>(கி. பி 1070) | ராஜேந்திரசோழன்<br>(கி. பி. 1062-1070.) |
| உதயாதித்தன்<br>(கி. பி. 1059-1090) | விக்கிரமாதித்தன் vi<br>(கி. பி. 1076-1127) | ராஜேந்திரசோழன் ii or குலோத்துங்கன்<br>(கி. பி. 1070-1119) | |

18049

# அநுபந்தம் 3.

## பின் சோழ வமிசாவளியும் சளுக்கியர் சம்பந்தமும்

1. ராஜராஜன் i (கி. பி. 985-1013)
   - விமலாதித்தன் = குந்தவ்வை (கி. பி. 1015-1022) [கீழைச்சளுக்கி]
     - ராஜராஜன் = அம்மங்கதேவி
       - ராஜேந்திரசோழன் ii (கி. பி. 1062-1070) or 8. குலோத்துங்கன் = மதுராந்தகி (கி. பி. 1070-1119)
   - 2. ராஜேந்திரசோழன் i or கங்கைகொண்ட சோழன் (கி. பி. 1012-1042)
     - அம்மங்கதேவி
     - 3. ராஜாதிராஜன் (கி. பி. 1018-1053)
     - 4. ராஜேந்திரதேவன் (கி. பி. 1052-1062)
       - மதுராந்தகி
     - 5. ராஜமஹேந்திரன் (கி. பி. 1062)
     - 6. வீரராஜேந்திரன் (கி. பி. 1063-1070)
       - 7. அதிராஜேந்திர தேவன் (கி. பி. 1070)
       - பெண் = மேலைச்சளுக்கிய விக்கிரமாதித்தன் (கி. பி. 1076-1127)

# BOOKS CONSULTED

1. *Bilhana's* Vikramankadevacharita (*Sanskrit*), *and Dr. Buhler's* edition of the same with introduction and notes.
2. Indian Antiquary (*Ind. Ant.*)
3. Epigraphia Carnatica (*Epi. Car.*)
4. Epigraphia Indica (*Epi. Ind.*)
5. South Indian Inscriptions (*S.I. I.*)
6 *Rice's* Mysore and Coorg 1rom 1nscriptions.
7. Journal of the Royal Asiatic Society, London, (*J.R A S.*)
8. Journal of the Royal Asiatic Society, *Bombay Branch.*
9. Journal of the SouthIndian Association (*J.S.I A*) [(*J.B.R.A.S.*)
10. *Rice's* Mysore Gazetteer.
11. Madras Journal of Literature and Science.
12. Government Epigraphist's Reports (*Epi. Rep.*)
13. *Jayankondar's* Kalingattupparani (*Tamil.*)
14. *Ottakkuttar's* Vikkiramacholanula ( *Do.* )
15. *Kalhana's* Rajatarangini (*Sanskrit.*)
16. *Dr. Fleet's* Kanarese Dynasties.
17. Bombay Gazetteer (*Bom. Gaz*) *Vol. 1, Part. II.*
18. *Dr. Bhandarkar's* Early History of Dekkan.
19. *Dr. V. A. Smith's* Early History of India.
20. *Dr. S Krishnaswamy Ayyangar's* Ancient India.
21. *Dr. Ojah's* History of the Solankis (*Hindi.*)
22. *M Raghavayyangar's* Velirvaralaru (*Tamil.*)
23. *T. A. Gopinatha Rao's* Cholavamsacharitram ( *Do.* )
24. *DrJouveau—Dubreail's* Ancient History of the Dekkan.
25. *Col. Tod's* Annals of Rajasthan.
26. *Colebrooke's* Essays, *Vol. II.*
27. *Rae's* Chalukyan Architecture.
28. *Fergusson's* History of Indian and Eastern Architecture.
29. *Fergusson's* Architecture in Dharwar and Mysore.
30. *Mabel Duff's* Chronology of India.
33. *Dr. Venkatasubbiah's* Some Saka Dates in 1nscriptions.
22. *Sewell's* List of Antiquities in the Madras Presidency.
33. *Dr. V. A. Smith's* Catalogue of Coins in the 1ndian Museum, [Calcutta.
34. *Sir Walter Ellios's* Coins of Southern 1ndia.
35. *Sewell and Dikshit's* 1ndian Calendar.
36. 1mperial Gazetteer, *Vol. II.*
37. *Yuan Chwang's* Travels.

PRINTED AT THE B. N. PRESS, MOUNT ROAD, MADRAS.